Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37
கதிர் : 226
ஞாயிற்றுக்கிழமை
10 ஜூலை 2022
ஆனி 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16+08
விலை: 60/=





"மே 9 மஹிந்த ஜூன் 9 பஸில் ஜூலை 9 கோத்தா நான் சொன்னது நடந்துட்டு பாருங்கோ..."

## நவாலிப் படுகொலை நினைவேந்தல் நேற்று

விரிவு - பக். 15

## ஜனாதிபதி மாளிகை வீழ்ந்ததும் வெடிகொளுத்தி கொண்டாட்டம்

வடக்கில் சம்பவம்

விரிவு - பக். 02

## தடைகள் வந்தால் வழிகள் பிறக்கும்

விரிவு - பக். 02

### இலங்கை வரலாற்றில் புதிய அத்தியாயம்

# மக்கள் கிளர்ச்சியால் துரத்தப்பட்டார் கோத்தா

## ஜூலை 13 பதவி விலகுகிறார்

மறைவிடத்தில் பதுங்கியிருந்து தகவல்

கொழும்பு, ஜூலை 10

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவர் மக்களின் பேரெழுச்சியால் – கிளர்ச்சியால் பதவியிலிருந்து துரத்தப்பட்டுள்ளார். தப்பியோடிய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மறைவிடத்திலிருந்து, கட்சித் தலைவர்கள் எடுக்கும் முடிவுக்கு கட்டுப்படுவதாகவும், ஜூலை 13 ஆம் திகதி பதவிவிலகவுள்ளதாகவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு தகவல் அனுப்பியுள்ளார். 15

## குட்டையைக் குழப்பும் பிரதமர் ரணில்

முன்னுக்குப் பின் முரணான அறிவிப்புகள்

கொழும்பு, ஜூலை 10

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது பதவி விலகல் தொடர்பில் முன்னுக்குப் பின் தெரிவித்து வரும் 02

## தற்காலிக ஜனாதிபதியாக சபாநாயகர் பதவியேற்பார்?

30 நாள்களில் புதிய ஜனாதிபதி தெரிவு
ஆண்டிறுதிக்குள் தேர்தல்
கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு

கொழும்பு, ஜூலை 10

ஜனாதிபதி கோத்தாபய மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இருவரும் பதவி விலகவேண்டும். தற்காலிக ஜனாதிபதியாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன பதவியேற்க வேண்டும் என்று கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் என்பன போராட்டக் 12

## வீழ்ந்தது ஜனாதிபதி மாளிகை கோத்தாபய தலைமறைவு!!!

சில மணிநேரத்திலேயே ஜனாதிபதி செயலகத்தையும் கைப்பற்றினர்

கொழும்பு, ஜூலை 10

தலைநகர் கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட ஆரம்பித்து 5 மணி நேரத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் வசம் வீழ்ந்தது. அதனைத்தொடர்ந்து முன்னேறிய போராட்டக்காரர் 15



## ரணிலின் தனிப்பட்ட வதிவிடம் தாக்கப்பட்டு தீவைத்து எரிப்பு

அலரிமாளிகையும் போராட்டக்காரர்கள் வசம்

கொழும்பு, ஜூலை 10

கொழும்பு - 7 இல் அமைந்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்துக்கு நேற்று இரவு தீ வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் பிரதமரின் உத்தியோக பூர்வ இல்லமான அலரிமாளிகையும் போராட்டக் 14


## கடற்படையின் கப்பலில் புறப்பட்ட குழுவினர் யார்?

விமானநிலையத்தினுள் வி.ஐ.பி. வாகன அணி

விரிவு - பக். 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டக்காரர்களுடன் கைகோர்த்த சீருடையினர்



ஜனாதிபதி மாளிகையை கைப்பற்றிய போராட்டக்காரர்கள், தமது செய்தியை ஜனாதிபதி மாளிகைக்குள்ளிருந்து பார்வையிடுகின்றனர்.

கொழும்பு, ஜூலை 10

கொழும்பில் நேற்று இடம்பெற்ற போராட்டத்தை தடுத்து நிறுத்த அழைத்து வரப்பட்ட பாதுகாப்புத் தரப்பினரே, போராட்டக்காரர்களுடன் இணைந்த சம்பவம் நேற்று அரங்கேறியது. ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் முன்பாக பாதுகாப்பில் ஈடுபட்ட சுமார் 20 இராணுவத்தினர், போராட்டக்காரர்களுடன் இணைந்து கொண்டனர்.

அதற்கு முன்னதாக மகரகமவில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும், கொழும்பில் எஸ்.ரி.எவ். சிப்பாயும் போராட்டக்காரர்களுடன் இணைந்து கொண்டனர்.

இதேவேளை- போராட்டத்தின் போது பொலிஸார் மேற்கொண்ட கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களை, கொழும்பிலுள்ள 5 நட்சத்திர விடுதியான கலதாரி ஹோட்டல் அரவணைத்தது. தமது விடுதியின் கதவுகளைத் திறந்து வைத்து, பாதிக்கப்பட்ட மக்களை உள்ளே அனுமதித்ததுடன் அவர்களது கண் எரிவைப் போக்குவதற்கு தண்ணீரும் வழங்கி உதவி செய்தது. (அ-ஒ-5)

(தொடர்புடைய செய்தி - பக்:7)

போராட்டக்காரர்களால்

## கட்டுநாயக்க செல்லும் வாகனங்கள் சோதனை

கொழும்பு, ஜூலை 10

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உள்ளிட்ட ராஜபக்ச குடும்பத்தினர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் ஊடாக தப்பிச் செல்ல முயற்சிப்பதாக வெளியான தகவலையடுத்து, கட்டுநாயக்கவுக்குச் செல்லும் அதிவேக நெடுஞ்சாலை மற்றும் பிரதான வீதிகளில் போராட்டக்காரர்கள் குவிந்தனர். அங்கு செல்லும் ஒவ்வொரு வாகனமும் போராட்டக்காரர்களால் சோதனையிடப்பட்டது. (அ-ஒ-இ)

## மொட்டிலிருந்து பறந்தார் பந்துல

கொழும்பு, ஜூலை 10

அமைச்சர் பந்துல குணவர்தன தனது அமைச்சுப் பதவிகள் மற்றும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்புரிமை ஆகியவற்றைத் துறந்து சுயேச்சை உறுப்பினராக நாடாளுமன்றத்தில் தொடரப்போவதாக நேற்று இரவு தெரிவித்தார். (அ-ஒ-இ)

## மின் தடைப்படவில்லை

கொழும்பு, ஜூலை 10

இலங்கை மின்சார சபையால் தினமும் நடைமுறைப்படுத்தப்படும் மின்வெட்டு நாடு முழுவதும் நேற்று பல இடங்களில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இரவுநேர மின் தடை நடைமுறைப்படுத்தப்படாது என்று நேற்று மாலை இலங்கை மின்சார சபை அறிவித்திருந்தது. (அ-ஒ-இ)

## ஹரின், மனுச பதவி விலகினர்

கொழும்பு, ஜூலை 10

உடன் நடைமுறையாகும் வகையில் தமது அமைச்சுப் பதவிகளிலிருந்து விலகுவதாக ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகிச் சென்ற மனுஷ நாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் அறிவித்துள்ளனர். சர்வகட்சி அரசாங்கத்தை அமைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அறிக்கையொன்றில் அறிவித்துள்ளனர். (ஒ-இ)

## ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்

கொழும்பு, ஜூலை 10

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட வீட்டுக்கு முன்னால் நேற்றிரவு இடம்பெற்ற போராட்டம் தொடர்பில் செய்தி சேகரித்துக் கொண்டிருந்த 'நியூஸ்பெஸ்ட்' ஊடகத்தின் ஒரு பெண் ஊடகவியலாளர் உட்பட 4 ஊடகவியலாளர்கள் பாதுகாப்புத் தரப்பினரால் மிக மோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர். தாக்குதலில் காயமடைந்த அவர்களை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதற்கும் பாதுகாப்புத் தரப்பினர் இடையூறு விளைவித்து தாக்குதல் நடத்தியுள்ளனர். (அ-ஒ-5)



தடைகள் வந்தால்...

'முழு நாடும் கொழும்புக்கு' என்ற தொனிப் பொருளில் நேற்றைய போராட்டத்தில் பங்கேற்பதற்காக மக்கள் பல்வேறு மார்க்கங்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

பொதுப் போக்குவரத்து செயலிழந்திருந்த நிலையிலும், மக்களின் போக்குவரத்துக்குரிய எரிபொருள் விநியோகிக்கப்பட்டிருக்காத நிலையிலும், மாற்று வழிகளைப் புதிதாகக் கண்டறிந்து போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஒவ்வொரு வாகனங்களிலும் நிரம்பி வழிந்தவாறு தேசியக் கொடியுடன் போராட்டத்தில் பங்கேற்றனர்.

ரயில் பெட்டிகள் ஒவ்வொன்றும் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. அத்துடன் பெட்டிகளின் மேலும் மக்கள் அமர்ந்து போராட்டத்தில் கலந்துகொண்டனர். ரயில் பாதைகளின் இருமருங்கிலும் நின்ற மக்கள், போராட்டத்தில் கலந்து கொள்ளச் செல்லும் மக்களை வெற்றியுடன் திரும்புமாறு வாழ்த்தி அனுப்பினர். (அ-ஒ-5)

ஜனாதிபதி மாளிகை...



ஜனாதிபதி கோத்தாபயவை போராட்டக்காரர்கள் துரத்தியடித்து ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் என்பவற்றைக் கைப்பற்றியவுடன் வடக்கின் பல பாகங்களிலும் இளைஞர்களால் வெடி கொளுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண நகரின் முக்கியமான சந்திகளில் நேற்று பி.ப. 3.30 மணியளவில் இளைஞர்கள் வெடி கொளுத்திக் கொண்டாடினர். அதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு நகரிலும் வெடி கொளுத்தப்பட்டது. கிளிநொச்சி - தருமபுரம் பகுதியில் வெடி கொளுத்தி இளைஞர்கள் கொண்டாடினர். (அ-ஒ-5-19-113)

குட்டையைக்...

கருத்துக்களால் அரசியல் அரங்கில் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

கட்சித் தலைவர்களின் கூட்டத்தில், சகல கட்சித் தலைவர்களும் ஜனாதிபதி கோத்தாபய மற்றும் பிரதமர் ரணில் இருவரும் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தினர். ஆனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

சகல கட்சித் தலைவர்களும் இணங்கியபோதும், ரணில் மாத்திரம் இந்த யோசனைக்கு இணங்கவில்லை என்ற தகவலை வெளிப்படுத்துவோம் என கட்சித் தலைவர்கள் தெரிவித்ததும், சர்வகட்சி அரசாங்கம் அமையும் என்றால் பதவி விலகத் தயார் என்று ரணில் குறிப்பிட்டார்.

சிறிது நேரத்தில் அந்த விடயம் சாரப்பட பிரதமர் அலுவலகம் செய்திக் குறிப்பை வெளியிட்டது. ஆனால் மீண்டும் ரணில் காணொலி ஒன்றை வெளியிட்டார். அதில் சர்வகட்சி அரசாங்கம் அமைந்து பெரும்பான்மையை நிரூபித்தாலே தான் பதவி விலகுவேன் என்று குறிப்பிட்டுள்ளார். ரணில் விக்கிரமசிங்கவின் இந்த முடிவால் கொழும்பு அரசியலில் குழப்பம் ஏற்பட்டுள்ளதுடன், ஜனாதிபதி பதவி விலகினாலும் அடுத்த கட்ட நகர்வுகள் தேக்கமடைந்துள்ளன. (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# 40 ஆயிரம் தொன் யூரியா வந்தடைவு

கொழும்பு, ஜூலை 10

இந்திய உதவித் திட்டத்தின் கீழ், 40 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரத்தை ஏற்றிய கப்பலொன்று கொழும்பு துறை முகத்தை நேற்றுமுன்தினம் வந்தடைந்தது.

உரத்தை இறக்கும் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இந்த உரம் இந்தியத் தூதரகம் ஊடாக விவசாய அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. இன்றுமுதல் இந்த உரம் பகிர்ந்தளிக்கப்படும் என்று விவசாய அமைச்சர் தெரிவித்தார். (ம)

# அடுத்தவாரமும் நாடெங்கிலும் பாடசாலைகளுக்கு விடுமுறை

கொழும்பு, ஜூலை 10

நாளைமறுதினம் ஜூலை 11ஆம் திகதி முதல் ஜூலை 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையான வாரத்தில் பாடசாலைகள் இடம்பெறாது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி நிலையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது. அதேநேரம், ஜூலை 18 ஆம் திகதி பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. (ம)

# 3,700 தொன் எரிவாயுவுடன் இலங்கை வந்தது கப்பல்!

கொழும்பு, ஜூலை 10

3 ஆயிரத்து 700 தொன் எரிவாயுவுடன் கப்பலொன்று நேற்று நள்ளிரவு கொழும்பை வந்தடைந்தது என்று லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று நள்ளிரவு நாட்டை வந்தடைந்த கப்பல்களுக்கு மேலதிகமாக தலா 3 ஆயிரத்து 700 மெற்றிக்தொன் எரிவாயுவுடன் மேலும் இரண்டு கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளன. ஒரு கப்பல் நாளையும், மற்றைய கப்பல் எதிர்வரும் 16ஆம் திகதியும் நாட்டை வந்தடையவுள்ளன. (ம)

# எரிபொருள் பிரச்சினை: தீர்வாக கரி உற்பத்தி!

கொழும்பு, ஜூலை 10

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் மற்றும் எரிவாயுப் பிரச்சினைக்கு நடைமுறைத் தீர்வாக, அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் கரி உற்பத்தி செயன்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மரக் கூட்டுத்தாபனத்தால் அப்புறப்படுத்தப்படும் மரக் கழிவுகளைப் பயன்படுத்தி கரியை உற்பத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு அமைச்சர் மகிந்த அமரவீர வழங்கிய ஆலோசனைக்கு அமையவே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அரச மரக் கூட்டுத்தாபனத்தால் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கரியின் அறிமுகம் வனவிலங்கு மற்றும் வனவள அமைச்சில் அண்மையில் இடம்பெற்றது. இந்த மரக்கரியின் வெப்பத் திறன் மிகவும் சிறந்த முறையில் இருப்பதை தொழில்நுட்பக் கழகம் உறுதி செய்துள்ளது. (ம)

# எரிவாயு இனி அத்தியாவசியம்

கொழும்பு, ஜூலை 10


சமையல் எரிவாயுவை அத்தியாவசியப் பொருளாக அறிவித்து சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் நளின் பெர்னாண்டோ மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்தே இந்த வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. சமையல் எரிவாயு மக்களின் வாழ்வுக்கு இன்றியமையாதது என தாம் கருதுவதாகவும், நுகர்வோர் விவகார அதிகாரசபையின் ஆலோசனையின் பின்னர் இந்த நடைமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் நளின் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதி செயலகம் முற்றுகை



ஜனாதிபதி மாளிகைக்குள் போராட்டக்காரர்கள் ஊடுருவல்...









கிடைத்த வாகனங்களிலெல்லாம் கொழும்புக்கு படையெடுப்பு











Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதி செயலகத்தைச் சூழ்ந்த மக்கள் வெள்ளம்...












போராட்டக்களத்தில் கண்ணீர்ப் புகை ....






காலி டெஸ்ட் ஆட்டத்திலும் 'கோத்தா கோ ஹோம்'



ஜனாதிபதி மாளிகையின் நீச்சல் தடாகத்தில் இளைஞர்கள்



அரச படைகளின் அத்துமீறலுக்கு
எதிரான அரணாக
அருட்சகோதரிகள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதி மாளிகைக்குள் கும்மாளம்






தலைநகரில் மக்கள் வெறிச்சோடிய புறநகர்கள்








நேற்றையதினம் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள். கோட்டை ஜனாதிபதி மாளிகையைக் கைப்பற்றியதுடன், ஜனாதிபதி மாளிகையில் பறக்கவிடப்பட்டிருந்த ஜனாதிபதியின் கொடியை அகற்றி அதற்குப் பதிலாக கறுப்புக்கொடியை ஏற்றினார்கள். (ம)





தாய்மை எனும் பேராயுதம்





மெல்பேர்னிலும் 'கோத்தா கோ ஹோம்'



## ராசிபலன்

**மேடம்:** நீண்டநாள் முயற்சி ஒன்று நிறைவேறும். மகிழ்ச்சி அதிகரிக்கும். தம்பதி இடையே ஏற்பட்ட பிரச்சினை தீரும். சேமிப்பு கூடும். புதிய நண்பர்களிடம் உங்களது ரகசியங்களை பகிர்ந்து கொள்ளவேண்டாம்.

**இடபம்:** சொத்து விவகாரத்தில் ஏற்பட்ட பிரச்சினை முடிவுக்கு வரும். குழந்தைப் பாக்கியத்தை எதிர்பார்த்தவர்களுக்கு சுபச்செய்தி வரும். பழைய வழக்கு ஒன்று உங்களுக்கு சாதகமாகும்.

**மிதுனம்** : எதிர்பார்த்த பணவரவு உண்டு. பூர்வீக சொத்தில் ஏற்பட்ட சிக்கல் தீரும். பணியாளர்களின் ஒத்துழைப்புடன் வியாபாரத்தை விருத்தி செய்வீர்கள். தடை விலகும்.

**கடகம்:** முயற்சிகளில் தடை ஏற்படும். சில சட்ட சிக்கல்களை சந்திக்க வேண்டி வரும். குரு அருளால் சிந்தித்து செயற்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். அணுகுமுறையால் ஆதாயம் காண்பீர்கள்.

**சிம்மம்:** துணிச்சலுடன் செயற்பட்டு செயலில் லாபம் காண்பீர்கள். பிறரது விமர்சனத்தை ஒதுக்கிவைத்து செயற்படுவீர்கள். ஆதாயமான நாள். வெற்றி பெறுவீர்கள்.

**கன்னி:** திருமணத்துக்கு வரன் தேடி வந்தவர்களுக்கு எதிர்பார்த்த செய்தி வரும். வங்கியில் கேட்டிருந்த கடன் வந்து சேரும். சொத்து வாங்கும் [illegible] ஏற்பட்ட தடை விலகும்.

**துலாம்:** ஒரு முயற்சி நிறைவேறாமல் போகும். எதிர்பார்த்த ஒன்றில் தாமதம் ஏற்படும். உங்களைவிட்டு விலகிச் சென்றவர்களை தேடிச்சென்று சமாதானம் செய்வீர்கள்.சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினை தீரும்.

**விருச்சிகம்:** வரவுகள் அதிகரிக்கும் என்றாலும், திடீர் செலவுகளால் சங்கடம் அடைவீர்கள். உழைப்பின் வழியே செயல்களில் சாதகமான நிலையைக் காண்பீர்கள். புதிய வாகனம் வாங்குவீர்கள்.

**தனுசு:** எதிர்பார்த்த பணம் வரும். பழைய கடனை அடைப்பீர்கள். தொழிலை விரிவு செய்வீர்கள். உங்களது முயற்சிக்கு பணியாளர்கள் ஒத்துழைப்பு தருவர். நெருக்கடிகளை சரி செய்வீர்கள்.

**மகரம்:** புதிய வேலைக்காக முயற்சி செய்பவர்களுக்கு நல்ல வாய்ப்பு தேடி வரும். தொழிலை விரிவு செய்வதற்காக நீங்கள் எதிர்பார்த்த தொகை இன்று வந்து சேரும்.

**கும்பம்:** புதிய முயற்சி ஒன்று நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை ஏற்படும். சிரமம் அதிகரித்தாலும் உங்களது முயற்சியில் வெற்றி காண்பீர்கள். வரவேண்டிய பணம் இன்று மொத்தமாக வந்து சேரும்.

**மீனம்:** புதிய முயற்சிகள் இன்று வேண்டாம். செயல்கள் தாமதமாகும். பயணத்தைத் தவிர்ப்பது நல்லது. பணிகளில் கவனமுடன் செயற்படவும். உங்களது கவனக்குறைவால் சில சங்கடங்களைச் சந்திப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில் கட்டணங்களை செலுத்திய செல்வந்தர்



கொழும்பு, ஜூலை 10
கொழும்பில் நேற்று அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் கொழும்புக்குப் படையெடுத்தனர்.
நாட்டில் உள்ள எரிபொருள் நெருக்கடியால், போக்குவரத்து நெருக்கடிகளை மக்கள் எதிர்கொண்ட நிலையில், ரயில்கள் மூலம் அவர்கள் கொழும்புக்குச் சென்றனர்.
இந்தநிலையில் கண்டியில் இருந்து கொழும்பில் நடந்த போராட்டத்துக்கு பெரும் எண்ணிக்கையான மக்கள் சென்றிருந்த நிலையில், ரயிலுக்கான முழுக் கட்டணத்தையும் செல்வந்தர் ஒருவர் செலுத்தினார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
கண்டியில் இருந்து கொழும்புக்கு ரயில் பயணிக்காது என்று நேற்றுக்காலை அறிவிக்கப்பட்டிருந்த போதும், பொதுமக்களின் அழுத்தத்தை அடுத்து கொழும்புக்கு ரயில் சேவை நடத்தப்பட்டது என்று ரயில்வேத் திணைக்களத் தரப்புகள் தெரிவித்தன. (எ-இ)



# மக்களின் போராட்டத்துக்கு பொலிஸ் அதிகாரி ஆதரவு!

கொழும்பு, ஜூலை 10
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று இடம்பெற்ற போராட்டத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தார்.
மகரகமவில் இருந்து காலிமுகத்திடல் நோக்கிச் சென்ற மக்கள் கூட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அந்த அதிகாரி செயற்பட்டார்.
மோட்டார் சைக்கிளில் வந்த பொலிஸ் உத்தியோகத்தர் பொலிஸ் இலச்சினை பொறிக்கப்பட்ட தனது தலைக் கவசத்தை கழற்றி வீசி விட்டு மக்களின் ஆர்ப்பாட்டம் வெற்றியளிக்க வேண்டும் என்று குரல் கொடுத்தார்.
அதேவேளை, முன்னர் நடந்த மக்கள் ஆர்ப்பாட்டங்களில் பகிரங்கமாக ஆதரவு தெரிவித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-இ)

# எஸ்.ரி.எவ்வும் போராட்டத்தில் இணைவு




கொழும்பு, ஜூலை 10
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ள போராட்டத்தில் எஸ்.ரி.எவ். ஒருவர் சீருடையுடன் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்துள்ளார்.
இது தொடர்பான ஒளிப்படங்கள் நேற்று சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டுள்ளன. (எ-இ)

# "நானும் வந்திருப்பேன்" ரஞ்சன் ராமநாயக்கவின் பதிவு



கொழும்பு, ஜூலை 10
சிறைச்சாலையில் இருக்கும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க மக்களின் நேற்றைய போராட்டம் சம்பந்தமாக தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவு ஒன்றை இட்டுள்ளார்.
"சிறையில் இருக்கவில்லை என்றால் கட்டாயம் நானும் போராட்டத்துக்கு வந்திருப்பேன் தம்பி. மிகவும் துயரம். நான் போராட்டத்துக்கு வருவேன் என்று அறிந்துக்கொண்டதன் காரணமாக இவர்கள் என்னை முதலில் சிறையில் அடைத்தனர்" என அவர் அந்தப் பதிவில் தெரிவித்துள்ளார்.
தனது முகநூலில் மற்றுமொரு பதிவை இட்டுள்ள ரஞ்சன், "தம்பிமாரே இந்தப் பலத்துடன் என்னையும் விடுதலை செய்ய வெலிகடை சிறைச்சாலைக்கு வாருங்கள். இவர்கள் என்னை விடுதலை செய்ய மாட்டார்கள். இவர்கள் அனைவரும் திருடர்கள். இவர்கள் அனைவரும் நண்பர்கள் என நான் கூறியதால், என்னை நான்கு ஆண்டுகளுக்கு சிறையில் அடைத்துள்ளனர். நான் தற்போது ஒன்றரை ஆண்டுகள் சிறையில் கழித்துள்ளேன். நான் உங்களது போராட்டத்தில் ஒரு பங்காளி" எனப் பதிவிட்டுள்ளார்.
ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். (எ-இ)



கொழும்பில் நேற்று பெரும் ஆர்ப்பாட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில், ஆங்காங்கே பாதுகாப்புத் தரப்பினருக்கும், பொதுமக்களுக்கும் இடையே முறுகல் நிலைமை ஏற்பட்டது. பாதுகாப்புத் தரப்பினர் நீர்த்தாரைப் பிரயோகமும், கண்ணீர் புகைக்குண்டுத் தாக்குதலும் நடத்தினர். கண்ணீர் புகைக்குண்டுத் தாக்குதலில் பாதிப்படைந்த பெண் ஒருவருக்கு இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் தண்ணீர் வழங்கி உதவி செய்கிறார். (எ-இ)



# கொள்கலன் வாகனங்களிலும் கொழும்பு பயணித்த மக்கள்!

கொழும்பு, ஜூலை 10
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உடனடியாகப் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி நேற்று கொழும்பில் பெரும் போராட்டம் இடம்பெற்ற நிலையில், நாட்டின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் சாரை சாரையாகக் கொழும்பை நோக்கிப் படையெடுத்தனர்.
எரிபொருள் நெருக்கடி காரணமாக வாகன வசதிகள் இல்லாதிருந்த போதும், கிடைத்த வாகனங்களில் ஏறி மக்கள் கொழும்பு நோக்கிச் சென்றதைக் காணமுடிந்தது.
இந்தநிலையில், கொள்கலன் (கெண்டெய்னர்) வாகனங்களிலும் மக்கள் கொழும்பு நோக்கிப் பயணித்துள்ளனர். இது தொடர்பான ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டுள்ளன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கிக் கடனை செலுத்த முடியாதோருக்கு சலுகை

கொழும்பு, ஜூலை 10

**நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் வங்கிக் கடன்களைப் பெற்று அவற்றை செலுத்த முடியாதவர்களுக்கு சலுகை வழங்குவது தொடர்பில் மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.**

இதுதொடர்பில் மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்ததாவது:-

ஆறு மாதத்துக்கு இரு தடவைகளாகக் கடனை செலுத்துவதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். அதற்கிணங்க கடனை மீளச்செலுத்த ஆறு மாதகால சலுகை வழங்குவது, முறையான செயற்றிட்டத்தின் மூலம் வங்கிக் கடனை அறவிடுவதற்கு வழங்கப்பட்ட காலத்தை நீடிப்பது மற்றும் செயற்படாத கட னைச் செலுத்தவுள்ளோரின் பட்டியலில் உள்ளோர் புதிய கடன்களை பெற்றுக்கொள்ளும்போது கடன் தகவல் பிரிவில் சலுகையுடனான மதிப்பீடுகளை வழங்குதல் போன்றவற்றை வங்கிகள் மேற்கொள்ள வேண்டும் -என்றார். (ச-இ)

# தம்மிக்கவின் அமைச்சின் கீழ் மேலும் சில நிறுவனங்கள்

## ஜனாதிபதியால் வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஜூலை 10

அமைச்சர் தம்மிக்க பெரேரா தலைமையிலான முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் மேலும் சில நிறுவனங்கள் சேர்க்கப்பட்டு அதிவிசேட வர்த்தமானியை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளார்.

அதன்படி முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் ரக்னா செக்யூரிட்டி லங்கா லிமிடெட், செலந்திவா இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிடெட் மற்றும் ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) பிரைவேட் லிமிடெட் ஆகியவை கொண்டுவரப்பட்டுள்ளன.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் பொருளாதாரத்தை மீட்பதற்கான திட்டம் எதுவும் இல்லை என்பதால் அவர் நிதியமைச்சர் பதவியிலிருந்து விலக வேண்டும் என அமைச்சர் தம்மிக்க பெரேரா தெரிவித்ததன் பின்பே மேலும் சில நிறுவனங்களை அவரின் அமைச்சின் கீழ் ஜனாதிபதி கொண்டு வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# நூல் வெளியீடு



யாழ்ப்பாணம், ஜூலை 9

"தேசிய சமூக மட்டத்தின் அடுத்த கட்ட நகர்வுக்கு பல்கலைக்கழக மாணவர்களின் தன்னார்வ செயற்பாடுகளின் முக்கியத்துவமும் சமூகம் வேண்டிநிற்கும் ஆளுமைகளும்" எனும் கருப்பொருளில் யாழ். முஸ்லிம் மஜ்லிஸின் 9 ஆவது இன்கிலாப் சஞ்சிகை யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் ஸ்ரீ சற்குணராஜாவால் கைலாசபதி கலையரங்கில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வெளியிடப்பட்டது. (ய)



# தற்சார்பு பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் உதவித்திட்டம்

முல்லைத்தீவு, ஜூலை 10

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை கருத்திற் கொண்டு வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில், முல்லைத்தீவு - கைவேலி, மூங்கிலாறு, பிலக்குடியிருப்பு பகுதிகளில் தெரிவுசெய்யப்பட்ட 200 குடும்பங்களுக்கு மரக்கறிக் கன்றுகளும், விதை தானிய பைக்கட்டுக்களும் வழங்கப்பட்டன.

ஜேர்மனி தமிழ்க்கல்விக்கழகத்தின் புகைப்பட பிரிவின் நிதி அன்பளிப்பில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் க.விஜயகுமாரின் ஏற்பாட்டில் இந்த உதவித்திட்டம் வழங்கிவைக்கப்பட்டது. (ய-19)

## கொழும்பு நகரில்

# வர்த்தகப் பொருளாக மாறிய விறகுக்கட்டு

கொழும்பு, ஜூலை 10

பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டால் கொழும்பு நகரின் பிரதான வர்த்தகப் பொருளாக விறகுக் கட்டு மாறியுள்ளது.

கடந்த மாதங்களாக எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு இன்றி கொழும்பு வாழ் மக்கள் பெரும் இன்னல்களை எதிர்கொள்கின்றனர்.

இந்த நிலையில் தமது உணவை பெற்றுக்கொள்ள கொழும்பு மாடி வீடு உள்ளிட்ட ஏனைய மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் பலர் விறகு அடுப்புக்கு மாறியுள்ளனர். இந்த நிலையில் 4 அல்லது 5 விறகுகள் அடங்கிய கட்டு ஒன்றானது 70 ரூபாவுக்கு அங்கு விற்பனையாகின்றது. அத்துடன் சந்தைகளில் விறகுக் கட்டு ஒன்று 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. கிராமப்புறங்களில் வாழும் மக்கள் விறகுகளைத் துண்டுகளாக்கி பாரவூர்திகள் மூலம் கொழும்புக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்து வருகின்றனர். (ச-இ)

# தந்தை செல்வாவின் கனவு நனவாகும்

யாழ்ப்பாணம், ஜூலை 10

தந்தை செல்வாவின் கனவு எப்போதாவது ஒரு நாள் நனவாகும் என்று முன்னாள் ஆயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் தெரிவித்தார்.

முதுநிலை விரிவுரையாளர் அமரர் சகாயசீலன் எழுதிய "இலங்கையின் தமிழ் அரசியல் இயக்கங்களும் தமிழ்த் தேசியவாதமும்" என்ற நூல் வெளியீடு யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த மாதம் இடம்பெற்றது. நிகழ்வில் தலைமை தாங்கி உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமரர் சகாயசீலன் எழுதிய நூல் தந்தை செல்வாவின் வாழ்க்கைப் பணியை இளைய தலைமுறைக்கு ஞாபகப்படுத்த பயனுள்ளதாக அமையும்.

தந்தை செல்வா தமிழ் மக்களுடைய விடிவுக்காக தனது உடல், பொருள், ஆன்மா அனைத்தையும் அர்ப்பணம் செய்தவர். அவர் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் சமஷ்டி அமைப்பின் கீழ் இன்பமாக வாழவேண்டும் என்று கனவுகண்டார். ஆனால் இப்போது சந்தேக மேகங்கள் மூடி மறைத்தாலும் என்றைக்கோ ஒருநாள் தந்தை செல்வாவின் கனவு நிறைவேறும் என்பதில் ஐயமில்லை -என்றார். (ஒ-14)

# நெற்கதிர் அழிவடைவதற்கு முன்னர் அறுவடைக்கு எரிபொருள் தாருங்கள்

## விவசாயிகள் கோரிக்கை



கிளிநொச்சி, ஜூலை 10

நெற்கதிர் அழிவடைவதற்கு முன்னர் அதன் அறுவடைக்கு எரிபொருள் வழங்குமாறு கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள், மாவட்டச் செயலருக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கல்மடுக் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பயிர்ச்செய்கையின் அறுவடைக்கு விவசாயிகள் பலர் தயாராகி வருகின்றனர். இதனால் விரைவாக தமக்கு அறுவடைக்கான எரிபொருளைப் பெற்றுத்தர வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

தற்போது சிலரது வயல்கள் அறுவடை செய்ய வேண்டிய நிலையில் உள்ளன.

இந்த நிலையில் நெற்கதிர்கள் முற்றாக அழிவடைவதற்கு முன்னர் விவசாயிகளுக்கு எரிபொருள் வழங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் ஒரு ஏக்கர் பயிர்ச்செய்கை அறுவடை மேற்கொள்ள ஏற்படும் பணச் செலவு தற்பொழுது பலமடங்காக அதிகரித்துள்ளது.

எரிபொருள் கிடைக்காமையால் பல ஆயிரம் ரூபாவுக்கு ஒரு ஏக்கர் அறுவடை செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டில் தற்போது அரிசி விலையும் பலமடங்கு அதிகரித்து வருகின்றது.

எனவே அறுவடை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் விரைவாக எரிபொருள் வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-14-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசாங்கத்துக்கு எதிராக யாழ்ப்பாணத்திலும் போர்

கொழும்பு, ஜூலை 10

**ஜனாதிபதி மற்றும் பிரதமரை பதவிவிலகக் கோரி யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்துக்கு முன்பாகவும் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

யாழ் மாவட்ட வெகுஜன அமைப்புகள், தொழிற்சங்கங்கள், அரசியல்கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின் ஒரு பகுதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து யாழ். நகர் நோக்கி துவிச்சக்கரவண்டிப் பேரணியும் இடம்பெற்றது (ம-20.26)

# கர்ப்பிணிகளுக்கு நிவாரணப் பொதி

சாவகச்சேரி, ஜூலை 10

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த கர்ப்பிணிகளுக்கான ஏப்ரல் மாத நிவாரணப் பொதிகளை நாளைமறுதினத்துக்கு முன்னர் அவர்களுக்குரிய சங்கங்களில் பெற்றுக்கொள்ளமுடியும் என்று தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமாரன் தெரிவித்தார்.

கர்ப்பிணிகளுக்கான நிவாரணப் பொதிகள் கடந்த இரு வாரங்களாக தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகளிலும், சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைப் பரப்பில் உள்ளவர்களுக்கு சாவகச்சேரி கூட்டுறவு நகர் நிலையத்திலும், கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைப் பரப்பில் உள்ளவர்களுக்கு கைதடி கூட்டுறவு நகர் நிலையத்திலும் வழங்கப்பட்டு வருகின்றன.

நிவாரணப் பொதிகளை இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் நாளைமறுதினத்துக்கு முன்னர் அவற்றைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று அவர் அறிவுறுத்தியுள்ளார். (எ-9)



# உடைமையில் கஞ்சா: சுழிபுரத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 10

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுழிபுரம், நெல்லியான் பிரதேசத்தில் கஞ்சா உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த 52 வயதான ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கஞ்சா விற்பனை செய்ய முயன்ற சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத் தகவலின் அடிப்படையில், இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என பொலிஸார் தெரிவித்தனர். (எ-27.125)

# நெருக்கடியை பயன்படுத்தி பஸ் பயணிகளிடம் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 10

பொதுத் தற்போது காணப்படும் சன நெருக்கடியைப் பயன்படுத்தி திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். பஸ்களில் பயணிப்போர் தங்கள் கைபேசிகள் மற்றும் உடைமைகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும் என்று அறிவுறுதப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணித்த பஸ்ஸில் சென்ற முதியவர் ஒருவரின் பணப்பை (பேர்ஸ்) திருடப்பட்டுள்ளது. கொடிகாமத்தில் இறங்கிய முதியவர் உடனே அதை அறிந்து நடத்து நரிடம் தெரிவித்துள்ளார். அப்போது பணப்பை கீழே வீழ்ந்திருந்தது என்று தெரிவித்து ஒருவர் பணப்பையை ஒப்படைத்துள்ளார். சந்தேகத்தின் அடிப்படையில் அவர் எழுதுமட்டுவாழ் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பஸ்களில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில் பயணிகள் இது தொடர்பாக விழிப்புடன் செயற்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-9)



# டீசலை பதுக்கியவர் கோப்பாயில் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 10


கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் டீசலைப் பதுக்கிவைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் மாலை ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோப்பாய் மத்தியப் பகுதியில் டீசலை விற்பனை செய்வதாக கோப்பாய் பொலிஸ் சிறப்புப் படையணியினருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் மேற்படி நபரைக் கைதுசெய்தனர். அவரிடம் இருந்து 102 லீற்றர் டீசல் மீட்கப்பட்டது. (ம-125)

# மதுபான விற்பனை நிலையங்கள் பூட்டு

கொழும்பு, ஜூலை 10

நேற்று மாலை 5 மணி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நாட்டிலுள்ள அனைத்து மதுபான நிலையங்களையும் மூடுமாறு மதுவரித் திணைக் களம் அறிவித்துள்ளது.




மதுவரித் திணைக்க ளத்தின் ஆணையாளர் நாயகம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

இன்று மதுபான விற்பனைக்காக வழமையாக திறக்கப்படும் நேரம் வரையில் இந்த அறிவிப்பானது நடைமுறையில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# இராணுவத்தினரின் அத்துமீறலை நீதிமன்றில் பாரப்படுத்துக; சப்தகன்னிமார் ஆலய நிர்வாகம் பொலிஸாரிடம் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 10

வட்டுவாகல் - சப்தகன்னிமார் ஆலயத் தீர்த்தம் எடுப்பதற்கு. இராணுவத்தினர் குழப்பம் விளைவித்தமை தொடர்பிலும் இராணுவத்தினரின் அத்துமீறல் தொடர்பிலும் நீதிமன்றத்தில் விரைவில் பாரப்படுத்த வேண்டும் என்று ஆலய நிர்வாகம் பொலிஸாரைக் கோரியுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வட்டுவாகல் சப்தகன்னிமார் ஆலயத்துக்குத் தீர்த்தம் எடுக்கச் சென்றவேளை, அந்தப் பணிகளுக்கு ஆலய வளாகத்தில் முகாம் அமைத்துத் தங்கியுள்ள இராணுவத்தினரால் இடையூறு ஏற்படுத்தப்பட்டிருந்தது. இதையடுத்து இராணுவத்தினருக்கு எதிராக ஆலய நிர்வாகத்தினர் பொதுமக்களின் பெரும் ஒத்துழைப்புடன் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதையடுத்து இராணுவ முகாம் அங்கிருந்து அகற்றப்பட்டது. இராணுவத்தினரின் அத்துமீறல் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாரிடம் முறைப்பாடும் வழங்கப்பட்டது. இந்த முறைப்பாட்டின் மீதான பொலிஸ் விசாரணைக்காக முறையீட்டாளர்களும் ஆலய நிர்வாகத்தினரும் நேற்றுப் பொலிஸாரால் அழைக்கப்பட்டனர். இது தொடர்பான விடயங்களை நீதிமன்றத்தில் உடனடியாகப் பாரப்படுத்துமாறு முறைப்பாட்டாளர்கள் பொலிஸாரைக் கோரியுள்ளனர். (ம-246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணகை ஆலய வேட்டைத்திருவிழா

மிருசுவில், தவசிகுளம் கண்ணகை அம்பாள் ஆலய பெருந்திருவிழாவின் வேட்டைத் திருவிழா இன்று 10ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. கடந்த 29ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவரும் இந்த வருடாந்தப் பெருவிழாவில் எதிர்வரும் 12ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-9)

## கோப்பாய்
## மத்தியஸ்தர் சபை அமர்வுகள் வழமை

கோப்பாய் பிரதேச செயலக பிரிவு மத்தியஸ்தர் சபையின் அமர்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் மீண்டும் நடைபெறவுள்ளது.

மத்தியஸ்தர் சபையின் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பமாகி நடைபெறவிருப்பதால் கடந்த 26ஆம் திகதி மற்றும் 3ஆம் திகதி விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டவர்களை இன்று ஞாயிற்றுக்கிழமை சமுகமளிக்குமாறும் புதிய முறைப்பாடுகளை பதிவு செய்து கொள்ளலாம் எனவும் மத்தியஸ்தர் சபையின் தவிசாளர் இ.கிருஷ்ணபிள்ளை அறிவித்துள்ளார். (ம)

## சங்காபிஷேகம்

கொடிகாமம்,ஜூலை 10

மிருசுவில், துர்க்காபுரம் அருள்மிகு ஸ்ரீ ஞான துர்க்கை அம்மன் ஆலயத்தின் 32ஆம் வருட மணவாளக்கோல நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை காலை ஆலய பிரதம குரு சிவசிறீ நவரத்தினம் முகுந்தன் குருக்கள் தலைமையில் ஆயிரம் கலச சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது. (ச-159)

## பொதுக்கூட்டம்

கொடிகாமம், ஜூலை 10

கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் கடந்த 24ஆம் திகதி கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது பழைய மாணவர் சங்க உறுப்புரிமை பெற்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (ச-159)


## காணி விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் யாழ்நகரில் இருந்து 2 km தொலைவில் அராலி வீதியில் காணிகள் விற்பனைக்கு உள்ளன.

076 882 5259

(cs 45510) (2/6)

## Study in UK / Canada / Spain

BEVERLEY INTERNATIONAL

- IELTS தகைமை உள்ளவர்கள் அல்லது அற்றவர்கள்
- பகுதி நேர வேலைவாய்ப்பு
- புலமைப்பரிசு (Scholarships) உண்டு
- கல்வியின் பின் வேலை வாய்ப்பிற்கான விசா பெற்றுக்கொடுக்கப்படும் PSW
- PR பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள்
- சாதாரணக் கல்விக் கட்டணம்
- வங்கி பண வைப்பிற்கான வழிகாட்டல்

உடன் பதிவுகளுக்கு இன்றே எம்மை அழையுங்கள்!!!

மேலதிக தகவல்களுக்கு : 0776 929 773

பாத்திமா : 0706 697 660 | வேணுகா : 0718 517 994

**Beverley International**

Head Office - No. 3/5, 3rd Floor, Kollupitiya, Colombo - 03, Sri Lanka.
Tel : 0112 576 656
Jaffna Office - No. 401, Clock Tower Road, Jaffna. Tel : 021 22 10 277

## சொர்க்கம் திருமண சேவை

- 1984 இல் பிறந்த லண்டனில் வசிக்கும் உத்தராட நட்சத்திர பெண்ணுக்கு இலங்கையில் படித்த மணமகன் தேவை.
- 1993 இல் பிறந்த கனடாவில் வசிக்கும் பூர நட்சத்திர ஆணுக்கு உள்நாட்டில் படித்த பெண் தேவை.
- 1990 இல் பிறந்த அவிட்ட நட்சத்திர அரச உத்தியோகம் செய்யும் ஆணுக்கு பொருத்தமான படித்த நல்ல மணமகள் தேவை.

தொடர்பு: 001 416 666 1855
077 887 6969

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கப்பூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊரவேம்பு, சித்திரவேம்பு, சுமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவீ, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## இரசாயனவியல் வகுப்பு (Tamil / English)

A/L மாணவர்களுக்கான இரசாயனவியல் வகுப்புக்கள் தனியாகவோ, குழுவாகவோ கற்பிக்கப்படும்.

076 751 6379

## தொழிலாளர் ஒப்பந்தக்காரர்கள் தேவை

ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்டு இயக்கச்சியில் இயங்கி வரும் முருங்கை தோட்டத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் தோட்ட வேலைகள் செய்வதற்கு தொழிலாளர் ஒப்பந்தக்காரர்கள் தேவை.


- தரமான தொழிலாளர்களை தம் வசம் கொண்டுள்ளோர் நேரில் வந்து தொடர்பு கொள்ளவும் .
- வேலை அளவு ,ஒப்பந்த தொகை நேரில் பார்வையிட்ட பின் தீர்மானிக்கப்படும்.

Quick Ads

தொடர்புகளுக்கு
உதவி முகாமையாளர்,
வரையறுக்கப்பட்ட ஹெரிடேஜ் அக்ரி,
இயக்கச்சி. 077 1 188 361


## மறைவின் 31ஆம் நாள் நிறைவு

தோற்றம்
17 . 09 . 1979



மறைவு
10 . 06 . 2022

### அமரர் யூலின் ஆம்ஸ்ரோங் (லக்ஸன்)

*திங்கள் முகம் மறைந்து*
*திங்கள் ஒன்று நிறைந்ததுவே*
*எங்கள் அகம் இருண்டு*
*எங்கும் இருள் படர்ந்ததுவே!*

எனது ஒரே ஒரு உடன் பிறப்பான தம்பியின் இழப்பின் செய்தி அறிந்து எம் துயரில் எமக்கு உறுதுணையாய் எம் இல்லம் நாடி வந்து ஆறுதல் அளித்த பல்வேறு பணிநிலையினர், ஆன்மீக குருக்கள், கன்னியர், நண்பர்கள், உறவுகள் அனைவருக்கும் இருகரம் கூப்பி நன்றி கூறுகின்றோம்.

**பிரிவால் துயருறும்**

**திருமதி மருசினா அன்ரனி அமிர்தநாயகம் (அம்மா)**
(இளைபாறிய அதிபர் )
**கலாநிதி அ. லக்ஸினி விமலதாஸ் (அக்கா), அத்தான்,**
**மருமக்கள்**
**திருமதி யூலின் ஆம்ஸ்ரோங் நிறஞ்சலா (மனைவி),**
**பிள்ளைகள்**

(CS 19921) (3/6)


## கனடாவில் நிரந்தர குடியிருப்பை பெற விரும்புகின்றீர்களா?




இலங்கையில் உள்ள பிள்ளைகளை கனேடிய பாடசாலைகள் வரவேற்கின்றது.

- ☑ தாய், தந்தையுடன் செல்லலாம்.
- ☑ விசேட தகைமைகள் தேவை இல்லை.
- ☑ சொத்து மதிப்புக்கள் மட்டுமே அவசியம்.

பெற்றோர்கள் வேலை வாய்ப்பை பெற விரும்பினால் அங்குள்ள எமது சட்டத்தரணிகளை கலந்துரையாடலாம்.

மேலதிக தகவல்களுக்கு நேரில் வரவும் | முகவர்கள் தேவை இல்லை.

+94 112 890 692 +94 777 788 732

**Consolidated Academic Lanka (Private) Limited**
No.22-B, Station Lane, Nugegoda.
ceo@academiclanka.com / info@academiclanka.com
www.academiclanka.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நாளொரு நல்வார்த்தை

"எந்த அளவுக்கு நாம் பிறருக்கு நன்மை செய்கிறோமோ, அந்த அளவுக்கு நமது இதயம் தூய்மைப்படுத்தப் படும். தூய்மையான இதயம்தான் கடவுளின் இருப்பிடம்"- விவேகானந்தர்

## வேண்டும் முழுமையான மாற்றம்


இலங்கையின் வரலாற்றில் மிக முக்கியமான சம்பவம் நேற்று நடந்தேறியிருக்கின்றது. மக்கள் எழுச்சியின் முன்பாக எதுவும் தாக்குப்பிடிக்க முடியாது என்பது மீண்டுமொருமுறை நிரூபித்துக் காட்டப்பட்டிருக்கின்றது. நாட்டு மக்களின் விருப்பத்துக்கு மாறாக ஜனாதிபதி பதவியை இறுகக் கட்டிப்பிடித்தபடி இருந்த கோத்தாபய ராஜபக்ச, இலங்கையின் எந்த ஜனாதிபதியும் சந்தித்திருந்திராத அவமானத்தைச் சந்தித்ததோடு, தப்பித்தோடி தலைமறைவாகியுள்ளார்.

குடும்ப ஆட்சி, மலிந்த ஊழல் என ராஜபக்சக்கள் நாட்டைக் குட்டிச்சுவராக்கியதன் விளைவு இப்போது அடுத்த வேளை உணவுக்கு நாடுகளிடம் கையேந்தும் அளவுக்குக் கொண்டுவந்திருக்கின்றது. இதுவரை அரசியல் வாதிகளின் இனவாத – மதவாத சித்து விளையாட்டுக்குள் சிக்கியிருந்த பெரும்பான்மையின மக்களை இந்த நெருக்கடிதான் தட்டியெழுப்பியிருக்கின்றது. இதுவரை கதாநாயகர்களாகக் கொண்டாடியவர்களைத் தூக்கியெறிந்திருக்கின்றனர் பெரும்பான்மையின மக்கள்.

கொழும்பில் நேற்றுத் திரண்ட பல்லாயிரக்கணக்கான மக்கள், தடைகளைத் தாண்டி ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டுத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருக்கின்றனர். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இரகசிய இடத்தில் தஞ்சமடைந்திருக்கிறார். அவர் பதவியில் இருந்து விலகுவது உறுதியாகியிருக்கின்றது. நாட்டில் ஏற்பட்ட குழப்பத்தை அடுத்து நேற்றுமாலை அவசரமாகக் கூடிய சர்வகட்சித்தலைவர்களின் கூட்டத்திலும் 'கோத்தாபய, ரணில் இருவரும் பதவி விலக வேண்டும்' என்று ஏகமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த முடிவை ஏற்றுக்கொள்வதாக, பதவி விலகச் சம்மதம் தெரிவித்துள்ளார் கோத்தாபய. மக்களின் போராட்டத்துக்குக் கிடைத்த பெரும் வெற்றி இது என்பதை மறுப்பதற்கில்லை. எனினும் பதவி விலகத் தயார் என்றும், இல்லையென்றும் முரண்பட்ட தகவல்களை வெளியிட்டு குழப்பியடித்த ரணிலின் மீது மக்களின் கோபம் திரும்பியிருக்கிறது. விளைவு? நேற்றிரவு ரணிலின் பிரத்தியேக இல்லத்துக்கு போராட்டக்காரர்களால் தீவைக்கப்பட்டிருக்கிறது. அதனால் ரணிலும் விரைவில் மக்கள் சக்திக்கு முன் மண்டியிடுவார்.

இந்து சமுத்திரத்தின் முத்து என்று புகழப்பட்ட இலங்கை இப்போது இதுவரை ஆட்சி செய்தவர்களால் சிதிலமாக்கப்பட்டுள்ளது. இலங்கை இத்தகைய அவல நிலைக்குள் சிக்குவதற்கு தனியே ராஜபக்சக்கள் மட்டுமே காரணம் என்று முத்திரையிட முடியாது. கடந்த காலங்களில் ஆட்சி செய்த அனைத்து அரசாங்கங்களும், அதிகாரத்தில் இருந்தவர்களும் காரணம் என்பதே உண்மை. கடந்த காலங்களில் நாட்டைக் குட்டிச் சுவராக்கியவர்களே இப்போதும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர் – இனிமேலும் அங்கம் வகிக்கப் போகின்றனர்.

கோத்தாபய ராஜபக்சவையோ – ராஜபக்ச குடும்பத்தையோ அகற்றுவதோடு இந்த மக்கள் எழுச்சி தணிந்துவிடுமானால் மாற்றங்கள் எதுவும் நடந்துவிடப்போவதில்லை. நாடு எதிர்கொள்ளும் – மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தற்காலிகமாகத் தீர்க்கப்படலாம். ஆனால் அவை சில ஆண்டுகள் கழித்து மீண்டும் வெளிப்படும். நாடு நிலையான முன்னேற்றப்பாதை ஊடாகப் பயணிக்கவேண்டுமானால் அனைத்தும் மாற வேண்டும் – அனைவரும் மாற்றப்படவேண்டும். இந்த நாட்டின் அரசமைப்பு மாறவேண்டும். இனத்துவ நோக்கிலான பாகுபாடுகள் மாற்றப்படவேண்டும், எல்லோரும் இலங்கையர் என்ற எண்ண மாற்றம் ஏற்பட வேண்டும். சகலரும் சகலதையும் சமமாக அனுபவிக்கும் உரிமைமாற்றம் வேண்டும். அந்த மாற்றத்தை எட்டும் வரையில் மக்கள் போராட்டம் தணிந்துவிடக் கூடாது. வரலாறு ஒரேயொருமுறையே மாற்றங்களுக்கான சந்தர்ப்பத்தை வழங்கும். அது இப்போது இலங்கையர்களுக்குக் கிட்டியுள்ளது. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வார்களா?




சீரான எரிபொருள் விநியோகம்கோரி

## மாட்டுவண்டிலில் நோயாளருடன் மருத்துவர் சிவமோகன் போராட்டம்



**முல்லைத்தீவு, ஜூலை 10**

**கடந்த ஒரு மாதகாலமாக தமக்கு எரிபொருள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, மாட்டு வண்டிலில் நோயாளருடன் சேர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மருத்துவருமான சி.சிவமோகன்.**

சீரான எரிபொருள் விநியோகத்தை வலியுறுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் போராட்டமொன்றை முன்னெடுத்தனர். இந்தப் போராட்டத்தில் மருத்துவர் சிவமோகன் தன்னை இணைத்துக் கொண்டார். புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில் உள்ள முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இருந்து மாட்டுவண்டிலில் நோயாளர் ஒருவரை ஏற்றியவாறு கலந்துகொண்டார்.

இதன்போது மருத்துவர் சிவமோகன் தெரிவித்ததாவது:- தற்போது நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியால் மருத்துவத்துறை பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. உரிய நேரத்தில் மருத்துவமனைக்குக் கொண்டுவரப்படாமல் நோயாளர்கள் உயிரிழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அப்படி உயிரிழப்புக்கள் நிகழ்ந்தாலும் அதற்குப் பதில் சொல்வதற்குக்கூட எவரும் இல்லை. எங்களை பொறுத்தமட்டில்வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தனியாகத் தமிழர்களிடம் ஒப்படைத்தால் எரிபொருள் அல்ல சகலதும் கொண்டுவரக்கூடிய நிலைப்பாடு எங்களிடம் உள்ளது - என்றார். (ம-19)

## தான் பலவீனமானவர் என்பதை ஜனாதிபதி உறுதிப்படுத்தினார்

*சோபித தேரர் கடும் காட்டம்*

கொழும்பு, ஜூலை 10

தான் பலவீனமான தலைவர் என்பதை பொலிஸ் ஊரங்குச் சட்டத்தின் வழியாக ஜனாதிபதி பல தடவைகள் நிரூபித்துவிட்டார் என்று ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கு எதிராக கொழும்பில் மாபெரும் மக்கள் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தை வலுவிழக்கச் செய்யும் வகையில் பொலிஸ் ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்கு அரசியல் தலைவர்கள், சமயத் தலைவர்கள் பலரும் தமது கண்டனத்தைத் தெரிவித்தனர். ஓமல்பே சோபித தேரரும், 'ஜனாதிபதி பலவீனமானவர்' என்று தனது கண்டனத்தைத் தெரிவித்தார். (ம)



நாளை

11.07.2022

திங்கட்கிழமை

ஆனி 27

சுபநேரம் : 11.59 - 01.29

ராகுகாலம்: 07.29 - 08.59

பிரதோஷவிரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரவள்ளிச் செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை

## விவசாயத் திணைக்களம் ஏற்பாடு

**யாழ்ப்பாணம், ஜூலை 10**

**யாழ். குடாநாட்டில் மரவள்ளிச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.**

தற்போது மரவள்ளிச் செய்கை குறைவாக மேற்கொள்ளப்படுவதால் அவற்றின் விலை சந்தையில் அதிகரித்துள்ளதுடன் பற்றாக்குறையும் நிலவுகிறது.

இதனையடுத்து இந்தச் செய்கையை அதிகரிக்கும் முகமாக செய்கையாளர்களுக்கு விவசாயத் திணைக்களத்தால் மரவள்ளித் தடிகள் கையளிக்கப்படவுள்ளன.

நாட்டில் இன்னும் ஓரிரு மாதங்களில் ஏற்படலாம் என்று கருதப்படும் பஞ்சத்தைப் போக்குவதற்காக மரவள்ளிச் செய்கையை ஊக்குவிப்பதற்கு சமூகமட்ட அமைப்புக்களும் அண்மைக்காலமாகப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குடாநாட்டு சந்தைகளில் தற்போது ஒரு கிலோ மரவள்ளிக் கிழங்கு 250 ரூபாவுக்கும் மேல் விற்கப்படுகின்றது. (ச-17)





## நடிகமணி வி.வி.வைரமுத்து 33ஆவது நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 10

நடிகமணி வி.வி.வைரமுத்துவின் 33ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு காங்கேசன்துறை வாழ் கலைஞர்களின் ஒழுங்கமைப்பில் நேற்று முன்தினம் 8ஆம் திகதி அங்குள்ள அவரது சிலை முன்றிலில் இடம்பெற்றது.

இதன்போது அவரது சிலைக்கு அமைப்பினர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். நிகழ்வில் அரங்கவியலாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச)

## யாழ். குடாநாட்டில் பரவலாக சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சைக்கிள்கள் திருடப்படும் சம்பவங்கள் பரவலாக அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் தட்டுப்பாட்டை அடுத்து, குடாநாட்டில் சைக்கிளுக்குப் பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது.

வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு சைக்கிள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. அத்துடன் சைக்கிள்களுக்கு தட்டுப்பாட்டு நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், சைக்கிள் திருட்டுகளும் பரவலாக அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இது தொடர்பில் விழிப்புடன் இருக்கவேண்டும் என்றும் பொலிஸார் அறிவித்துள்ளனர். (ச-17)

## நாட்டில் பரவலாக மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஜூலை 10

நாட்டின் பல பகுதிகளில் பரவலாக மழைக்கு வாய்ப்புக் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

சப்ரகமுவ மாகாணத்திலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பலதடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேல் மாகாணத்தில் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் தென், மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு முதல் தென்மேற்கு வரையான திசைகளிலிருந்து வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புத்தளத்திலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது - என்றுள்ளது. (ம)

### தற்காலிக...

கார்களின்வசம்வீழ்ந்தபின்னர், அவசர அவசரமாக சபாநாயகர் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை தனது வீட்டில் கூட்டினார். ஒரு சில கட்சித் தலைவர்கள் நேரடியாகக் கலந்து கொண்டனர். எஞ்சியோர் இணையம் ஊடாகப் பங்கேற்றனர்.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை சபாநாயகர் ஊடகங்களுக்கு வெளியிட்டார். அதில்,

1) ஜனாதிபதி மற்றும் பிரதமர் விரைவில் தமது பதவிகளிலிருந்து விலகுதல்.

2) நாடாளுமன்ற ஜனநாயக முறைமைக்கு அமைய மற்றும் அரசமைப்புக்கு இணங்க அடுத்த கட்டமாகப் பதில் ஜனாதிபதி ஒருவரை நியமிப்பது தொடர்பில் ஏழு நாள்களுக்குள் நாடாளுமன்றத்தைக் கூட்டி பொது இணக்கப்பாட்டுடன் தீர்மானமொன்றை எடுத்தல்.

3) அந்த ஜனாதிபதியின் கீழ் தற்பொழுது நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சர்வகட்சிகளையும் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளின் இணக்கத்துடன் புதிய பிரதமர் தலைமையில் இடைக்கால அரசாங்கத்தை அமைத்தல்.

4) இதன் பின்னர் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தேர்தலை நடத்தி; புதிய நாடாளுமன்றத்தைத் தெரிவுசெய்ய மக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.

இதற்கு மேலதிகமாக கௌரவ பிரதமரால் மூன்று மாற்று யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

I) உடனடியாக ஜனாதிபதி பதவி விலகி பிரதமர் பதில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுதல்.

II) அவ்வாறு நியமிக்கப்பட்டு அனைத்துக் கட்சிகளினையும் ஒன்றிணைத்துப் புதிய பிரதமர் ஒருவரின் தலைமையின் கீழ் இடைக்கால அரசாங்கமொன்றை அமைத்தல்.

அல்லது

I) ஜனாதிபதி பிரதமர் ஆகிய இருவரும் பதவி விலகி, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டு அதன் பின்னர் சர்வகட்சிகளின் இணக்கத்துடன் புதிய பிரதமர் ஒருவரை நியமித்தல், இடைக்கால அரசாங்கத்தை அமைத்தல் மற்றும் குறிப்பிட்ட காலத்துக்குள்புதியஅரசாங்கத்தை அமைப்பதற்குச்சந்தர்ப்பம்வழங்கல், என்றுள்ளது. (அ-ஒ-5)




## விவசாயத்தை மேம்படுத்துவதற்கு உதயன் மேன்மேலும் உதவட்டும்

நான் ஒரு நீண்ட நாள் வாசகன் என்ற வகையில் உதயன் பத்திரிகை மூலமாக கோரிக்கையொன்றை விடுக்கின்றேன். உதயன் பத்திரிகையில் ஜே.சத்தியேந்திரனின் தென்னை வளர்ப்பு சம்பந்தமாகவும், விவசாயம் சம்பந்தமாகவும் (மஞ்சள் பதப்படுத்தும் முறை போன்ற) பல கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றீர்கள்.

மேற்படி எமக்குப் பிரயோசனமான கட்டுரைகளுடன், வடகோவை வரதராஜன் எழுதிய, 'இயற்கை விவசாயம் நமக்குப் பொருத்தமா?', 'உயிர் உரம் மட்டும் வேளாண்மைக்குப் போதுமா?' அத்துடன் விவசாய போதனாசிரியர் திருமதி செ.செந்தூர்க்குமரன் எழுதிய, 'வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை' போன்ற கட்டுரைகள் மிகவும் பயனுள்ளவையாக அமைந்தன.

இவ்வாறான விவசாயம் சார்ந்த துறைசார் நிபுணர்களின் கட்டுரைகளை உதயன் எமக்குத் தொடர்ச்சியாகத் தரவேண்டும். அத்துடன் மா, பலா, தோடை, எலுமிச்சை, மாதுளை, பப்பாசி போன்ற பழக்கன்றுகளை வளர்ப்பது சம்பந்தமாக தனித்தனிக் கட்டுரைகள் வெளியிட்டால் அது எமக்கு மிகவும் பயன்படும்.

அத்துடன் இதே போன்ற நிபுணர்களை கேள்வி - பதில் வடிவில் வாசகர்கள் தொடர்புகொள்ளக்கூடிய ஏற்பாடுகளையும் உதயன் மேற்கொண்டால் அது எமக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

**பொ.நாகராசா**
*மாதகல் கிழக்கு, மாதகல்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**பொன்னையா தங்கராசா**



பிறப்பு 29.02.1929 — இறப்பு 09.07.2003

கண்களில் பனித்த கண்ணீர்
காயவில்லை இன்னமும் தான்
காலமெல்லாம்
உங்களை நினைத்து
ஏங்கியே காத்திருப்போம்.

குருபரன் குடும்பத்தினர்.

(CS 19948)1-6

## மானிப்பாயில் மாபெரும்.மலிவு விற்பனை

## ஆடித் திருவிழா




14.07.2022 (வியாழக்கிழமை) தொடக்கம்

Toyota Genuine Parts
(KDH, Dolpine, Premeo)
Toyota Genuine Oil
மற்றும் Genuine Parts (சகல விதமான Filter)
A4 பேப்பர் F70 GSM, 80 GSM (JK, IK)
பாசுமதி அரிசி
உள்நாட்டு, வெளிநாட்டு சைக்கிள்கள்
(Lumala, Mountain)
மற்றும் வாகன உதிரிப்பாகங்கள்

**மொத்த, சில்லறை வியாபாரம்**

மானிப்பாய் - யாழ். வீதி
மானிப்பாய் காகில்ஸ் பூட்சிற்றிக்கும்
மருதடி விநாயகர் ஆலயத்திற்கும் இடையில்
உள்ள வளைவில் - மானிப்பாய்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 12 . 1958 — இறப்பு 09 . 07 . 2022



திருமதி **மச்சேந்திரகுமார் விமலாதேவி**

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், பொற்றொழிலாளர் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட மச்சேந்திரகுமார் விமலாதேவி நேற்று (09.07.2022) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் மந்சேந்திரகுமாரின் அன்பு மனைவியும், பிரியங்கா, தனுக்ஷன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2022) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
077 280 1938
077 441 5713

(cs.45509) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்

## வீடு வாடகைக்குத் தேவை

நல்லூர் கல்வியங்காடு பகுதியை அண்மித்த பகுதியில் 2 பேருக்கு வீடு வாடகைக்குத் தேவை.

074 149 8557, 077 8399 382

## வீடு வாடகைக்கு

யாழ்.இந்துக் கல்லூரிக்கு
அருகாமையில் சகல வசதிகளுடனும்
கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :0777 137 178

## வேலைவாய்ப்பு

அரசடி நல்லூர் வீதியில் இயங்கிவரும் ஷாய்றா சுப்பர் மார்க்கட்டிற்கு அனுபவம் வாய்ந்த வேலை ஆட்கள் தேவைப்படுகிறார்கள்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
(ஆண், பெண்) இருபாலார்கள்
தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:

**076 251 7520, 021 2222 501**

## அஞ்சலிக்கின்றோம்



காசிப்பிள்ளை
**ஆறுமுகம் தியாகராஜா**

அமரத்துவமடைந்த நயினாதீவு சிவத்திரு காசிப்பிள்ளை ஆறுமுகம் தியாகராஜா (ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய மரபு வழி அறங்காவலர், முன்னாள் அறங்காவலர் சபைத் தலைவர், ஓய்வு நிலை வேலணை உதவி அரசாங்க அதிபர், சிறந்த திருமுறை ஓதுவார்) அம்பாளின் மஹோற்சவ காலத்தில் நாகம்மையின் பாதங்களை அடைந்துவிட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்கள், உற்றார், உறவினர் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா நாகேஸ்வரியின் கீழ் இருக்க அஞ்சலிக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

ஆதீன குருவாக இருந்து ஸ்வர்கஸ்ரீ
ஆகிவிட்ட ஐ.மஹேஸ்வரக்குருக்களின் குடும்பத்தவர்கள்
ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு -01

## அஞ்சலித்துப் பிரார்த்தனை செய்கின்றோம்



உயர்திரு
**இராமலிங்கம் பாலசுந்தரம்**

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் உபாசகரும் ஊர் பற்றாளரும் சமய சமூகப்பணிகள் செய்தவரும் நிறைந்த சாயி பக்தரும் முன்னாள் யாழ்.பல்கலைக்கழக பொருளியற்துறைத்தலைவராகவும், ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய தர்மகர்த்தா சபையின் உறுப்பினருமாக இருந்த அமரர் கலாநிதி S.K சண்முகநாதனின் மூத்த சகோதரருமான உயர் திரு. இராமலிங்கம் பாலசுந்தரம் கனடாவில் அம்பிகையின் பாதங்களைப் பற்றிக்கொண்டார்.
அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்கள், உறவினர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா தங்கு சங்களைத்தாயின் பாதங்களில் இருக்க அஞ்சலித்துப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஆலய ஆதீன பிரதம குருக்கள் ஐயா குடும்பத்தவர்கள்
ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் கோவில்
சுதுமலை, மானிப்பாய்

## வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயம்

## ஏல விற்பனை


கடந்த 15.05.2022 நடைபெற்ற சிறப்பு பொதுக்கூட்டத்தின் தீர்மானத்திற்கு அமைவாக வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத்திலுள்ள பாவித்ததும் தற்போது பாவனையற்ற கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள் இன்று 10.07.2022 ஞாயிற்றுக்கிழமை (மணவாளக்கோலம்) அன்று பிற்பகல் 1.00 மணியளவில் ஆலயத்தின் முன்றிலில் ஏலவிற்பனை நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

ஏல விற்பனை செய்யப்படவுள்ள பொருட்கள் விபரம்.

1. பித்தளை குத்து விளக்குகள்
2.சிறிய சில்வர் குத்து விளக்குகள்
3.உடைந்த/நல்ல நிலையிலுள்ள கற்கிடாரங்கள்
4.அலுமினியப் பானைகள்
5.பஞ்சாலாத்திகள்
6.கற்பூரத்தீபங்கள்
7.உடைந்த பித்தளைப் பாத்திரங்கள் (100kg)
8.பறை மேளங்கள்
9.[illegible]

ஆலய பரிபாலன சபை

### கடற்படையின்...



கடற்படையின் இரண்டு கப்பல்களில் அடையாளம் தெரியாத ஒரு குழுவினர் தங்கள் பொதிகளுடன் கொழும்புத் துறைமுகத்தில் இருந்து நேற்று மதியம் இரகசியமாகத் தப்பியோடியுள்ளனர்.

அத்துடன் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் புறப்படத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த விமானத்தை நோக்கி, பாதுகாப்பு வாகனங்களுடன் வி.ஐ.பி. தொடரணி ஒன்றும் சென்ற காணொலிகள் சமூக ஊடகங்களில் நேற்று வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தின.

தலைநகர் கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் என்பன போராட்டக்காரர்களின் வசம் வீழ்ந்த பின்னரே இந்தக் காணொலிகள் வெளியாகின.

கடற்படைக்குச் சொந்தமான கஜபாகு, சிந்துரலா ஆகிய இரண்டு கப்பல்களில் அவர்கள் புறப்பட்டுச் சென்றனர் என்ற தகவலை கொழும்புத் துறைமுக அதிகாரி ஒருவர் செய்தி ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர்கள் அனைவரும் உயர் மட்ட அரச தலைவர்கள் அல்லது அவர்களது குடும்பத்தவர்களாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. (அ-ஓ-5)

## நவாலிப் பகுதியில் வழிப்பறித் திருடர்கள்

வட்டுக்கோட்டை ஜன்10

வட்டுக்கோட்டை நவாலிப் பகுதி வழுக்கையாறு இந்து மயானத்தில் இரவு 7மணியிலிருந்து 9மணி ஆகிய நேரங்களில் வழிப்பறித் திருடர்கள் வேலை முடித்து இரவு நேரங்களில் செல்வோரிடம் திருட்டில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதனால் அந்தவழியால் செல்வோர் அச்சப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. அவர்களிடமிருந்து பணம், துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள் என்பவற்றை அடித்துப் பறித்துச் சென்றுள்ளனர்.

அந்த வழியால் செல்வோர் அச்சப்படுகின்ற சூழ்நிலை உருவாகியுள்ளது.

உரிய தரப்பினர் மானிப்பாய் பொலிஸாருக்கு தெரியப்படுத்தி அதற்குரிய ஏற்பாட்டை செய்யுமாறு மக்கள் கோரியுள்ளனர். (ஒ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ரணிலின்...*

காரர்கள் வசம் வீழ்ந்துள்ளது.

கொழும்புக்கு நேற்று படையெடுத்த போராட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகை அதன் பின்னர் ஜனாதிபதி செயலகம் என்பவற்றைக் கைப்பற்றி, தமது கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அதனைத் தொடர்ந்து நேற்று மாலை 5 மணியளவில் அலரி மாளிகையையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதன் பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லம் அமைந்துள்ள கொள்ளுப்பிட்டிப் பகுதியை போராட்டக்காரர்கள் சூழ்ந்து கொண்டனர். அங்கு போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில்



பெரும் முறுகலும் ஏற்பட்டது.

இதனையடுத்து போராட்டக்காரர்கள் மீது கண்ணீர் புகைக்குண்டு வீச்சு, நீர்த்தாரைப் பிரயோகம் என்பன மேற்கொள்ளப்பட்டன. ஆனாலும், போராட்டக்காரர்கள் மசியவில்லை. இன்னமும் போராட்டக்காரர்களின் எண்ணிக்கை அங்கு அதிகமாகிக் கொண்டிருந்தமையால் பாதுகாப்புத் தரப்பினரால் ஒரு கட்டத்துக்கு மேல் நிலைமையை சமாளிக்க முடியவில்லை.

இதற்கிடையில் நேற்று இரவு 8 மணியளவில், ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்துக்குள் புகுந்த குழுவினர் வீட்டைத் தாக்கியதுடன் தீ வைத்தனர். நீண்ட நேரத்தின் பின்னரே தீயணைப்புப் படையினரும் அங்கு வந்து தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளை எடுத்தனர்.

இதேவேளை- ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லம், அவருக்குப் பின்னர் கொழும்பிலுள்ள பாடசாலை ஒன்றுக்கு உயிலாக எழுதி வைக்கப்பட்டதாகும். அத்துடன் ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டில் நூலகமும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-ஓ-5)


## மரண அறிவித்தல்

பிறப்பு 28 - 02 - 1950

இறப்பு 06 - 07 - 2022



### வல்லிபுரம் தம்பிராஜா

(முன்னாள் முகாமையாளர் ஆனந் மோட்டர்ஸ், விஜிதா மோட்டர்ஸ்)

தையிட்டியை பிறப்பிடமாகவும் பிரம்படிலேன் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் தம்பிராஜா கடந்த புதன்கிழமை (06.07.2022) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வல்லிபுரம் வள்ளியம்மையின் மகனும் காலஞ்சென்ற சொக்கநாதன் மற்றும் பவளத்தின் மருமகனும் காலஞ்சென்ற கணேஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான செல்வராஜா, தியாகராஜா, புஷ்பமாலினி மற்றும் தர்மராஜா, புஷ்பமலர் புஷ்பலீலா, புலேந்திரராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (06.07.2022) அவரது இல்லத்தில் நடைபெற்று, கொக்குவில் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



எமது நடனத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி **றஜிதா ராகவன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

### சங்கரப்பிள்ளை தம்பிராசா

(விவசாயப் போதனாசிரியர்)

அவர்கள் கடந்த 09.07.2022 சனிக்கிழமை காலமான செய்தி அறிந்து மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இடம் பெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பிரிவால் துயருறும்
நடனத்துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

## மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 12 . 1943

இறப்பு 09 . 07 . 2022



### திரு.சங்கரப்பிள்ளை தம்பிராஜா

(ஓய்வுபெற்ற விவசாயப் போதனாசிரியர்)

மீசாலை மேற்கு மீசாலையை பிறப்பிடமாகவும் சிவராஜா அவனியு திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட திரு.சங்கரப்பிள்ளை தம்பிராஜா நேற்று (09.07.2022) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லையா சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வரட்ணத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நடராஜா (ஓய்வுபெற்ற தபாலதிபர்) மற்றும் இராஜேஸ்வரி, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சசீலன் (கண்ணன்-கனடா), றஜிதா, (சிரேஷ்ட விரிவுரையாளர் நடனத்துறை இராமநாதன் நுண்கலைக் கழகம்- யாழ்ப்பாணம்), ஸோமிலன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், துளசி (கனடா), காலஞ்சென்ற ராகவன், அனுசா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அரன், ஓவியா, வர்ஷிகா, சாத்விகா, சுருதி, அகரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

'ராஜஸ்தான்'
150/19, சிவராஜா அவனியு,
பலாலி வீதி, திருநெல்வேலி.

தகவல்: குடும்பத்தினர்.
சசீலன் : +1(416)7271930
றஜிதா : 077 078 5017
ஸோமிலன் : +1(416)4733890

## மரண அறிவித்தல்



### இராசையா பூரணச்சந்திரன்

(ஓய்வுபெற்ற பிரதம புகையிரத நிலைய அதிபர்,
முன்னாள் தலைவர் புலோலி ப.நோ.கூ.சங்கம், பிரபல நாடக கலைஞர்)

குரும்பைகட்டி புலோலியைச் சேர்ந்த இராசையா பூரணச்சந்திரன் (ஓய்வுபெற்ற பிரதம புகையிரத நிலைய அதிபர்) கடந்த (08.07.2022) அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் அமரர் சிவானந்தவள்ளியின் அன்புக் கணவரும், அனுதர்சன் (பொறியியலாளர்) அனுராதா, அனுரதன் (பொறியியலாளர்) ஆகியோரின் பாசமான தந்தையாரும், வைத்தியர் கஜானி, வைத்தியர் ஜெயேந்திரன் வைத்தியர் சந்தியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ரிஷிகா, டிலுஷிகா, கனிஷிகா, திஹாஷ்னி, ஆஷ்மன், அனுமிதன், அனுராயிதன் ஆகியோரின் பாசமிகு பேரனும், புஸ்பலீலாவதி, லீலாவதி, கமலாவதி, செல்வராணி (அமரர்), சந்திரகலா, சூரியகலா, சந்திரமோகன் (உதவித் தபால் அதிபர்) ஆகியோரின் அன்பான சகோதரரும், கிருஸ்ணபிள்ளை (அமரர்), கிட்டிணர் (அமரர் ), தியாகு, சுப்பிரமணியம் (அமரர்), மதியழகன் (அமரர்), மகாதேவன் (அமரர்), பரஞ்சோதி, ஜெகசோதி ஆகியோரின் மதிப்பிற்குரிய மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2022) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக புலோலி கருகம்பன் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவாலிப்படுகொலை...

உயிரைப் பாதுகாப்பதற்காக நவாலி சென். பீற்றேர்ஸ் தேவாலயத்தில், தங்கியிருந்தஅப்பாவிப்பொதுமக்களைஇலக்குவைத்து சிறிலங்கா வான்படையின் புக்காராவிமானங்கள்நடத்தியகுண்டுத் தாக்குதலில் 147 பொதுமக்கள் உடல் சிதறிப்பலியான 27ஆவது ஆண்டு நினைவுநாள் நேற்றாகும்.

இதனையொட்டி அந்தப் பகுதி மக்கள், அரசியல் தலைவர்கள் இணைந்து நேற்றுமாலைமலர்தூவி, ஈகச்சுடரேற்றி அகவணக்கம்செலுத்தினர். (அ-ஓ-27)



தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்திய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள்.

## மக்கள்...

பொருளாதார நெருக்கடி ஆரம்பமானதுமே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின், மிரிஹான இல்லத்தின் முன்பாக கடந்த மார்ச் 31ஆம் திகதி மக்கள் தன்னெழுச்சிப் போராட்டம் நடத்தினர். அதன் தொடர்ச்சியாக போராட்டங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் எழுச்சி பெற்றது. ஏப்பரல் 9ஆம் திகதி காலிமுகத்திடலில் 'கோத்தா கோகோம்' போராட்டம் ஆரம்பமானது.

போராட்டக்காரர்கள் காலிமுகத்திடலில் நிரந்தரமாகத் தங்கியிருந்து போராடினர். கடந்த மே 9ஆம் திகதி போராட்டக்காரர்கள் மீது மஹிந்த ராஜபக்சவின் குண்டர் படை தாக்குதல் நடத்தியதால் அன்றைய தினம் கலவரமானது. அதனைத் தொடர்ந்து எழுந்த எதிர்ப்புக்களால் மஹிந்த பதவி விலகினார்.

69 லட்சம் பேரின் மக்கள் ஆணை தனக்கு உள்ளது என்றும், தனது பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னர் விலக மாட்டேன் என்றும், தோல்வியடைந்த ஜனாதிபதியாக ஒருபோதும் வெளியேறத் தயாரில்லை எனவும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அதன் பின்னர் தெரிவித்து வந்தார். இந்த நிலையில் கடந்த ஜூன் 9ஆம் திகதி மற்றொரு சகோதரரான பஸில் ராஜபக்ச பதவி விலகினார்.

இதனைத் தொடர்ந்து ஜூலை 9ஆம் திகதி கோத்தாபய ராஜபக்சவை வெளியேற்றும் நோக்குடன் 'முழு நாடும் கொழும்புக்கு' என்ற தொனிப் பொருளில் போராட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டது. அதற்கு ஆதரவு தெரிவித்து நாட்டின் மூலைமுடுக்குகளிலிருந்தும் பல லட்சம் பேர் கொழும்பில் அணிதிரண்டனர்.

அவர்கள் ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் என்பனவற்றை பல தடைகளுக்கு மத்தியில் கைப்பற்றியதன் ஊடாக, ஜனாதிபதி கோத்தா பதவியிழந்துள்ளார் என்பது சம்பிரதாயபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஜனாதிபதி மாளிகையிலிருந்து நேற்றுமுன்தினம் இரவே பாதுகாப்பான மறைவிடம் ஒன்றுக்கு கோத்தாபய சென்றுள்ளார். அங்கிருந்து நேற்று மாலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவை அவர் தொடர்புகொண்டு, கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுக்கு கட்டுப்படுவதாகத் தெரிவித்தார்.

அதன் பின்னர் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், ஜனாதிபதி கோத்தாபய மற்றும் பிரதமர் ரணில் இருவரும் பதவி விலகவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பான கடிதம், ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டு சில மணி நேரத்தில், எதிர்வரும் 13ஆம் திகதி பதவி விலகுவதாக சபாநாயகருக்கு ஜனாதிபதி கோத்தா அறிவித்தார்.

அமைதியான முறையில் ஆட்சியைக் கையளிப்பதற்காகவே ஜனாதிபதி புதன் வரை அவகாசம் கோரியுள்ளார். இது தொடர்பில் நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்துமாறு அவர் என்னிடம் கூறினார் என சபாநாயகர் தெரிவித்தார். (அ-ஒ-5)

## வீழ்ந்தது...


கள், ஜனாதிபதி செயலகத்தையும் சில மணிநேரத்தில் தமது முழுமையான கட்டுப்பாட்டின்கீழ்கொண்டுவந்தனர். அதேவேளை, கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையும் போராட்டக்காரர்களால் நேற்றுமதியம்முற்றுகையிடப்பட்டுஅவர்களது கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது.

நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து நேற்றுமுன்தினம் இரவுமுதல்வந்துகொழும்பில் போராட்டக்காரர்கள் திரண்டனர். இதனால் மிரண்டுபோன அரசாங்கம் நேற்றுமுன்தினம் இரவு பொலிஸ் ஊரடங்கை திடீரென நடைமுறைப்படுத்தியது. ஆனால், அத்தகைய உத்தரவுசட்ட விரோதமானதுஎனசுடச்சுடசட்டத்தரணிகள் சங்கம் பதிலடி கொடுத்தது. இந்த நிலையில் நேற்றுக்காலை அழுத்தங்களையடுத்து ஊரடங்கு நீக்கப்பட்டது.

### கோட்டையில் திரண்ட மக்கள்

நேற்றைய தினம் பல இடங்களிலிருந்தும் மக்கள் கொழும்பு கோட்டை நோக்கி படையெடுக்கத் தொடங்கினர். நேற்றுக் காலை 8 மணியளவில் மக்கள் கூட்டம் திரள ஆரம்பித்தது. ஜனாதிபதிமாளிகை அமைந்துள்ள பகுதியைச் சூழ பொலிஸ் அரண், மூன்றுஅடுக்குகம்பிவேலி, ஆயுதமேந்திய கடற்படையினர், இராணுவம் என்றுபலமடங்குபாதுகாப்புஅதிகரிக்கப்







பட்டிருந்தது. இவற்றுக்கு மேலாக கண்ணீர்புகைக் குண்டு தாக்குதல் நடத்தும் சிறப்பு அதிரடிப் படையினர், தண்ணீர்ப் பீரங்கிவாகனங்களும்நிறுத்தப்பட்டிருந்தன.

சிலமணிநேரத்திலேயேஜனாதிபதிசெயலகத்தைச் சூழவுள்ள பகுதிகள், ஜனாதிபதி மாளிகைக்குச் செல்லும் வீதிகள் அனைத்தும் லட்சக்கணக்கான மக்களால் நிறைந்தது. மக்கள் வெள்ளம் திரளத்தொடங்கியதும் போராட்டக்காரர்கள் முன்னேறத் தொடங்கினர்.

### தாக்குதல் தொடுப்பு

பொலிஸாரின் தடைகளைத் தகர்த்து முன்நகரத் தொடங்கிய போராட்டக்காரர்கள் மீது தண்ணீர்ப் பீரங்கி வாகனங்கள் ஊடாகதாக்குதல்தொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கண்ணீர்புகைக்குண்டுத் தாக்குதலும் நடத்தப்பட்டது. கண்ணீர்ப்புகைக்குண்டுகள்போராட்டக்காரர்களின் பகுதிகளில் வீழ்ந்ததும் அதனை எடுத்து உடனடியாகவே பாதுகாப்புத் தரப்பினர்வசம்திருப்பிவீசினர். இதனால் ஜனாதிபதி மாளிகையைச் சூழவுள்ள பகுதிமெல்லமெல்லகளேபரமானது.

### முன்னேறிப் பாய்ச்சல்

தடைகளைஉடைத்துக்கொண்டுபோராட்டக்காரர்கள் முன்னேறிப் பாய்ந்தனர். சதாம் வீதி ஊடாக ஜனாதிபதி மாளிகையை நெருங்கினர். பாதுகாப்புத் தரப்பினர் வசமிருந்த தண்ணீர்ப் பீரங்கிகள் இரண்டையும், இராணுவத்தினரின்கவச வாகனத்தையும் போராட்டக்காரர்கள் கைப்பற்றினர். அதனையடுத்து பாதுகாப்புத் தரப்பினர் மீது போராட்டக்காரர்கள் தண்ணீர் தாரைப் பிரயோகத்தை நடத்தினர்.

### துப்பாக்கிச் சூடு

போராட்டக்காரர்கள்சகலதடைகளையும் நொருக்கி ஜனாதிபதி மாளிகையின் பிரதானவாசலைநண்பகல் 12.30 மணியளவில் நெருங்கினர். இதனால் பாதுகாப்புக் கடமையிலிருந்த இராணுவத்தினர் வானை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர். போராட்டக்காரர்களை நோக்கியும் ஒரு சில வேட்டுக்களைத்தீர்த்தனர். இதனால் போராட்டக்காரர்கள் மூன்று பேர் படுகாயங்களுக்குள்ளாகினர். இன்னமும் ஆத்திரமடைந்த போராட்டக்காரர்கள், தாம் கைப்பற்றிய இராணுவ கவச வாகனத்தைப் பயன்படுத்திஜனாதிபதிமாளிகையின் தடுப்புக்களை உடைத்தனர்.

### வீழ்ந்தது மாளிகை

பிற்பகல் ஒரு மணியளவில் போராட்டக்காரர்கள் வசம் ஜனாதிபதி மாளிகை முழுமையாக வீழ்ந்தது. ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் மாளிகைக்குள் நுழைந்தனர். மாளிகையைக் கைப்பற்றியதன் அடையாளமாக, அங்கு ஏற்றியிருந்த ஜனாதிபதியின்கொடியைஇறக்கிகறுப்புக்கொடியை ஏற்றினர்.

### ஜனாதிபதி செயலகம்

ஜனாதிபதிமாளிகையைமுழுமையாகக் கட்டுக்குள்கொண்டுவந்தபின்னர்ஜனாதிபதிசெயலகத்தைகைப்பற்றும்நோக்குடன் போராட்டக்காரர்கள் நகர்ந்தனர். ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக பாதுகாப்புக்கடமைகளில்ஈடுபட்டசிறப்பு அதிரடிப் படையினரையும், இராணுவத்தினரையும் தள்ளி விழுத்திக் கொண்டு சிலமணிநேரங்களிலேயேமுன்னேறிய போராட்டக்காரர்கள்பிற்பகல் 2 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தையும் தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

### தலைமறைவான கோத்தா

இதேவேளை - ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் என்பவற்றை போராட்டக்காரர்கள் கைப்பற்றுவதற்கு முன்பதாகவே, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அங்கிருந்து வெளியேறி தலைமறைவாகியுள்ளார்.

### பின்வாங்கிய படையினர்

ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகத்துக்கு பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்ட இராணுவத்தினர் மற்றும் கடற்படையினர் மக்களின் கடும் எதிர்ப்பை சமாளிக்க முடியாமல் ஒரு கட்டத்தில் பின்வாங்கிவெளியேறத்தொடங்கினர். இதனாலேயே சில மணி நேரங்களுக்குள் ஜனாதிபதி செயலகம் மற்றும் ஜனாதிபதி மாளிகை என்பவற்றை போராட்டக்காரர்களால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடிந்தது.

(அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த வீடு முன்பாகவும் நேற்று மக்கள் போராட்டம்

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக நேற்றுப் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், தங்காலையில் உள்ள முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் கார்ல்டன் இல்லத்துக்கு முன்பாகவும் போராட்டம் நடத்தப்பட்டது.

ஜனாதிபதி உட்பட அரசாங்கம் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளை, தற்போதைய அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகைக்கு எதிரிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. இந்தப் போராட்டங்களில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டனர். (எ-இ)

## தேயிலைக்கு எரிபொருள்!

*ஈரானுடன் இலங்கை ஒப்பந்தம்*

இலங்கையில் இருந்து தேயிலையை வழங்கி, ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெயைப் பெற்றுக்கொள்ளும் வகையிலான உடன்பாடொன்று எட்டப்பட்டுள்ளது.

ஈரானியத் தூது வர்ஹஷேம்அஷ்ஜசாதே மற்றும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பை அடுத்தே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. (ம)

## எரிபொருள் நிலையத்தில் தீ விபத்து

கொழும்பு, ஜூலை 10

ஹசலக கூட்டுறவு எரிபொருள் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. எனினும் மக்களின் முன்னெச்சரிக்கை நடவடிக்கையை அடுத்துத் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

மின் கசிவுதான் விபத்துக்குக் காரணம் என்றும் தீ விபத்தால் எரிபொருள் நிரப்பும் ஊழியருக்கு இலேசான காயங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ்ப்பாணத்தில் 2 பேர் வசிக்கக்கூடிய வீடு வாடகைக்குத் தேவை.

077 660 4014

**ENGLISH CLASSES**

யாழ்நகரில் தனி வகுப்புகள்

Grade 7 - G.C.E. O/L - A/L

Graduates தொழில்புரிவோர் - சரளமாக ஆங்கிலம் பேசவும் எழுதவும்

GCE O/L English Literature

K.Ganesh B.A 077 766 8725

**மணமகன் தேவை**

யாழ் இந்து கௌரவ குடும்பத்தில் பிறந்த மணமகளுக்கு 1990 இல் இருந்து லண்டன், கனடா, அமெரிக்கா போன்ற இடங்களில் வசிக்கும் படித்த மணமகன் தேவை.செவ்வாய் இல்லை.

076 910 4096

**பணிப்பெண் தேவை**

இருவர் இருக்கும் வீட்டிற்கு தங்கி இருந்து சமைக்கத் தெரிந்த வீட்டுப் பணி செய்வதற்கு பெண் ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

077 436 6423

**சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம்**

எமது நிறுவனத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரினை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

Email : jaffnawater2023@gmail.com

தொடர்பு :076 535 3666 (CS19868) (3/6)

**பணிப்பெண் தேவை**

கொழும்பில் உள்ள மருத்துவர் வீட்டொன்றில் தங்கியிருந்து குழந்தைகளை பராமரிப்பதற்கும் வீட்டு வேலை செய்வதற்கும் அனுபவமுள்ள பெண் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

076 128 3990

**Visit, Study & Work**

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

* Visitor / Tourist Visa – All countries
* Minor Education – under age 17
* Skilled Migration – Express entry (PR)
* Study & Work – Canada (IELTS தேவையில்லை)
* Student Visa
  - Canada, UK, Australia & New Zealand (IELTS 6 – 6.5 தேவை)
  - France, Germany & Latvia (IELTS தேவையில்லை)

Visa Consultant

134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna. Tel: 0770385584

naltcjaffna@gmail.com

**பொதிகள் சேவை**

உள்நாடு, வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை.

- வெளிநாடு:- 5-9 நாட்கள்
- உள்நாடு:- 24 மணித்தியாலம்

ஒப்படைக்கப்படும்

திருமுருகன் கொம்நெற் 077 755 4528

இல.321, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**மின்சாரம் துண்டித்து விட்டதா?**

**மின்சார கட்டணங்களும் பில் ஏறிவிட்டதா?**

**இதோ இதற்கான தீர்வை நாங்கள் பெற்றுத் தருகிறோம்**

சகல விதமான மின்சாரப் பொருள்கள் பாவிக்க கூடியவாறு SOLAR INVERTER மிகவும் மலிவான விலையில் பொருத்தி தரப்படும். மின்சார கட்டணமும் சேமிக்கப்படும் மற்றும் CCTV கேமராக்கள் பொருத்தி தரப்படும்

J.J GROUP

No. 603, K.K.S, Road, Jaffna

021 222 8854

077 555 5100

(CS 19875)(3/6)

**வீடு வாடகைக்கு**

சாவகச்சேரி கண்டிவீதி (A9 வீதி) Moden Hospital முன்பாக சாவகச்சேரி செல்லும் பக்கம் 3 ஆவது வீடு. 5 அறைகள், 3 வரவேற்பு அறைகள் (Hall), சமையலறை மற்றும் மலசலகூடம், வாகனத்தரிப்பிட வசதிகள் கொண்ட நல்ல தண்ணீர் வசதியுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: ம.செல்வரட்ணம்

077 255 6691, 021 221 3590

**FOR SALE**

4 Years old all Solid Teak wood furniture of Moratuwa made Cushioned settee set 32, 1 seater, Dining Table with 6 cushioned chairs, king size bed 6` - 6`` x 6` - 0, Dressing table with cushioned stool, Glass top cabinet (show Case) Bed side cupboard with 3 drawers, Telephone Stand with 2 drawers. All to be sold as lot for reasonable price.

(CS 45496) (3/6)

Contact Number : 076 607 3094

**உடனடி வேலைவாய்ப்பு**

யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் நவீன வசதிகளையுடைய மருத்துவ நிறுவனத்திற்கு பணியாட்கள் தேவை.

- வரவேற்பாளர்-பெண் முன் அனுபவம் உள்ளவர்கள் (சம்பளம்: 25.000/- இற்கு மேல்)
- பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் (P.R.O) (சம்பளம்: 25.000/- முதல் 30.000/- வரை)
- மருந்தக உதவியாளர் - ஆண்/பெண்
- தாதியர் - பெண்
- சுத்திகரிப்பாளர் - ஆண்/பெண்
- பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்) பகல் / இரவு

நேர்முகத் தேர்வு:

இடம் : 580, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

காலம்: 12/07/2022 (செவ்வாய்க்கிழமை)

நேரம் : முற்பகல் 9 மணிமுதல் 12 மணிவரை

தொடர்பு: 077 208 1441 / 071 8475531

**பணியாளர் தேவை**

எமது கல்வி நிறுவனம் கீழ்வரும் பணியாளர்களை எதிர்பார்க்கின்றது.

**சிற்றுண்டிச்சாலை ஊழியர் ஆண் / பெண்**

**சிற்றுண்டிச்சாலை மேற்பார்வையாளர் ஆண் / பெண்**

**16.07.2022 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு** நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும். (CR 36630) (3/6)

New SICENCE WORLD

Navalar Road, Brown Road, Junction, Jaffna.

Conctact : 021 221 6690, 077 336 4055

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 02 . 1964

மறைவு 09 . 07 . 2022



### சீவரெத்தினம் சர்வேஸ்வரன்

7/8 1ம் ஒழுங்கை பிறவுண் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சீவரெத்தினம் சர்வேஸ்வரன் நேற்று (09.07.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீவரெத்தினம் - ஈஸ்வரி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவரான மாணிக்கராஜா - பவளேஸ்வரி, மற்றும் திருநாவுக்கரசு - கமலாதேவி ஆகியோரின் பாசமிகு மருமகனும், பிரியந்தியின் அன்புக்கணவரும் அனீஸ் (யாழ்ப்பாண மாவட்ட செயலகம்), நிஷானிக்கா (ஆசிரியர் - கிளி/அன்னை மகா வித்தியாலயம்), நிகேஜன், தாட்சாயினி, மதுசன் (LOLC Jaffna கிளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், டர்சினி, ஜங்கரன், பிரசாந், சிந்துண்ணி ஆகியோரின் அன்பு மாமாவும் ரித்விகாவின் பாசமிகு பேரனும் பவானியின் அன்புச் சகோதரனும், சியாமா, சஜீவ் (NTB வங்கி Jaffna, முகாமையாளர்), றஜீவ், தச்சுதா ஆகியோரின் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 10.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7/8 1ம் ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் : ச.அனீஸ் (மகன்)
075 3777 647

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் ஆயுளென
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே

- இளங்கோ அடிகள்

தினக்குரல் சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2053 ஆனி 26 ஞாயிற்றுக்கிழமை (10.07.2022) சிகரம் : 107

# அரசியலில் ஈடுசெய்ய முடியாதவர்கள் என்று யாரும் இல்லை?



> கார்ட்டூன்களில் சிங்கள மக்களின் பெருமைக்குரிய குலச்சின்னமாகிய சிங்கம் வாளைத் தூக்கி வீசிவிட்டு பிச்சை எடுக்கிறது, சைக்கிள் ஓடுகிறது. சிங்கம் தாழ்ந்து போய்விட்டது என்பது சிங்கள மக்களின் கவலை.

○ நிலாந்தன்

பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜோன்சன் கடந்த வியாழக்கிழமை பதவியைத் துறந்திருக்கிறார். ஆளுங்கட்சிக்குள் அவருக்கு எதிர்ப்பு அதிகரித்த காரணத்தால் அவர் பதவியைத் துறந்தார். "அரசியலில் ஈடுசெய்ய முடியாதவர்கள் என்று யாரும் இல்லை" என்று தனது பதவி விலகல் உரையில் அவர் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் இலங்கைத்தீவின் ஜனநாயகம் அப்படிப்பட்டது அல்ல. கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதியிலிருந்து சிங்கள மக்கள் கோத்தாவை வீட்டுக்குப் போ என்று கேட்கிறார்கள். கடந்த இரு தினங்களாக மக்கள் எழுச்சிகள் அதிகரித்துள்ளன. ஆனால் அவர் அசைவதாக இல்லை. தான் பதவி விலகினால் தன்னையும் தன் குடும்பத்தவர்களையும் தூக்கி உள்ளே போட்டு விடுவார்கள் என்று அவர் அஞ்சுகிறார்: தன்னையும் தன் குடும்பத்தவர்களையும் தனது ஆதரவாளர்களையும் பாதுகாப்பதற்குதான் தொடர்ந்தும் பதவியில் இருக்க வேண்டும் என்றும் அவர் நம்புகிறார்.

ஆனால் அவர் பதவியில் இருக்கும்வரை மேற்கு நாடுகளும் சர்வதேச நாணய நிதியமும் இலங்கைக்கு முழு அளவிலானஉதவிகளைவழங்கப்போவதில்லை என்று தெரிகிறது. அரசாங்கத்தின் வேண்டுகோளை ஐ.எம்.எப். மென்மையாக நிராகரித்திருப்பதாகவும் ஒரு தகவல் உண்டு. இந்தியா வழங்கும் உதவிகளும் மெதுமெதுவானவை. துளித்துளியானவை. 'சேலைன்' ஏற்றுவதைப் போன்றவை. அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளின் உதவிகளும் அத்தகையவைதான். அதாவது வெளிநாடுகள் அரசாங்கத்துக்கு வழங்கி வரும் உதவிகள் எவையும் மக்களை எரிபொருள் வரிசைகளில் இருந்து விடுவிக்க போதுமானவை அல்ல. மின்வெட்டை முழுமையாக நீக்கப் போதுமானவை அல்ல. பொருள்களின் விலைகளை கீழே இறக்கப் போதுமானவை அல்ல. இதுதான் உதவிகளின் நிலை.

இவ்வாறு சிறுகச்சிறுக உதவுவதன் மூலம் வெளித் தரப்புகள் இலங்கைத்தீவை தங்களுடைய இரக்கத்தில் தங்கியிருக்கும் ஒரு நிலைக்கு தள்ளியிருக்கின்றன. அதை விட முக்கியமாக கோத்தாவை வெளியேற்றா விட்டால் உதவிகள் முழு அளவுக்குக் கிடைக்காது என்று சிங்களமக்களை நம்ப வைப்பதில் வெற்றி பெற்றிருக்கின்றன.

அதாவது நெருக்கடிகள் அதிகரித்தால் கோத்தா ஒரு கட்டத்தில் பதவியைத் துறக்க வேண்டிவரும் என்று மேற்கு நாடுகளும் ஐ.எம்.எப்பும் எதிர்பார்க்கின்றன. மஹிந்த. பஸில் ஆகியோர் விலகியது போல கோத்தாவும் மக்கள் கிளர்ச்சிகளின் மூலம் அகற்றப்பட வேண்டும் என்று வெளித்தரப்புகள் எதிர்பார்க்கின்றன. ஆனால் இங்கே உள்ள கேள்வி என்னவென்றால் கோத்தாவை அகற்றினால் மட்டும் நாடு உருப்பட்டு விடுமா ?என்பதுதான்.

அண்மையில் கோத்தா கோ கம கிராமத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த இளையோரிடம் இந்தக் கேள்வி கேட்கப்பட்டது. கோத்தா வெளியேறினால் அடுத்தது என்ன? என்று. ஆனால் அவர்களிடம் யதார்த்தமான பதில் எதுவும் இருக்கவில்லை. கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதியிலிருந்து இன்று வரையிலுமான தென்னிலங்கையில் நடக்கும் கிளர்ச்சிகள் யாவும் ஒரு நபருக்கு அல்லது ஒரு குடும்பத்துக்கு எதிரானவைகளாகவே காணப்படுகின்றன. இவ்வாறு ஒரு குடும்பத்தை எதிரியாகப் பார்க்கும் ஒரு நிலைமை எங்கிருந்து தொடங்கியது?

ஒரு குடும்பம் எப்பொழுது யுத்த வெற்றிகள் அனைத்தையும் சுவீரித்துக் கொண்டதோ. அப்பொழுதே அது தொடங்கியது. யுத்தத்தை வென்றெடுத்த ஒரே தகுதி காரணமாக நாட்டை ஆளும் தகுதியும், வைரஸை வெல்லும் தகுதியும், ஈஸ்டர் குண்டு வெடிப்பு போன்றவற்றைத் தடுக்கும் சக்தியும் தங்களுக்கு உண்டு என்று ராஜபக்சக்கள் சிங்கள மக்களை நம்பவைத்தார்கள். அந்த நம்பிக்கைதான் அவர்கள் பெற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மையின் அடிப்படை.

ஆனால் யுத்தமும் வைரஸும் ஒன்று அல்ல. யுத்த வெற்றியைச் சாப்பிட முடியாது. யுத்தத்தை நடத்துவதும் ஆட்சியை நிர்வகிப்பதும் ஒன்றுஅல்ல என்பவற்றையெல்லாம் சிங்கள மக்கள் அனுபவத்தால் கண்டுபிடித்த பொழுது, அவர்களுடைய கோபம் முழுவதும் அந்த குடும்பத்துக்கு எதிராகத் திரும்பியது. எந்தக் குடும்பத்தின் மீது முழு அரசியல் நம்பிக்கைகளையும் முதலீடு செய்தார்களோ, எந்தக் குடும்பத்தைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடினார்களோ, அதே குடும்பத்தை கால்களின் கீழே போட்டு மிதிக்கும் ஒரு நிலை வந்தது.

எனினும், நாட்டின் இப்போதுள்ள நெருக்கடிகளுக்கு ஒரு குடும்பம் மட்டும் காரணம் அல்ல. இலங்கைத் தீவை பல்லினத் தன்மை மிக்க ஒரு நாடாகக் கட்டியெழுப்பத் தவறிய எல்லாத் தலைவர்களுமே அதற்குப் பொறுப்பு. இனப்பிரச்சினையை போரின் மூலம் தீர்க்க முற்பட்ட அனைத்து தலைவர்களும் அதற்கு பொறுப்பு. யுத்த வெற்றியை முதலீடாகக் கொண்ட ஒரு கட்சிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்குத் தேவையான அடிப்படை வெற்றியை வழங்கிய அனைத்து சிங்கள மக்களும் அதற்குப் பொறுப்பு. சிங்கள மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய பெரும்பாலான புத்திஜீவிகளும் பொறுப்பு. கோத்தாவை ஒரு கதாநாயகனாக மேலுயர்த்திய 'வியத்மக' என்று அழைக்கப்படுகின்ற தொழிற்சார் திறன்களைப் பெற்ற படிப்பாளிகள் அனைவரும் இதற்குப்பொறுப்பு. சிங்கள பௌத்த பண்பாட்டின் கூட்டுத் தோல்வி இது. இது ஒரு ராஜபக்ச குடும்பத்தின் தனிப்பட்ட தோல்வி அல்ல. இது ஒரு கூட்டுத் தோல்வி. எனவே இந்தக்கூட்டுத் தோல்வியை ஒரு குடும்பத்தின் தனிப்பட்ட தோல்வியாகப் பார்ப்பது பிழையானது. அதுமட்டுமல்ல அந்தக் குடும்பத்தை அகற்றினால் நிலைமை சீராகிவிடும் என்று நம்புவதும் ஒரு குருட்டு நம்பிக்கைதான்.

நாட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்துவதற்கு பொருத்தமான தலைமைகள் யாரும் ஆளுங்கட்சிக்குள்ளும் இல்லை, எதிர்க்கட்சிக்குள்ளும் இல்லை. நாடாளுமன்றத்துக்கு வெளியிலிருந்து தம்மிக்க பெரேரா போன்ற கோடீஸ்வரர்களைத்தான் கொண்டு வரலாம் என்றால். அல்லது அரிசியாலை முதலாளியும் மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரும் ஆகிய டட்லி சிறிசேன போன்றவர்கள்தான் நாடாளுமன்றத்துக்குள் வர ஆசைப்படலாம் என்றால் பொருளாதாரத்தை எப்படி நிமிர்த்துவது? இந்த முதலாளிகளைத்தவிர யாரும் நல்லவர்கள், பெரியவர்கள் ,அறிஞர்கள் நாட்டில் கிடையாதா? இந்த தலைமைத்துவ வெற்றிடம் உள்ளவரை பொருளாதாரத்தை நிமிர்த்துவது சவால்கள் மிகுந்ததாகவே இருக்கும். கோத்தா பதவியில் இருந்து விலகினாலும்கூட இந்த நிலைமை தான் தொடரும்.

இப்பொழுது ரணிலையும் அகற்ற வேண்டும் என்றும் கேட்கப்படுகிறது. ரணிலின் இடத்துக்கு யார் வந்தாலும் நிலைமை இப்படித்தான் இருக்கும். ஒப்பீட்டளவில் ரணில் மேற்கு நாடுகளுக்கு ஏற்கனவே அறிமுகமானவர். இனி வரக்கூடிய யாரும் தன்னை மேற்குக்கு விசுவாசமானவராக நிரூபிக்கும் வரையிலும் மேற்கு நாடுகளோ ஐ.எம். எப்போ அவரை உடனடியாகத் தூக்கி நிறுத்திவிடாது. இந்த இடத்தில் ஆள்களை மாற்றுவதன் மூலம் பொருளாதாரத்தை நிமிர்த்துவது உடனடிக்கு சாத்தியமில்லை. கிரேக்கத்தில் ஆர்ஜென்டினாவில் அது ஏற்கனவே நிரூபிக்கப்பட்டது. இது மேற்கு நாடுகளுக்கும் தெரியும். அதனால், மேற்கு நாடுகளும் ஐ.எம்.எப்பும் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கோத்தாவை எப்படி அகற்றலாம்? என்று சிந்திக்கின்றன.

ஓர் ஆட்சி மாற்றத்துக்கு கிடைத்திருக்கும் வாய்ப்பை பயன்படுத்துவதே வெளித்தரப்புகளின் நோக்கமாகத் தெரிகிறது. இலங்கைத்தீவை அதன் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து நிமிர்த்துவதற்கான முன் நிபந்தனையாக அது கருதப்படுகிறது. இந்த விடயத்தில் சற்று விலகி நிற்கும் சீனாவும் இலங்கைதீவின் உண்மையான நண்பன் இல்லை. பேராசிரியர் அமிர்தலிங்கம் ஒரு மெய்நிகர் சந்திப்பில் கூறியதுபோல, 'சீனா இலங்கைத்தீவின் உண்மையான நண்பனாக இருந்திருந்தால் கொடுத்த கடனுக்குப் பதிலாக அம்பாந்தோட்டையை குத்தகைக்கு எழுதி வாங்கியிருக்காது. தான் கொடுக்கும் உதவியை ஒரு பொறியாகப் பயன்படுத்தும் நாடு நிச்சயமாக நட்பு நாடு இல்லை. சீனா மட்டுமல்ல, அனைத்துலக உறவுகளில் யாவும் நலன்சார் உறவுகள்தான். அங்கே அன்பு, பாசம், அறம் என்பவையெல்லாம் கிடையாது.'

எந்த ஒரு வெளித்தரப்பும் தன்னுடைய பிராந்திய மற்றும் பூகோள நலன்சார் நோக்கு நிலையில் இருந்துதான் மற்றொரு நாட்டுக்கு உதவும். இலங்கைத்தீவின் பொருளாதார நெருக்கடியானது நாட்டு மக்களுக்கு உணர்த்தும் பேருண்மை அதுதான். கடந்த நான்கு தசாப்தகால அரசியலில் தமிழ் மக்களுக்கு அது தொடர்பாக கொழுத்த அனுபவம் உண்டு. இப்பொழுது சிங்கள மக்கள் அந்தப் பாடத்தை படித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்கள் பதுங்குகுழிக்குள் இருந்து கொண்டு படித்த பாடத்தை சிங்கள மக்கள் எரிபொருள் வரிசையில் நின்று படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சில நாள்களுக்கு முன் நண்பர் ஒருவர் ஒரு படத்தை எனக்குப் பகிர்ந்திருந்தார் அதில் ஒரு சிங்கம் சைக்கிள் ஓடுகிறது. அதற்குகீழே "சைக்கிளே" என்றுசிங்களத்தில் எழுதப்பட்டுள்ளது. வழமையாக "சிங்களே" என்று சொன்னால் அது சிங்களரத்தம் என்று அர்த்தம். ஆயுதமோதல்கள் முடிவுக்கு வந்த பின் தென்னிலங்கையிலும் புலம்பெயர்ந்த சிங்களமக்கள் மத்தியிலும் அவர்களுடைய வாகனங்களின் பின்புறக் கண்ணாடியில் அந்த வாசகம் எழுதப்பட்ட ஸ்டிக்கரை காணலாம். அது ஒரு பெருமைக்குரிய, பரிகசிக்கப் பட முடியாத வார்த்தையாகக் கருதப்பட்ட ஒரு காலம் உண்டு. ஆனால் இன்றைக்குச் சிங்களவர்களே அதைப் பரிகசிக்கும் ஒரு நிலை. கார்ட்டூன்களில் சிங்கள மக்களின் பெருமைக்குரிய குலச்சின்னமாகிய சிங்கம் வாளைத் தூக்கி வீசிவிட்டு பிச்சை எடுக்கிறது, சைக்கிள் ஓடுகிறது. சிங்கம் தாழ்ந்து போய் விட்டது என்பது சிங்கள மக்களின் கவலை. ஆனால் இந்தச்சிறிய தீவை சிங்கம் மட்டும் பிரதிநிதித்துவப்படுத்த முற்படுகிறது என்பது தான் தமிழ் மக்களின் பயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அமெரிக்க - இந்திய பனிப்போர்

# ஈழத்தமிழர்களுக்கு சாதகமானதா?

○ அ.நிக்ஸன்

ரஷ்ய- உக்ரைன் போரினால் அமெரிக்க -இந்திய அரசுகளுக்கிடையே பனிப்போர் மூண்டுள்ளது என்பது உண்மை. ஆனால் இந்த இரு நாடுகளும் இலங்கை விவகாரத்தில் ஒரே புள்ளியில் நின்றுதான் செயற்படுகின்றன என்பதை இந்தப் பத்தியில் பல தடவைகள் கூறியிருக்கிறோம். குறிப்பாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அமெரிக்கச் சார்புடையவர் என்பதும் இந்தியாவுடனான இலங்கையின் உறவுகூட, அமெரிக்காவுக்கும் விருப்பமான நகர்வுதான் என்பதும் வெளிப்படை. இந்த நகர்வு 2009 க்கு முன்னரும் அதற்குப் பின்னரான சூழலிலும் தொடருகின்றன.

இந்த நகர்வின் மூலமே ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டமும் 2009 இல் இல்லாதொழிக்கப்பட்டது. ஆகவே ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை விவகாரத்தில் அமெரிக்க அணுகுமுறை என்பது இந்திய நலன்களுக்கு அமைவானது என்பதை 2009 போர் நிரூபித்துமிருந்தது.

ஆனாலும் 2021 இல் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் வெளியேறியதில் இருந்து தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ரஷ்ய- உக்ரைன் போர் ஆகிய காரணங்களினால், இந்தோ -பசுபிக் உள்ளிட்ட இராணுவ மற்றும் பொருளாதார நகர்வுகளில் அமெரிக்க - இந்திய அரசுகளிடையே அவ்வப்போது எழும் பனிப்போர், ஈழத்தமிழர் விவகாரத்திலோ அல்லது இலங்கையைக் கையாளும் விடயத்திலோ பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

இலங்கை அரசாங்கத்தைக் கையாளுதல், ஈழத்தமிழர் விவகாரம் என்ற இரு புள்ளிகளிலும் அமெரிக்க-இந்திய அரசுகள் ஒரே வகையான அணுகுமுறைகளைக் கையாண்டுவருகின்றன. ஆனாலும் ரஷ்ய- உக்ரைன் போருக்குப் பின்னரான சூழலில், இலங்கையைக் கையாளும் விடயத்தில் அமெரிக்கா சற்று மாறுபட்ட பார்வையைக் கொண்டிருப்பதையும் அவதானிக்கமுடிகிறது.

அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் கடந்த வியாழக்கிழமை செய்தியாளர்கள் சிலரைச் சந்தித்துப் பேசியபோதே இந்த மாறுபட்ட பார்வை அமெரிக்காவுக்கு உண்டென்பதை அறிய முடிந்தது. இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வுப் பிரச்சினை உள்ளிட்ட சமகால புவிசார் அரசியல் நிலைமைகள் குறித்து அமெரிக்கத் தூதுவர் கொழும்பில் செய்தியாளர்களுடன் உரையாடியிருக்கிறார். ரஷ்யாவின் கச்சா எண்ணெய் மீதான அமெரிக்காவின் தடைகள் இலங்கையைப் பாதிக்காது என அமெரிக்க தூதுவர் ஜூலி சங் செய்தியாளர்களிடம் விவரித்திருக்கிறார்.

சர்வதேச நாடுகளுடன் இலங்கை எவ்வாறு இராஜதந்திர உறவுகளைப் பேண வேண்டும் என்பது தொடர்பாக அமெரிக்கா ஆலோசனை வழங்குவதில்லை எனவும் அவர் அடித்துக் கூறியிருக்கிறார். ரஷ்ய- உக்ரைன் போர் காரணமாக ரஷ்யக் கச்சா எண்ணெய் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது .ஆனால் அது மூன்றாம் தரப்பு நாடுகளைப் பாதிக்காது என்று தூதுவர் கூறியிருப்பது இந்திய -ரஷ்ய உறவுகள் பற்றிய அமெரிக்காவின் கசப்புணர்வையும் வெளிப்படுத்தியிருந்தது.

அதாவது ரஷ்யாவிடம் எரிபொருள்களைக் கொள்வனவு செய்ய இலங்கை எடுத்த தீர்மானம் என்பது இந்திய அறிவுறுத்தல்களுடன் அமைந்தது என்பதை அமெரிக்கா அறியாததல்ல. இலங்கையைக் கையாளுதல் என்பதில் அமெரிக்காவையும் தாண்டி இந்தியா தற்போது சில முடிவுகளைத் தனித்து எடுப்பதற்குக் காரணம் ரஷ்ய- உக்ரைன் போர் என்பது வெளிப்படையாகத் தெரிந்த பின்னணியில், அமெரிக்கா இலங்கையோடு நிதானமாகப் பயணிக்க முற்படுவதையே தூதுவரின் விளக்கம் சித்திரிக்கின்றது.

அதாவது இந்தியாவைப் பகைத்துக் கொள்ளாத மற்றும் இலங்கையைக் கையாளுதல் என்பதில் அமெரிக்க-இந்திய அணுகுமுறைகள் தொடர வேண்டுமென்ற நோக்கிலும் அமெரிக்கா தற்போது நிதானமாகச் செயற்படுகின்றது என்பதை தூதுவரின் கருத்துக்கள் எடுத்துக் காட்டுகின்றன.

அமெரிக்கா தனது ஆற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறன் கொண்டது என்றும் தூதுவர் கூறியிருக்கிறார். அமெரிக்கா ரஷ்யாவின் கச்சா எண்ணெய் மீது அமெரிக்காவில் மாத்திரமே பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது என்றும், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெயை வாங்குவது என்ற மூன்றாம் தரப்பினரின் முடிவு அந்த நாடுகளின் விருப்பத்துக்குரியது எனவும் தூதுவர் கூறியதன் மூலம் இந்தியாவை அமெரிக்கா பகைத்துக் கொள்வதைத் தவிர்ப்பதாகவே தெரிகிறது. இந்தோ- பசுபிக் விவகாரத்தில் இந்தியாவுடன் அமெரிக்காவுக்குத் தற்போது முரண்பாடுகள் இருந்தாலும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவை எதிர்கொள்ள இந்திய உதவி அமெரிக்காவுக்கு அவசியம் என்ற பின்னணியிலேயே இந்தியாவுடன் நேரடியான பகைமைக்குள் அமெரிக்கா செல்ல விரும்பவில்லை என்பது வெளிப்படையாகின்றன.

ரஷ்ய-உக்ரைன் போர் விவகாரத்தில் அமெரிக்காவுடன் ஏற்பட்டிருக்கும் கசப்புணர்வுகள் தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் வெளியிட்ட கருத்துக்களை மையமாகக் கொண்டு, சில புலம்பெயர் தமிழ் அமைப்புகள் அதனை ஈழத்தமிழர்களுக்குச் சாதகமாகக் கருதுகின்றன.

அதாவது இந்தியாவுடன் ஏற்பட்டுள்ள பனிப்போரினால், இந்தியாவைக் கடந்து அமெரிக்கா ஈழத்தமிழர் விவகாரத்தைக் கையிலெடுக்குமென்றும், அதனால் தமிழ் இன அழிப்புக்கான சர்வதேச விசாரணைகள், நிரந்த அரசியல் தீர்வு போன்றவற்றில் இலங்கைக்கு அமெரிக்கா கடும் அழுத்தம் கொடுக்கும் எனவும் சில புலம்பெயர் தமிழ் அமைப்புகள் நம்புகின்றன.

ஆனால் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி தொடர்பாக செய்தியாளர்களிடம் வெளிப்படுத்திய கருத்தின் தொனி, இலங்கையைக் கையாளும் விடயத்தில் இந்தியாவை அமெரிக்கா ஒருபோதும் பகைத்துக் கொள்ளாது அல்லது இந்திய நலன்களுக்கு மாறாக அமெரிக்கா எந்தவொரு முடிவையும் எடுக்காது என்பதே.

ஆகவே ரஷ்யாவிடம் இலங்கை எரிபொருள்களைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளதால், இலங்கை மீது அமெரிக்கா கோபம் கொள்ளும் எனவும் அதனால் இந்தியாவைக் கடந்து ஈழத்தமிழர் விவகாரத்தில் அமெரிக்கா தலையை நீட்டும் எனவும் சில தமிழ் அமைப்புகள் கனவு காண்பது அடிப்படையில் தவறு.

ரஷ்ய-உக்ரைன் போரின் பின்னரான சூழலில் ஏற்பட்டிருக்கும் அமெரிக்க -இந்திய பனிப்போர் ,இலங்கையுடனான அணுகுமுறைகளில் முரண்பாட்டில் உடன்பாடாகச் சில விட்டுக் கொடுப்புகளை அந்த நாடுகளிடையே (அமெரிக்காவிடமும், இந்தியாவிடமும்) ஏற்படுத்தலாம். ஆனால் ஈழத்தமிழர் விவகாரத்தில் அமெரிக்க -இந்திய அரசுகளின் நிலைப்பாடுகளில் மாற்றம் இருக்காது என்பதே யதார்த்தம்.

இலங்கைத்தீவு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி, எரிபொருள் தட்டுப்பாடு பிரச்சினைகளுக்கு ஒரு முடிவு ஏற்பட வேண்டுமென்பதில் அமெரிக்க -இந்திய அரசுகள் உறுதியாகவுள்ளன. இதே நிலைப்பாட்டோடுதான் சீனாவும் இருக்கிறது. இலங்கைக்கான இந்தியாவின் நான்கு பில்லியன் டொலர் நிதியுதவியைச் சீனா பாராட்டியமை, இலங்கையின் தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காணப்பட வேண்டுமெனச் சர்வதேச நாடுகள் விரும்புகின்றன என்பதையே காண்பிக்கின்றன. தமது புவிசார் அரசியல் நோக்கில் கணிசமான பேரம்பேசுதல்களை அமெரிக்க




- இந்திய அரசுகள் மறைமுகமாகவும் நேரடியாகவும் மேற்கொண்டுவருகின்றன என்பது கண்கூடு. குறிப்பாக வடக்கு, கிழக்குப் பிரதேசங்களை மையப்படுத்திய வளங்கள் மற்றும் நிலங்களை இந்தியா கோருகின்றது. இந்தியாவின் இந்தக் கோரிக்கைக்கு அமெரிக்காவும் ஆதரவும் தெரிவிக்கின்றது.

அதேபோன்று கொழும்புத் துறைமுகங்களை மையப்படுத்திய மற்றும் இலங்கைக்கான எரிசக்தி விடயங்களைக் கையாளுதல் உள்ளிட்ட அமெரிக்கப் பேரம் பேசுதல்களை இந்தியாவும் ஆதரிக்கின்றது. ஏனெனில், சீன ஆதிக்கம் இலங்கையில் நிரந்தரமாகிவிடக்கூடாது என்பதில் அமெரிக்க - இந்திய அரசுகள் ஒரே புள்ளியில் நன்கு அவதானமாக இருக்கின்றன.

இந்த இடத்திலேதான் ரஷ்ய- உக்ரைன் போரினால் எழுந்துள்ள அமெரிக்க -இந்தியப் பனிப்போர் ஈழத்தமிழர் விவகாரத்தில் சாதகமாக மாறும் என்று கதை சொல்வது, ஈழத்தமிழர்களைத் தவறாக வழி நடத்தும் என்பதை உணர வேண்டும்.

ரஷ்யாவிடம் இருந்து எரிபொருள்களை இலங்கை கொள்வனவு செய்வதால், அமெரிக்காவுக்குச் சிறிய கவலை இருக்கலாம். ஆனால் அதன் மூலம் இலங்கையை அமெரிக்கா பழிவாங்கும் என்றோ அல்லது ஈழத் தமிழர் விவகாரத்தைக் கையெடுத்து இலங்கையை அச்சுறுத்தும் என்றோ கருத இடமில்லை.

மக்கள் விடுதலை முன்னணி எனப்படும் ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்காவைச் சந்தித்த காரணங்களைக் கூட அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருக்கிறார்.

சகல அரசியல் கட்சித் தலைவர்களையும் சந்திக்க வேண்டும் என்பது தனது நிலைப்பாடு என்ற அடிப்படையில் ஜே.வி.பியையும் சந்தித்தாகத் தூதுவர் கூறுகிறார். ஜே.வி.பி நல்ல புரிதல் உள்ள கட்சி என்றும் தூதுவர் பாராட்டியிருக்கிறார். ஆகவே இலங்கை அரசாங்கத்துடனோ அல்லது சிங்கள அரசியல் கட்சிகளுடனோ அமெரிக்கா பகைத்துக் கொள்ள விரும்பாது என்பதையே இந்த நகர்வுகள் எடுத்துக் காண்பிக்கின்றன.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம்கூட அமெரிக்க-இந்திய புவிசார் அரசியல் நலன்களுக்கானதே. அதற்காக ஈழத்தமிழர்களின் விவகாரம் ஆயுதமாகக் கையாளப்பட்டதையும் இந்தப் பத்தியில் ஏலவே வெளிப்படுத்தியிருக்கிறோம்.

ஆகவே தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இலங்கையை மேலும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கப் பனிப்போர் கால 'முரண்பாடுகளில் உடன்பாடாக' அமெரிக்க-இந்திய அரசுகள் மேற்கொள்ளும் நகர்வுகளுக்கு மத்தியில், ஈழத்தமிழர் விவகாரத்தைச் சர்வதேச அரங்கில் இருந்து முற்றாக நீக்க, சிங்கள அரசியல் தலைவர்கள் தமது கட்சி அரசியலுக்கு அப்பால் மேற்கொள்ளும் இராஜதந்திர நகர்வுகள் வெற்றியளித்து வருவதை அவதானிக்கலாம்.


அதாவது இலங்கை மீதான அமெரிக்க - இந்திய அரசுகளின் பேரம் பேசுதல்களுக்கு உடன்படும் சிங்கள ஆட்சியாளர்கள் ஈழத் தமிழர் விவகாரத்தில் இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்குச் சாதகமாகப் பல நிபந்தனைகளையும் முன்வைத்துள்ளனர். அந்த நிபந்தனைகளை அமெரிக்க-இந்திய அரசுகளும் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்ள வேண்டிய புவிசார் அரசியல் சூழலும் உண்டு.

இனப்பிரச்சினை விவகாரத்தில் சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த நிபந்தனைகளுக்கு மாற்றீடாக இலங்கை சமர்ப்பித்த யோசனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாக நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச கூறியதன் மூலம் ஈழத்தமிழர் விவகாரம் நீக்கம் செய்யப்படுகின்றது என்ற உண்மை தெரிகிறது. பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் இலங்கை தமது ஒற்றையாட்சித் தத்துவத்தை நிலை நிறுத்தக் கண்ணும் கருத்துமாகச் செயற்படுவதைத் தமிழர் தரப்பு வேடிக்கை பார்ப்பதோடு நின்று விடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூரும் சிறிலங்காவும்

ந.பரமேஸ்வரன்




இலங்கைக்கும் சிங்கப்பூருக்குமிடையே பல ஒற்றுமையான விடயங்கள் காணப்படுகின்றன. இரு நாடுகளும் பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் பிரித்தானியரின் செல்லப்பிள்ளைகளாக போஷிக்கப்பட்ட நாடுகள்.

இலங்கை சுதந்திரமடைந்து பதினாறு வருடங்களின் பின்னர் 1964 ஆம் ஆண்டு தான் சிங்கப்பூர் சுதந்திரமடைந்தது. இன்று சிங்கப் பூர் அபிவிருத்தியடைந்த நாடுகளின் தரவரிசையில் எட்டாவது இடத்தில் உள்ளது. சிங்கப்பூர் டொலர் உலகநாடுகளின் தரவரிசைப் படுத்தலில் பதின்மூன்றாவது இடத்தில் உள்ளது.

1964 ஆம் ஆண்டு சுதந்திரமடைந்த சிங்கப்பூர் இன்று ஐரோப்பிய அமெரிக்க நாடுகள் யாவற்றையும் பின் தள்ளி வளர்ச்சியடைந்த நாடுகள் பட்டியலில் எட்டாவது இடத்தில் உள்ளது என்றால் அதற்குக்காரணம் ஊழலற்ற நேர்மைத்திறன் மிக்க ஆட்சியே. இலங்கை உலகநாடுகளின் தரவரிசையில் 88 ஆவது இடத்திலும் 39 ஆசிய நாடுகளில் 29 ஆவது இடத்திலும் உள்ளது என்றால் அதற்குக் காரணம் சிங்களப் பேரினவாதிகளின் இனவாத ஆட்சியே என்பதை உலகமே அறியும். சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள் இனியும் திருந்தாவிட்டால் மடகாஸ்கர், சோமாலியா, புருண்டி வரிசையில் இலங்கையும் இடம்பிடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

1956 ஆம் ஆண்டு முதல் தடவையாக S.W.R.D.பண்டாரநாயக்கவின் அழைப்பை ஏற்று இலங்கைக்கு வந்தார் சிங்கப்பூரின் முதலாவது பிரதமரான லீ குவான் யூ. அப்போது கொழும்பிலிருந்த கட்டடங்களைப்பார்த்து அவர் வியந்ததுடன், இலங்கையின் உறுதியான அந்நியச்செலாவணி இருப்பையும் பார்த்து விழிப்படைந்தார். பிரிட்டனின் குடியேற்ற நாடுகளின் 'மொடலாக' விளங்கிய இலங்கையில் சிங்கப்பூரை விட வளங்களும் அடிக்கட்டுமானமும் அதிகமாக இருந்தன.

அப்போது தான் தனிச்சிங்களச்சட்டத்தைக் கொண்டுவந்து அறுதிப்பெரும்பான்மையுடன் வெற்றியீட்டிய மமதையில் S.W.R.D.பண்டாரநாயக்கா இருந்தார். சிங்கள மொழிக்கும் ,பௌத்த மதத்துக்கும் முன்னுரிமை என்ற விடயம் தான் இலங்கையில் உள்நாட்டு சிக்கல் உருவாகுவதற்குக் காரணம் என லீ குவான் யூ கருதினார். 'இதன் காரணமாக மூன்று ஆண்டுகள் கழித்து பண்டாரநாயக்கா பௌத்த பிக்கு ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்ட போது தான் ஆச்சரியப்படவில்லை' என லீ குவான் யூ கூறியுள்ளார். சிங்கள மொழிக்கும் பௌத்த மதத்துக்கும் முன்னுரிமை என்ற பண்டாரநாயக்கவின் தீர்மானம் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் விளைவித்தது.

இது தமிழர்களிடையே இணக்கமின்மையை ஏற்படுத்தியதுடன் தமிழர்களை அழிக்கும் நடவடிக்கை எனவும் லீ கருதினார். ஆங்கிலத்தில் (dispose) என்ற சொல்லையே லீ பாவித்துள்ளார். (FROM THIRD WORLD TO FIRST Lee Kuanyew). தமிழர்கள் மீது மிகுந்த அனுதாபம் கொண்டிருந்த லீ, தமிழர்கள் புத்திசாலிகள், சுறுசுறுப்பானவர்கள், கடின உழைப்பாளிகள் (active and intelligence, who worked hard) என்றும் கூறியுள்ளார். 'சிங்களப்பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தாலும் தனிச் சிங்கள சட்டத்தாலும் தமிழர்கள் தண்டனைக்குள்ளானார்கள். தமிழர்கள் சிங்களவர்களை விட ஆற்றல் மிகுந்தவர்கள்; சிங்களவர்கள் தமிழர்களை பின் தள்ளினார்கள்' எனவும் லீ மேலும் தெரிவித்துள்ளார். ஒருவேளை லீ குவான் யூ உயிரோடு இருந்திருந்தால் , அவர் 2022 இல் இலங்கைக்குவிஜயம் செய்திருந்தால் 'வெளிநாட்டு பணத்தில் சாகசம் புரியும் மோட்டார் சைக்கிள் வீரர்களையும், பரமேஸ்வராச் சந்தியிலிருந்து 'ஸ்கூட்டி'யிலும் ,'வேகோ'விலும் திருநெல்வேலி ரியூட்டரிக்கு செல்லும் தமிழ்நங்கையரையும்பார்த்து என்ன சொல்லியிருப்பாரோ தெரியாது.

சிறிமாவோ பண்டாரநாயக்கா இலங்கையை குடியரசாக்கிய விடயத்தையும் லீ விமர்சித்துள்ளார். சிறிமாவோ பண்டாரநாயக்கா சிலோன் என்ற இலங்கையின் பெயரை 'சிறிலங்கா' என மாற்றினார் ஆனால் இப்போதும் இலங்கைத் தேயிலை, சிலோன் ரீ என்ற பெயருடனேயே வெளிநாடுகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் பேராதனைப் பல்கலைக்கழகமும் கொழும்புப் பல்கலைக்கழகமும் மட்டுமே இலங்கையில் இருந்ததுடன் இலங்கையின் கல்வி தரமானதாகவும் இருந்தது. தனது இலங்கை விஜயத்தின் போது 'லீ ', பேராதனைப் பல்கலைக்கழக துணைவேந்தரிடம் 'நீங்கள் என்ன மொழிமூலம் கல்வி புகட்டுகிறீர்கள்?' என்று கேட்டதற்கு 'சிங்கள மாணவர்களுக்கு சிங்கள மொழி மூலமும் , யாழ்ப்பாண மாணவர்களுக்கு தமிழ் மொழி மூலமும் ,பறங்கி இன மாணவர்களுக்கு ஆங்கில மொழி மூலமும் கல்வி புகட்டுவதாக' பேராதனைப் பல்கலைக்கழக துணைவேந்தர் பதிலளித்துள்ளார். இன்னொரு கேள்வியையும் லீ கேட்டார், 'மூன்று வெவ்வேறு மொழிகளில் கல்விகற்கும் பொறியியலாளர்களால் எப்படி ஒன்று பட்டு ஒரு பாலத்தை கட்ட முடியும்?' அதற்கு துணைவேந்தர் 'இந்தக்கேள்வியை அரசியல்வாதிகளிடம் தான் கேட்க வேண்டும்' எனப் பதிலளித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு தரவரிசைப்பட்டியலில் சிங்கப்பூர் தேசியப்பல்கலைக் கழகம் ஆசியாவில் மூன்றாவது இடத்திலும் சர்வதேச தரவரிசைப்பட்டியலில் 21 ஆவது இடத்திலும் உள்ளது. பேராதனைப் பல்கலைக்கழகம் 1600 வது இடத்துக்குத் தள்ளப்பட்டு விட்டது.

இலங்கையை சிங்கப்பூராக மாற்றப்போகிறேன் என ஜே.ஆர். கூறியதுடன் லீயையும் இலங்கைக்கு அழைத்தார்; ஆனால் பிரச்சினைக்கு தீர்வு காணாமலே ஜே.ஆர். ஓய்வுபெற்று விட்டாரெனவும் லீ தெரிவித்துள்ளார்.



'பிரேமதாஸவை ஒரு இனவாதி என்றும் மஹிந்த தான் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்ததாகவும் அவரது உரைகளில் தெரிவித்துள்ளார்; அவர் ஒரு தீவிரவாதி . சிங்களவர்கள் பெரும்பான்மையாக உள்ள ஒரு நாட்டில் ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற தேர்தல் முறை ஒரு போதும் பிரச்சினையை தீர்க்க உதவாது . இலங்கையர்கள் இலங்கையை சிங்கப்பூராக மாற்றுவதற்கு ஆசைப்படுகின்றனர். ஆனால் அது ஒரு போதும் நடவாது 'எனவும் லீ தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரின் சனத்தொகையில் 75.9% சீனர்கள்; சீன மொழியை சிங்கப்பூரின் உத்தியோகபூர்வ மொழியாக பிரகடனம் செய்யுமாறு மாவோ பல தடவைகள் லீயிடம் கேட்ட போதும் லீ அதற்கு மறுப்பு தெரிவித்து விட்டார்.

ஒரு முறை லீயின் அமைச்சரவையில் அங்கம் வகித்த அமைச்சர் ஒருவர் ஊழல் மோசடியில் சிக்கி பிடிபட்டு விட்டார். தன்னை காப்பாற்றுமாறு லீயிடம் அவர் மன்றாடிய போதும் லீ அவரைக் காப்பாற்ற முன்வரவில்லை; இறுதியில் சம்பந்தப்பட்ட அமைச்சர் தற்கொலை செய்து கொண்டார். சில வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் பிரதமராக பதவி வகித்த ஒருவரின் பெயருக்கு கொழும்பு துறைமுகத்துக்கு வந்த கொள்கலன்களில் பெருமளவு போதைப்பொருள் பிடிபட்டது; அப்போதைய ஜனாதிபதியின் தலையீட்டால் பிடிபட்ட போதைப்பொருள் விடு விக்கப்பட்டது.

லீ தமிழர்கள் உட்பட அனைத்து இன மக்களையும் அரவணைத்து ஆட்சியை கொண்டு சென்றபடியால் சிங்கப்பூர் , ஐரோப்பிய- அமெரிக்க நாடுகளுக்கு இணையாக வளர்ச்சியடைந்துள்ளது. சிங்கள அரசியல்வாதிகள் சிங்களத்தையும் பௌத்தத்தையும் முன்னிறுத்தியபடியால் இந்து சமுத்திரத்தின் முத்து இன்று சோமாலியா, எத்தியோப்பியா வரிசைக்கு சென்று கொண்டிருக்கிறது.

# ஊர்ப்புதினம்




இராகவன்

மூத்தண்ணா ,இளையண்ணா ரண்டு பேரும் அப்ப பருத்தித்துறைக் ஹாட்லிக் கல்லூரியில தான் படிச்சவங்கள். பஸ்ஸில தான் போய் வாறவங்கள். மூத்தண்ணா சரியான காரியகாரன். காலமை எழும்பி ,வெளிக்கிட்டுச் சரியா பஸ் வாற நேரத்துக்கு போய் நிண்டு ,ஏறிப் போடுவான். இளையண்ணா சரியாக வாய்பாத்தவன். நேரத்துக்கு வெளிக்கிட்டு, பஸ் எடுத்துப் பள்ளிக்கூடத்துக்குப் போய்ச் சேருவம் எண்ட சிந்தனையில்லை. நனைஞ்சு கொண்டு நிண்டுட்டு அரும்பொட்டில வெளிக்கிட்டு விழுந்தடிச்சு ஓடுவான்.

"ம்... கிணத்துக்கட்டில பிள்ளையைக் கிடத்திப் போட்டு வந்த பொம்பிளை மாதிரித் துரை ஓடுறார் பாரன்" எண்டு அம்மா அடிக்கடி சொல்லுவா. தைப்பொங்கலண்டு பொது விடுமுறை நாள். பிரச்சினையில்லாமல் பம்பலாப் போகும். அடுத்தநாள் பொதுவாப் பள்ளிக்கூட நாளாய்த் தானிருக்கும். மூத்தண்ணா வழமைபோல பஸ் ஏறிப்போடுவான். இளையண்ணா எழும்பி இராக்கொடிக்கு விட்டுப் படுத்த பட்டத்தைத் தேடிப் போடுவான். படுத்தபட்டம் இவர் தேடிப் போய் எடுக்குமட்டும் காத்துக் கிடக்குதே? அதை யாரும் 'சுட்டுக் கொண்டு' போடுவாங்கள். இவரும் பட்டத்தைத் தேடிப் போய் 'வெறுங்கையோடு இலங்கை புக்கான்' எண்ட கதையா வெறுங்கையோட' வீட்டை திரும்பிவந்து விழுந்தெழும்பித் தடமடிச்சுப் பள்ளிக்கு வெளிக்கிட்டோடுவான்.

"ம்... பட்டம் எடுக்கப் போன பட்டதாரி பட்டமெடுக்காமல் திரும்பி வந்து பள்ளிக்கு ஓடுற வடிவழகைப் பாரன்" எண்டு அம்மா புறுபுறுப்பா.

ஒருமுறை தைப்பொங்கலுக்கு இளையண்ணா வழமையான டிசைனில பட்டம் செய்யாமல் கடும் மஞ்சள், செம்மஞ்சள் ரண்டு கலர் ரிஸ்யூக்களை மட்டும் சரிக்கரைவாசியா ஒட்டி, ஒரு படலம் பட்டம் செய்தான். எனக்கு அந்தக் கலர் மிக்ஸிங் துப்பரவாப் பிடிக்கேல்ல. வழமைபோல தைப்பொங்கலண்டு அதைப் பத்திரகாளி கோயிலடியில வைச்சு ஏத்தி, பின்வீதியால கடத்திக் கொண்டு வந்து வீட்டில கட்டி , ராக்கொடிக்கு விட்டான்.





வழமையான டிசைனை விட வித்தியாசமான டிசைன் எண்டதால அந்தப் பட்டம் படுக்காமல் இராக்கொடிக்கு நிக்குமெண்டு நினைச்சன். ஆனால் அண்டிரவு கடும்பனி . அதால பழைய குருடி கதவைத் திறடி எண்டு அந்தப் பட்டமும் படுத்திட்டுது. பிறகென்ன, அடுத்த நாள் காலமை இளையண்ணா எழும்பிப் பட்டத்தைத் தேடிப் போய் 'வெறுங்கையோடு இலங்கை புக்கான்'தான். பிறகு வழமைபோல் தட்டுப்பட்டுத் தடமடிச்சு வெளிக்கிட்டுப் பள்ளிக்கூடம் போனான்.

நான் ஏற்கனவே ஊர்ப்புதினத்தில கண்ணாடி வள்ளிப் பிள்ளையக்கையைப் பற்றி விவரமாக் குறிப்பிட்டிருக்கிறன். அந்தக் கண்ணாடி வள்ளிப்பிள்ளையக்கையின்ர மூத்த தமக்கை தான் சின்னாச்சியக்கை. அவவின்ர மகள் பாக்கியம் . அவ எங்கட அம்மாவோட ஒண்டாப் படிச்சவா. அதால அவை எங்கட குடும்பச் சிநேகிதம். பாக்கியக்காவின்ர மனிசன் பரஞ்சோதியெண்டு. அவரை ஊருக்குள்ளை 'பரதநாட்டியம் பரஞ்சோதி' எண்டு செல்லமாய் அழைப்பினம். சொல்லி வேலையில்லை. ஆள் 'சலங்கை ஒலி', கமலஹாசனைப் போல அந்தமாதிரிப் பரதநாட்டியமாடுவார். இதில பெரிய சோகம் என்னெண்டால் இந்தியன் ஆமியின்ர காலத்தில பரஞ்சோதியண்ணை யாக்கருப் பிள்ளையார் கோயிலுக்குள்ள நிக்கேக்குள்ள, ஆமிக்காறர் றொக்கற் அடிச்சு அவருக்கு ஒருகால் போட்டுது. பாக்கியக்காவுக்கு செந்தூரன், மயூரன், கோமதி எண்டு மூண்டு பிள்ளையள். இதில மயூரன் பிறவியிலேயே வாய் பேசமாட்டார். செந்தூரன் இளையண்ணாவோட கூடப் படிச்சவர். ஒருநாள் அவையின்ர வீட்டை போகேக்குள்ள அந்த வித்தியாசமான டிசைனில இருந்த எங்கட பட்டத்தைக் கண்டன். 'அண்ணா அங்கார், எங்கடை பட்டம் 'எண்டு நான் சொல்ல 'பேசாமலிரடா' எண்டு இளையண்ணா சொன்னான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வந்தபின் காக்கும் 'சிஸ்டமும்' வராமலே போகவுள்ள வடக்குக்கான விசேட மகளிர் சிகிச்சை மையமும்!

மு.கார்த்திகேசு

கடந்த மாசி மாத ஆரம்பத்தில் ஒருநாள். மூசிப் பெய்த பனியுடன் விடிந்த காலை நேரத்தில் "புதிய கட்டடத்துக்கு 'கரண்ட் லைன்' எடுக்க எண்டு 'சிஈபி (CEB)' ஆக்கள் வந்து ஆஸ்பத்திரிக்குள்ள நிக்கிற பழைய மரங்களை வெட்டுறாங்கள். ஒருக்கா பாருங்கோ" என்று கிளிநொச்சி மருத்துவமனையில் இருந்து ஒரு தொலைபேசித் தகவல் கிடைத்தது.

கிளிநொச்சியில் பிறந்து ,கிளிநொச்சியில் வளர்ந்து ,கிளிநொச்சியிலே வாழ்ந்து வருவதனால் எனக்கு தகவல் மூலங்களுக்கு குறைச்சல் இல்லைத்தான். என்னோடு வளர்ந்து, என்னோடு படித்து ,என்னோடு சேர்ந்து விளையாடிய பலர் இன்று பல துறைகளில் பணியாற்றுகிறார்கள். அப்படி அவர்கள் ஊடாக எனக்கு வந்து சேரும் தகவல்களில் பொது நலனுக்குத் தேவையான தகவல்களை மட்டுமே வெளிப்படுத்தி வருகிறேன்.

ஆனால் அவை எவற்றையும் கருத்தில் எடுத்து தீர்வுகாணத் தவறும் அதிகாரத்தரப்பினர் காலத்திற்குக் காலம் எனக்கு தகவல் தருபவர்கள் யார் எவர் என்பதை இனங்காணவே அதிகம் முற்படுவதையும் பார்த்திருக்கிறேன்.

ஆதாரங்களுடன் சுகாதாரத்துறையினர் தொடர்பில் வெளிப்படுத்திய விடயங்களுக்கு எவரும் நடவடிக்கை மேற்கொள்ளாதிருப்பது பேரவலம். அதனை அடியொற்றி சிஸ்டம் பிழைத்துவிட்டதாக நான் எழுதிய கட்டுரைக்கு ஒருமித்து எதிர்ப்பு எழுப்பினார்கள் மாவட்ட சுகாதாரத்துறையினர்.

இதனால் இனிமேல் சுகாதாரத்துறையில் சுட்டிக்காட்டப்படும் விடயங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற நம்பிக்கை அற்றுப்போய்விட்டது. அண்மைக் காலமாக சுகாதாரத்துறை தொடர்பாக நான் எதையும் தெரிவிக்காது ஒதுங்கியிருப்பதற்கு இதுவும் ஒரு காரணம். இருப்பினும், இந்த மண்ணின் எதிர்கால சந்ததி குறித்த அக்கறையுடன் எழுதிவரும் எமக்கு எதிர்கால நோக்குகள் எதுவும் இல்லாது மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளைக் கண்டும் காணாமல் இருக்க முடிவதில்லை. அதனால் வந்த தகவலை மேற்கொண்டு ஆராய்ந்தபோது கிடைத்த விபரங்களை கட்டுரையாக்கி வாசகர்களுக்கு தருகிறேன்.

## யாருக்கும் எதுவும் தெரியாது

என்னோடு தொடர்பில் உள்ள சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களில் பலர் எனது பள்ளித் தோழர்கள். இன்னும் பலர் பல தளங்களில் நான் ஊடாடியமையாலும் எனது ஊடக தொழிலாலும் தொடர்பு வட்டத்துக்குள் வந்தவர்கள்.

ஆனால் வேடிக்கை என்னவென்றால், இவர்களில் எவருக்குமே அந்தப் புதிய கட்டடம் தொடர்பில் தெளிவாக எந்தத் தகவலும் தெரியாது. ஆளாளுக்கு ஒரு கதை சொன்னார்கள்.

"வீ.ஓ.ஜி சரவணன் டொக்ரர் தான் உந்த கட்டடத்தை கட்டவேணும் எண்டு தொடங்கினவர்"

"முந்தின சுகாதார அமைச்சர் சத்தியலிங்கத்தார்தான் ஏதோ திட்டத்தில இதை கட்ட வெளிக்கிட்டவர்"

"வடக்குக்கான மகளிர் பொது மருத்துவமனை எண்டு நினைக்கிறன்"

"கிளிநொச்சி பொறியியல் பீடத்தினர் தான் திட்டம் போட்டவை. அவயளைக் கேட்டால் தெரியும்" என்று பல்வேறு ஊகங்களைத் தான் அவர்களால் தரமுடிந்தது

இறுதியில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் 'உள்ளதை அறிவோம்' என்று கிளிநொச்சி மாவட்ட சுகாதாரப் பணிமனைக்குக் கோரிக்கையை அனுப்பி மூன்று மாதங்களுக்கு மேலாகியும் உரிய பதில் இன்னமும் கிடைக்கவில்லை.

முதலில் "மாகாண சுகாதாரப் பணிமனையைத்தான் கேட்க வேண்டும்" என்றார்கள். நான் "மேன்முறையீடு செய்யப்போகிறேன்" என்றதும், 'கிளிநொச்சி மருத்குவமனைக்கு உங்களது தகவல் அறியும் கோரிக்கையை அனுப்பி விபரம் கேட்டுள்ளோம்' என்று சுருதியை மாற்றினார்கள். ஆனால் இதுவரை எவ்வித பதிலும் இல்லை .எனவே இப்போது இதுகுறித்து தகவல் அறியும் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## ஆரம்பம்

கிடைத்த சிறிய தகவல்களுடன் மேலும் ஆழமாகத் தேடத்தொடங்கினேன். முன்னாள் வடக்கு சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம், கிளிநொச்சி பொறியியல் பீடத்தினர் மற்றும் மருத்துவத்துறையினர் ஆகியோருடன் உரையாடி ஓரளவு தகவல்களைப் பெறமுடிந்தது.

இந்தத் திட்டத்தினை இலங்கையில் செயற்படுத்தும் வாமெட் (VAMED) மற்றும் நிர்மானப்பணிகளை மேற்கொள்ளும் அக்சஸ் (Acess) ஆகியவற்றில் இருந்து மேலும் சில தகவல்களைப் பெற முடிந்தது. அரசு - புலிகள் சமாதானப் பேச்சுகள் நடந்த அதே காலப்பகுதியில், வடக்கில் மட்டுமல்லாது முழு நாட்டிலுமே நவீன வடிவத்தில் எதிர்கால நோக்குடன் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டவை தான் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் பொது மருத்துவமனைகள்.

அந்தச் செயற்திட்டங்கள் முற்றாக நிறைவடைவதற்கு முன்பாகவே சமாதானப் பேச்சுகள் குழம்பி யுத்தமேகம் சூழ்ந்ததை அடுத்து முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத இந்த மருத்துவமனைகளை வைத்தே மருத்துவத்துறையினர் வன்னி மக்களுக்கு சேவைகளை வழங்க ஆரம்பித்தனர்.

மீள்குடியேற்றத்தின் பின்னர் இந்த இரண்டு மருத்துவமனைகளினதும் மீள் அபிவிருத்தி குறித்து பலதடவைகள் பேசப்பட்டாலும் காரியம் இலகுவில் கைகூடிவரவில்லை.

இடைநடுவே முல்லைத்தீவு மருத்துவமனையின் அமைவிடம் மற்றும் நிலப்பரப்பின் உரிமை தொடர்பில் ஏற்பட்ட குழப்பநிலையால் எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள் காரணமாக அந்த மருத்துவமனையின் அபிவிருத்தி தற்காலிகமாகத் தடைப்பட்டுப் போனது.

இருப்பினும் கிளிநொச்சி பொது மருத்துவமனையின் இரண்டாம் கட்ட அபிவிருத்திக்கான முயற்சிகள் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு பல திட்ட முன்மொழிவுகள் (Project Proposals) வெளிநாட்டு அரசாங்கங்களுக்கு மத்திய சுகாதார அமைச்சின் ஊடாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.



## மகளிருக்கான விசேட சிகிச்சை மையம்

இந்த நிலையில் 'வடக்கிலேயே மகளிருக்கான ஒரு விசேட சிகிச்சை மையத்தினை (Specialized centre for Women's health in Northern Province) உருவாக்க வேண்டும்' என்ற பரிந்துரை விசேட முன்மொழிவாக (Special Proposal) மருத்துவ நிபுணர்கள் கொண்ட ஆலோசனைச் சபையினால் வடக்கு மாகாண சபைக்கு 2015/2016 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்டது.

இந்தக்குழுவில் ஒரு உறுப்பினராக இருந்தவரே மகப்பேற்றியல் நிபுணர் சரவணபவன். அவர் குறித்த பரிந்துரை மேற்கொண்ட காலப்பகுதியில் கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனையில் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

இலங்கையில் அவ்வாறான விசேட மகளிர் சிகிச்சை மையங்களாக கொழும்பு டி சொய்ஸா மகளிர் மருத்துவமனை, கொழும்பு காசில் வீதி மகளிர் மருத்துவமனை, காலி மகளிர் மருத்துவமனை ஆகியன மாத்திரமே செயற்படுகின்றன.

இதன் காரணமாக வடக்கில் உள்ள கர்ப்பவதிகள் உள்ளிட்ட பெண்களுக்கு விசேட சிகிச்சைகள் தேவைப்படும்போது தென்பகுதிக்கு அனுப்பப்படும் நிலையே தற்போதுவரை காணப்படுகிறது.

அது தவிர, குழந்தைப் பேறு கிடைக்காதவர்களுக்கான கருவளவாக்கல் சிகிச்சையினைப் பெறுவதற்கும் வடமாகாண மக்கள் பெரும் பொருட்செலவில் கொழும்பிற்கும் வெளிநாடுகளுக்கும் செல்லவேண்டியுள்ளது.

இதனால் வடமாகாண மக்களுக்கு ஏற்படும் சிரமங்கள், பொருளாதார நெருக்கீடுகள் மற்றும் வசதியீனங்களைக் கருத்திற்கொண்டு, அவை எல்லாவற்றுக்கும் நிரந்தரத் தீர்வாகவே துறைசார் வல்லுநர்களால் மேற்படி திட்ட முன்மொழிவு வடக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட பரிந்துரைக்குச் செயல்வடிவம் கொடுப்பதற்கு விரைந்து செயற்பட்டவர் அப்போதைய வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் சத்தியலிங்கம். அவர் தனது விடாமுயற்சியால் மத்திய சுகாதார அமைச்சின் ஊடாக, நெதர்லாந்து அரசின் நிதி உதவியுடன் வடமாகாணத்தில் நான்கு விசேட சிகிச்சை மையங்களை நிர்மாணிக்கும் பாரிய செயற்திட்டத்தினைக் கொண்டு வந்தார்.

கிளிநொச்சியில் வடமாகாணத்துக்கான விசேட மகளிர் சிகிச்சை மையம், வவுனியாவில் வடமாகாணத்துக்கான இதய மற்றும் சிறுநீரக சிகிச்சை மையம் மாங்குளத்தில் தண்டுவடம் பாதிப்புற்ற மற்றும் விசேட தேவையுடயவர்களுக்கு சேவை வழங்குவதற்கான விசேட புனர்வாழ்வு மையம் (Special Rehabilitation Centre for Northern Province) ஆகியவற்றுடன் வடக்கின் உள்வளத்தினை மேம்படுத்தும் திட்டமும் அதில் அடங்கியிருந்தது.

## நெதர்லாந்துக் குழுவினரின் வாக்குறுதி

இந்தத்திட்டத்தின் ஆரம்ப காலப்பகுதியான 2016/2017 ஆம் ஆண்டுகளில் இந்த விசேட மகளிர் சிகிச்சை மையத்தினை அமைப்பது தொடர்பான பூர்வாங்க கலந்துரையாடலுக்கு நெதர்லாந்து அரசின் பிரதிநிதிகள் கிளிநொச்சி மருத்துவமனைக்கு வந்திருந்தார்கள்.

அவ்வேளையில் நெதர்லாந்து உட்பட்ட சர்வதேச நிதிப் பங்களிப்புடன் அமைக்கப்பட்டு ,யுத்த சூழலால் இடைநடுவில் தடைபட்டுப்போன கிளிநொச்சி மருத்துவமனையின் இரண்டாம் கட்டத்தினை நிறைவு செய்ய வேண்டியதற்கான தேவை குறித்தும் மாவட்ட மற்றும் மருத்துவமனைச் சுகாதாரத் தரப்பினரால் எடுத்துரைக்கப்பட்டது. மிகுந்த அக்கறையுடன் அதுகுறித்துக் கேட்டறிந்த நெதர்லாந்துக் குழுவினர், தம்மால் அமைத்துத் தரப்படவுள்ள விசேட மகளிர் சிகிச்சை மையத்துடன் இணைந்ததாக, மருத்துவமனையின் இரண்டாம் கட்டத்தில் அமைக்கப்படவேண்டியுள்ள பிரதான பிரிவுகளில் ஏதாவது ஒன்றினையும் அமைத்துத் தருவதாக உறுதியளித்தனர். ஏ9 வீதியில் - பிரதான மார்க்கத்தில் உள்ள -வடக்கின் பிரதான மருத்துவமனைகளில் ஒன்றான கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனைக்கு அவசர விபத்துச் சிகிச்சைப்பிரிவுக்கான முறையான வசதிகளுடன் கூடிய கட்டடம் ஒன்று அதுவரை அமைக்கப்பட்டிருக்கவில்லை.

இதனால் இரண்டாம் கட்ட மருத்துவமனை அபிவிருத்தியில் அவசர மற்றும் விபத்துச் சேவைப் பிரிவுக்கு முன்னுரிமை வழங்குவது எனவும் அதனை விசேட மகளிர் சிகிச்சை மையத்தின் தரைத்தளத்தில் அமைப்பது என்றும் அப்போது அவ்விடயத்தில் சம்பந்தப்பட்டிருந்த சகலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. விசேட மகளிர் சிகிச்சை மையத்தின் தரைத்தளத்தில் 'சீ.ரி. ஸ்கானருடன்' கூடிய அவசர மற்றும் விபத்து சேவைப் பிரிவினை (Accident and Emergency Unit with CT scan facilities) அமைப்பது என்றும் அது கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கும், விசேட மகப்பேற்று அலகுக்கும் பொதுவானதாக இருக்கும் என்றும் ஆலோசிக்கப்பட்டது. இதன்மூலம் ஆளணிகள் உள்ளிட்ட வளங்கள் பரவலாக்கப்படாமல் ஒருங்கிணைக்கப்படும் (pooling of avilable resources) எனவும் கிளிநொச்சி மருத்துவமனையின் தனித்துவமான 'வெளி நடைபாதைகள் அற்ற மருத்துவமனை (Unique hospital without covered way)' என்ற வடிவம் பேணப்படும் எனவும் மேற்குறித்த ஆலோசனை நியாயப்படுத்தப்பட்டி ருந்தது.

அதற்குப் பொருத்தமாக கிளிநொச்சி மருத்துவமனையின் தற்போதைய கட்டடத் தொகுதியுடன் இணைந்தவாறு (தற்போதைய அவசர சிகிச்சைப் பிரிவிற்கு முன்பாக) நெதர்லாந்து அரசினால் அமைக்கப்படப்போகும் கட்டடத்தொகுதியைக் கட்டுவதே சிறந்தது எனவும் முன்மொழியப்பட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வேலூர் கிறித்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகம் (ஓவியம்)

# யாழ்ப்பாண மருத்துவ வரலாறு:

## மருத்துவர் ஐடா சோபியா ஸ்கடர்

5

பா. துவாரகன்

மருத்துவர் ஐடா சோபியா ஸ்கடரது மருத்துவப்பணியைக் கேள்வியுற்று 1928 இல் இந்தியத் தேசபிதா மகாத்மா காந்தி , வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரிக்கு வருகைதந்து அவரது சேவையைப் பாராட்டினார்.

ஐடா ஸ்கடர் 1912 இல் பெண்களுக்கென தனியான ஒரு மருத்துவக்கல்லூரியை ஆரம்பிக்கும் எண்ணத்தை வெளியிட்டபோது பல்வேறு தரப்பினரிடமிருந்தும் எதிர்ப்புக்களை எதிர்கொண்டார். அமெரிக்க மிசனரியினரும் ஆரம்பத்தில் அனுமதியளிக்கவில்லை. ஐடா ஸ்கடரின் பிரார்த்தனை 1918 இல் நிறைவேறியது. ஆசியாவில் பெண்களுக்கான முதலாவது மருத்துவக் கல்லூரி 1918.08.12 அன்று உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

ஐடா ஸ்கடர் சத்திரசிகிச்சை நிபுணராகவும், விரிவுரையாளராகவும், மருத்துவக்கல்லூரியின் நிருவாகியாகவும் கடமையாற்றிய அதேவேளை வேலூர் மருத்துவக் கல்லூரியைத் தரமுயர்த்துவதற்காகவும் அதனது அங்கீகாரத்துக்காகவும் அயராது முயன்றார். மருத்துவக் கல்லூரியைத் தரமுயர்த்த மருத்துவமனையின் படுக்கை வசதியை (Bed Strength) அதிகரிக்க வேண்டியேற்பட்டது. மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க அமெரிக்காவிலிருந்து மருத்துவப் பேராசிரியர்களை அழைத்தும் வரவேண்டியிருந்தது. இவற்றுக்குப் பெருமளவு நிதி தேவைப்பட்டது. ஐடா ஸ்கடர் நிதி திரட்டுவதற்காகப் பல தடவைகள் அமெரிக்காவுக்குச் சென்று பல மில்லியன் டொலரைத் திரட்டி வந்தார்.

பல்கலைக்கழகங்கள் மட்டுமே மருத்துவப் பட்டம் வழங்கலாம் என்ற சட்டத்தை 1938 இல் மெட்ராஸ்(சென்னை) அரசாங்கம் நிறைவேற்றியபோது வேலூர் மருத்துவக் கல்லூரி சவாலை எதிர்கொண்டது. மருத்துவக் கல்லூரியை மூடவேண்டிய நிலையேற்பட்டது. மருத்துவக் கல்லூரியின் அங்கீகாரத்துக்காகவும் மருத்துவ சேவ்வயை மேம்படுத்தவும் ஐடா பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்; பல முயற்சிகளை எடுத்தார்; இதற்காக ஆண்களையும் மருத்துவக் கல்லூரியில் இணைக்க வேண்டிய தேவையேற்பட்டது; ஐடாவின் மிசனரி நண்பர்கள் பலரும் இதற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை; எனினும் ஐடா இம்முயற்சியைக் கைவிடவில்லை. 1947 இல் வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் பயில ஆண்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது. 1950 இல் சென்னைப் பல்கலைக்கழகத்தின் இணை






வளாகமாக வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி அங்கீகாரம் பெற்றது.

1948 இல் உலகிலே முதற்றடவையாக தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களது கை, கால் விரல்களில் ஏற்படும் பாதிப்புக்களை சீரமைக்கும் மீளஅமைப்பு சத்திரசிகிச்சையானது வேலூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் என்புமுறிவு சத்திரசிகிச்சை மருத்துவ வல்லுநர் போல் வில்சன் பிராண்ட் என்பவரால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

மேலும் உலகின் முதல் கண்சிகிச்சை முகாம் வேலூரிலே மேற்கொள்ளப்பட்டது. 1950 இல் தென்னாசியாவில் முதற்றடவையாக நரம்பியல் விஞ்ஞானத்துறைக்கான மருத்துவப் பட்டப்பின் படிப்புக் கற்கைநெறி கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டது.

20 வயதில் இந்தியப் பெண்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஐடாவின் வாழ்வு 80 வயது வரை ஓய்வின்றித் தொடர்ந்தது. வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி மருத்துவப் பட்டம் வழங்கும் அங்கீகாரம் பெற்றதும் மருத்துவர் ஐடா ஸ்கடர் ஓய்வு பெற்றார். ஐடா ஸ்கடரின் பிரார்த்தனை, கனவு, மருத்துவ மிசனால் நிறைவேறியது.

நியூயோர்க் கண் மற்றும் காது மருத்துவமனை (New York Eye and Ear Infirmary) 1952 ஆம் ஆண்டின் மிகச் சிறந்த பெண் மருத்துவ வல்லுநர்கள் ஐவரில் ஒருவாராக மருத்துவர் ஐடா ஸ்கடரைத் தெரிவு செய்து, 1953 ஆம் ஆண்டு அவரது 82 ஆவது வயதில் எலிசபேத் பிளெக்வெல் விருதை வழங்கிக் கௌரவித்தது.

தன்னுடைய வாழ்வை இந்தியாவில் மருத்துவத் தொண்டுக்காக அர்ப்பணித்த ஐடா ஸ்கடர் அம்மையார் 1960 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் திகதி கொடைக்கானலில் உயிர் நீத்தார். இவரது உடல் வேலூரில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஸ்கடர் பரம்பரையின் 4 தலைமுறையைச் சேர்ந்த 42 பேர் மருத்துவர்களாகி அமெரிக்க மருத்துவ மிசனுக்காக இந்தியாவில் மருத்துவத் தொண்டு ஆற்றியுள்ளனர். சிலர் ஆபிரிக்காவுக்கும், ஏனைய ஆசிய நாடுகளுக்கும் சென்று மிசன் பணியை ஆற்றியிருக்கிறார்கள். உலகின் முதல் மருத்துவ மிசனரியாக யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய மருத்துவர் ஜோன் ஸ்கடரில் இருந்து "ஸ்கடர் குடும்பத்தின்" மருத்துவ மிசன் பணி ஆரம்பிக்கிறது.

அமெரிக்க மருத்துவ மிசனரிக்காக மட்டுமன்றி உலகில் வேறு எந்த மிசனுக்காகவும் பல தலைமுறைகளாகத் தங்களைத் தியாகம் செய்த ஒரு குடும்பத்தை உலகில் வேறெங்கும் எடுத்துக் காட்ட முடியாது. "ஸ்கடர் குடும்பம்" உலகெங்கும் சிதறியிருக்கும் தங்கள் பரம்பரையை இணைக்கும் நிறுவனத்தை (The Scudder Association Foundation) 1912 இல் உருவாக்கினர். வருடந்தோறும் இவர்கள் ஒன்றுகூடல் நிகழ்வொன்றையும் ஏற்பாடு செய்கின்றனர்.



இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்க மருத்துவ மிசனரியினர் இந்தியாவிலே தமது மருத்துவப் பணியை ஆரம்பிக்க எண்ணியிருந்தனர். மருத்துவ மிசன் முன்னோடியான ஜோன் ஸ்கடர் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தமை தற்செயலானது. மருத்துவர் ஜோன் ஸ்கடரின் யாழ்ப்பாண வருகையானது இலங்கையின் வடபகுதியில் இன்றும் நிலைத்திருக்கும் மேலைத்தேச மருத்துவ, மற்றும் கல்விப் பாரம்பரியத்துக்கு வித்திட்டது.

அமெரிக்க மிசனரியினரின் யாழ்ப்பாண வருகையின் 200 ஆவது ஆண்டை நினைவுகூருவதற்காக இலங்கை அமெரிக்க மிசன் சபையினரால் 2016 ஒக்ரோபர் முதல் ஓராண்டு காலமாக பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. தொடர் நிகழ்ச்சிகளின் நிறைவுநாள் வைபவம் 2017 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 18 ஆம் திகதி பண்டத்தரிப்பிலே நடைபெற்றது. அன்றைய தினம் இலங்கைத் தபாற் திணைக்களம் மருத்துவர் ஜோன் ஸ்கடரின் உருவம் பொறித்த முத்திரையை வெளியிட்டது. ஸ்கடரது மருத்துவ மிசனைக் கௌரவித்து 200 ஆவது ஆண்டை சிறப்பிக்கும் விசேட ஞாபகார்த்த முதல்நாள் தபால் உறையையும் வெளியிட்டது.

கொழும்பு மருத்துவக் கல்லூரி 1870 இல் ஆரம்பிக்கப்பட்டமையயைத் தொடர்ந்து, மானிப்பாயில் 1848 இல் மருத்துவர் கிறீன் ஆரம்பித்த தென்னாசியாவின் முதலாவது மருத்துவக் கல்லூரி 1875 இல் மூடப்பட்டது. மருத்துவர் ஐடா ஸ்கடர் 1918 இல் வேலூரில் ஸ்தபாபித்த கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி எதிர்நோக்கிய சவால்களில் இருந்து கிறீன் ஸ்தாபித்த மானிப்பாய் மருத்துவக் கல்லூரியின் வீழ்ச்சிக்கான காரணங்களைத் தேட முடியும்.

### யாழ்ப்பாணத்தின் அன்னை தெரேசா (Mother Teresa of Jaffna)

அமெரிக்க மருத்துவ மிசனரிகள் மட்டுமன்றி, இங்கிலாந்தின் ஸெனனா மருத்துவ மிசனரியினரும் (Church of England Zenana Missionary Society) 19ஆம் 20 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையின் வடபகுதியில் மருத்துவ சேவைக்காகத் தங்களது வாழ்வைத் தியாகம் செய்து அருந்தொண்டு ஆற்றியிருக்கிறார்கள்.

இணுவில் மக்லியோட் மகப்பேற்று மருத்துமனையில் 40 ஆண்டுகளாக மகப்பேற்று மருத்துவராக அரும்பணியாற்றிய மருத்துவர் இசபெல்லா கேர் அம்மையார் பற்றி மிசனரி வரலாற்றாசிரியர்கள் அதிகம் எழுதவில்லை; உலகம் இவரது தன்னலமற்ற சேவையை அறியவில்லை. 'கேர் அம்மா' என்றும் 'இணுவில் அம்மா' என்றும் யாழ்ப்பாணத்தவர்களால் அழைக்கப்பட்ட இந்த அம்மையாரது சேவையை யாழ்ப்பாணத்துப் பெண்கள் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது.

இலண்டன் ஸெனனான மருத்துவ மிசனுக்காக ஸ்கொட்லாந்து நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து தமிழ்ப் பெண்களுக்கு அறிவூட்டி "மகப்பெறுவித்துப்" பெருந்தொண்டாற்றிய மருத்துவரான இஸெபெல்லா கேர் அம்மையார் பற்றி தென்னிந்தியத் திருச்சபையின் இளைப்பாறிய பேராயர் பேரருட்கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் குறிப்பிடுகின்றவற்றில் 2 விடயங்களை இங்கே மேற்கோள்காட்டுகிறேன்.

மருத்துவர் கேர் அம்மையாரது மருத்துவத் தொண்டு பற்றி இன்னோர் அத்தியாயத்தில் விரிவாகப் பார்ப்போம்.

1. அன்னை தெரெசா கொல்கொத்தாவிலே (கல்கத்தா) செய்த மிகப்பெரிய பணிகளைப்போன்று மருத்துவர் கேர் அம்மையாரும் யாழ்ப்பாணத்திலே பெண்கள் மத்தியில் அரிய பணிகளைச் செய்தார் என்று துணிந்து கூறலாம். (Dr. Isabella H Curr: Teresa of Jaffna/Inuvil)

2. நாம் எழுந்து நின்று இசபெல்லா கேர் அம்மையாருக்கு மரியாதை செலுத்த வேண்டும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடவுளுக்கு ஓர் அஞ்சலி...!

○ கோகுலராகவன்

டொக்டர் அம்பிகைபாகன்.

என்னை ஏழு தடவை மலேரியாவில் இருந்து காப்பாற்றி விட்ட "கடவுள்". பளை மருத்துவமனையில் மருத்துவராகக் கடைமை ஆற்ற வந்த டொக்டர் அம்பிகைபாகன் , 'கடவுள் டொக்ராக' மாறினார் மாற்றப்பட்டார். அவருக்கான இந்தப் பட்டம் பளையில் யாரால் வழங்கப்பட்டதென்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் பளையில் தான் முதன்முதலில் வழங்கப்பட்டது.

பொருத்தமான பட்டம் .

"காய்ச்சலாய்க் கிடக்கு கடவுளிட்ட போகவேணும். "

கடவுளிடம் போவது என்பது இறுதியைக் குறித்து நிற்க, இங்கு எதிர் மறையாகக் கூறப்படுவது வியப்பல்லவா?

அவரது இரக்கம், அவரது கருணை, அவரது அரவணைப்பு, அவரது கனிவு, அவரது பேச்சு எல்லாம் அவரைக் கடவுளாகக் காணவைக்க வேண்டிய அம்சங்களாக மாறிவிட்டன.

நோயாளிகளை நண்பனாகப் பார்த்ததே அவரது சேவையின் மகத்துவம். அவர் பளை மருத்துவமனையில் பத்து வருடங்களுக்கு மேல் கடைமையாற்றினார்.

இடையில் அவருக்கு இருதடவை வந்த இடமாற்றங்கள் மக்களின் முயற்சியால் ரத்துச் செய்யப்பட்டு இருந்தன. அவ்வளவுக்கு மக்கள் அவரை நம்பினர்.

'கடவுள்' பளையில் கடமையாற்றிய காலம் மிக இக்கட்டான காலம்.

யாழ்ப்பாணம் மருத்துவமனைக்கு போவதென்றால் , வழியில் 10க்கும் மேற்பட்ட காவலரண்களில் இறங்கி ஏற வேண்டும்.

நோயாளி இன்னுமொரு மடங்கு நோயாளி ஆகிவிடுவார்.

இதனால் அம்பிகைபாகன் இயன்றவரை வருத்தத்தை குணப்படுத்த வேண்டியிருந்தது.

அவரது உரையாடலே நோயாளிக்கு அரைவாசி நோயைக் குணப்படுத்தி விடும்.

"என்னடா காய்ச்சலே?"

"ஓமய்யா நடுக்கத்தோடு வருகிது "

"இந்த குளிசையை எடுத்துக்கொண்டு போ"

"ஐயா பயமாக்கிடக்கு"

"அது மாறிவிடும் போடா"

மாறிவிடும்.

90 களின் இறுதியில் மலேரியாக் காய்ச்சல் வன்னி மாவட்டங்களில் மோசமாகத் தாக்கியது.

நடுக்கம் ,வாந்தி இதன் அறிகுறி.

ஆசுப்பத்திரிக்கு போனால், 'கடவுள்' டொக்ரர் ஒருக்கா நிமிர்ந்து பார்ப்பார்.

பிறகென்ன,

குளோறோ குயின்

புளோரோ குயின்

என இரண்டு வகை குளிசை தருவார்.




இரண்டும் பச்சைக் கய்ச்சல். குடித்தால் வியர்வையிலும் மணக்கும். இந்த குளிசையைத்தான் அண்மையில் அமெரிக்க அதிபராக இருந்த டொனால்ட் ட்ரம்ப்

கொறானாவுக்கு பயன்படுத்த ஆலோசனை வழங்கி மூக்குடைபட்டார்.

'கடவுள்' டொக்ரரின் இன்னுமொரு சிறப்பு ,அவர் கடமையாற்றும் மருத்துவமனையை பூந்தோட்டமாக மாற்றும் திறன் .

ஒரு கட்டடமாகக் காணப்பட்ட மருத்துவமனையை அழகான சோலையாக மாற்றினார். மருத்துவம் ஆலோசனைகள் கொண்ட படங்களைக் காட்சிப்படுத்தவும் செய்தார்.

இடமாற்றம் பெற்று வந்த பின் சாவகச்சேரி வைத்தியசாலையையும் அவ்வாறு அழகாக்கினார். அதில் அவரது பங்கு அளப்பரியது.

விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டு வாழ்ந்து முடித்த மகான்.

சாவகச்சேரி மருத்துவமனைக்கு முன்பாக உள்ள அவரது சிலை அவரது கடமையின் உச்சத்தை பறைசாற்றி நிற்கிறது.

பளையில் அவருக்கு இன்னும் சிலை வைக்கவில்லை.

வைக்க வேண்டும். அவரைக் கடவுளாகக் கொண்டாடியதும், கடவுளாக்கியதும் பளை மக்கள்தான். அவர்களது மனதில் பொற் சிலையாக இன்னும் வாழும் கடவுள் அவர்.

அவரைப்பற்றி எழுதுவதற்கான வாய்ப்பு கிடைத்ததும் அவரது மருத்துவத்தால்தான்.

ஒருநாள் பேசிவிட்டு போவதல்ல, வாழ்நாள் முழுவதும் இழந்த காதலை மனதில் சுமப்பது போல அவரது நினைவு நிலைத்து நிற்கிறது.

கொடிய புற்று நோய் அவரைக் காவு கொண்டு விட்டது.

அஞ்சலிக்கின்றேன் 'கடவுளே'!

(கதைப்பம்)

# எங்கே செல்லும் இலங்கையின் பொருளாதாரம்?





3

○ பேராசிரியர். சி.சிவேசன்
சந்தைப்படுத்தல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்

யுத்த காலத்திலிருந்து இன்றுவரை மக்களுக்காகவும் மக்களின் முன்னேற்றத்துக்காகவும் யாழ்.பல்கலைக்கழகம் தொழிற்பட்டு வருகின்றது. முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம் (Faculty of Management Studies and Commerce) உட்பட ஏனையபீடங்களும் , நாட்டின் மேம்பாட்டுக்கு பிரதேச ரீதியாகவும், தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும்,பெரும் பங்களிப்பினை செய்து கொண்டே வருகின்றன.

**சித்தாந்தமும் அபிவிருத்தியும்**

உலக வரலாற்றை நோக்கில், ஜப்பான், ஜேர்மன் போன்ற நாடுகள் யுத்தத்தினால் அதிகளவு பாதிப்புக்கு உட்பட்டிருந்த போதும் அவை இன்று அதிக அளவு பொருளாதாரச் செழிப்புடன் காணப்படுவதற்கு காரணம் , அந்த நாடுகள் தமது நாட்டின் அபிவிருத்தியை தமக்கான சித்தாந்தங்களை (Zen Philosophy) அடிப்படையாகக் கொண்டு, நாட்டின் பொருளாதார அபிவிருத்தியினை வடிவமைத்துக் கொண்டமைதான். ஜப்பான் 'ஜென்' மெய்யியலினை (Zen Philosophy) அடிப்படையாகக் கொண்டு தனது அபிவிருத்தி குறித்த பார்வையையும் செயற்பாடுகளையும் மேற்கொண்டது. துரதிர்ஷ்டவசமாக இலங்கையின் அபிவிருத்தி குறித்து எமக்கென உரிய சித்தாந்தங்களின் பிரயோகங்கள் சரியாகஅமையவில்லை. கௌதம புத்தர் காட்டிய பாதையில் தானும் இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகள் இடம் பெறவில்லை.

**நாமும் குற்றவாளிகளே!**

இலங்கையின் சமகால பொருளாதாரப் பிரச்சினைக்கு அரசையும், ஆள்பவர்களை யும் விமர்சிக்கும் நாமும் விமர்சனத்துக்குரியவர்களே. ஏனெனில் வசதிகள், வாய்ப்புகள் அதிகரித்த போது எமது வாழ்கை முறையும் மாறுதலுக்கு உட்பட்டது. அதனையே நாகரிக வளர்ச்சி என்று எம்மை நாமே சுயதிருப்திக்கு உட்படுத்தி கொண்டோம். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவரையினாலே" என்று நன்னூலில் கூறப்பட்டதுக்கு அமைவாக மாறுதல் தேவைப்பாட்டுக்குரியதே. ஆயினும் அவை எம் மக்களின் அடிப்படை வரன்முறைவாழ்க்கையை தகர்ப்பதாக இருக்கக்கூடாது. சமகாலத்தில் மேற்கத்தேய தேசத்தின் நாகரிகத்தின் மோகம் (அதை ஒரு சிலர் நாகரிக வளர்ச்சி என மாயை கொள்வர்) உணவு, உடை, பழக்க வழக்கங்கள், போன்றனவற்றில் அதிகதாக்கத்தினை ஏற்படுத்தியது . இதன் விளைவாக மேற்கத்தேயப் பொருள்களின் நுகர்வினை முதன்மைப் படுத்திக் கொண்டோம். இதன் வாயிலாக இறக்குமதிகள் அதிகரித்தன. இவ்வாறான புதிய வரவுகளுக்கு எடுத்துக்காட்டாக, வட புலத்தில் காதலர் தினம் முதல் தந்தையர் தினம் வரை கொண்டாடப்படுவதையும், அதற்கான மலர்க்கொத்துக்கள், பரிசுப்பொருள்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாவதையும் சொல்லலாம். உண்மையில் இவை மேற்கத்தேய கலாசாரத்துக்கே தேவைப்பாடு உடையவை. எமது கலாசாரத்துக்கு இவை தேவைப்பாடு அற்றவை . ஏனெனில் 'எமக்காக எப்போதும் பெற்றோரும், அவர்களுக்காக நாமும்' என்பதுதான் எமது பண்பாடு. இது உயரியதோர் பண்பு. நாம் இன்று அனுபவிக்கும் இந்தப்பொருளாதார நெருக்கடிக்கு பண்பாட்டு புரள்வுகளினால் ஏற்படுகின்ற செலவினங்களும் ஒரு காரணமாகும்.

**சுயம்வர இளவரசிகளும் காத்திருக்கும் கட்டடங்களும்**

இலங்கையில் 2020 ஆம் ஆண்டு காலத்தில் வைப்புகளுக்கும், கடன்களுக்குமான வட்டி வீதங்கள் குறைக்கப்பட் டன. இதன் வாயிலாக பொதுமக்கள் தமது வைப்புகளினை நிலக் கொள்வனவு , தங்கக் கொள்வனவு என்பவற்றுக்குப் பயன்படுத்தினர். பெரும்பான்மையினர் கட்டுமானப் பணிகளிலும் அதிகளவு பணத்தினைப் பயன்படுத்தினர்.

யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான தெருவோரங்களில் உள்ள தோட்டக் காணிகளில் கட்டடங்கள் கட்டப்பட்டு , அவை சுயம்வர நிகழ்வுக்காக காத்திருக்கும் இளவரசிகள் போன்று 'வாடகைக்கு விடப்படும்' என்ற பதாகையுடன் காட்சி தருகின்றன. கட்டுமானப் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் மூலப் பொருள்களில் பெரும்பான்மையானவை இறக்குமதியாகும் பொருள்களாகவே உள்ளன. இவை அந்நியச் செலாவணி வெளிச்செல்கைக்கு ஏதுவாகின்றன. இவ்வாறு நாம் அறிந்தும், அறியாமலும் செய்யும் சில செயற்பாடுகளும், நுகர்வோர் நடத்தை மாற்றங்களும் (Changes in Consumer Beha viour) கூட சமகால இலங்கையின் பொருளாதார மந்த நிலைக்கு காரணங்களாயிற்று.

**எப்படி இருக்க வேண்டும் பொருளாதாரத் தீர்வு?**

சமகாலத்தில் நாம் எதிர்கொள்கின்ற பொருளாதார நெருக்கடிகளுக்கான தீர்வினை நீண்ட கால மற்றும் குறுங்கால அடிப்படையில் மேற்கொள்ளல் மிக பொருத்தப்பாடு உடையது ஆகும். தொடர்ச்சியாக ஏற்படுகின்ற உணவு, எரி பொருள்களுக்கான தட்டுப்பாட்டினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தாலும், நிகரவிலையில் பொருள்கள் நுகர்வோருக்கு வழங்கப்படுவதை உறுதிப்படுத்தல் மிக முக்கியமான தேவைப்பாடுடையதாகும்.

விவசாயம், மீன்பிடி போன்ற துறைகளை ஊக்குவித்தலுக்கான நடவடிக்கைகள் எடுத்தல் இன்னும் பொருத்தமானது.

இலங்கையில் பெரும்பான்மையான பயிர்ச்செய்கை நிலங்களும், விவசாயிகளும் செயற்கை இரசாயன உரத்துக்கு பழக்கப்பட்டதுடன்,அதிலிருந்து மாறுகின்ற போது விளைச்சல் மிகவும் குறைவாகவே கிடைக்கின்றது என்ற கருத்துருவாக்கத்துடனும் உள்ளனர். இவ்விதமான சிந்தனையில் ஒரு உண்மைத் தன்மையும் உள்ளது. எனவே இரசாயனப் பசளையை இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கைளை மேற்கொள்ளுதல் அவசியம்.

மேலும் சிறுதானியங்கள், காய்கறிகள், மற்றும் பழவகைளின் அறுவடை காலத்தில் அத்தகைய பொருள்களின் இறக்குமதியினை தடைசெய்தால் அல்லது குறைத்தால் இதன் வாயிலாக உள்நாட்டு உற்பத்திகளுக்கான நியாயவிலை கிடைப்பதை உறுதி செய்வதனூடாக எமது உள்ளூர்ப் பொருளாதாரத்தைப் பலப்படுத்தலாம்.

இயற்கை விவசாயத்தில் ஈடுபடுவதற்கான உந்துதல்களை வழங்குதல் மற்றும் இயற்கை விவசா யத்துக்கான கொள்கையினை வகுத்தல்,நடைமுறைப்படுத்தல் ஆகிய விடயங்கள் சம காலத்தில் இன்றியமையாத தேவைப்பாடு உடையவை. நாடு முழுவதும் 'இயற்கை விவசாயம்' என்கின்ற எண்ணக்கருவுக்கான செயல்வடிம் கிடைக்க பல வருடங்கள் எடுக்கும். இன்றைய இளையோர் மத்தியில் இயற்கை விவசாயம் பற்றிய புரிதலும் விழிப்புணர்வும் சிறப்பாகவேயுள்ளன.

இளைய சமூகத்தினர் மத்தியில் முயற்சியாண்மை என்கின்ற கலையை இளம் பராயத்திலிருந்தே வளர்க்க வேண்டும். இதற்கு பாடசாலைப் பாடத்திட்டத்தில் முயற்சியாண் மையை ஒரு கற்கை அலகாகக் கொண்டுவரவேண்டும். வாழ்கையில் இதனை நடைமுறைப்படுத்துவதற்கு பல்வேறு வகையான ஊக்கப்படுத்தல் நடவடிக்கைகளினை மேற்கொள்ள வேண்டும்.


இலங்கையில் சில பல்கலைக்கழகங்கள் முயற்சியாண்மையில் சிறப்புப் பட்டத்தினையும் வழங்குகின்றன. இவை வரவேற்கத்தக்கவையே. எனினும் இவை ஆரம்பக் கல்வியிலிருந்தே தொடங்கப்பட வேண்டும். சுற்றுலாத்துறையில் அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும்.

உண்மையில் சுற்றுலாத் துறையானது அதிகம் பாதிப்புக்கு உட்படுகின்ற துறை என்பதனால் அதன் அபிவிருத்தியானது ஏனைய துறைகளுடன் அதாவது விவசாயம், மீன்பிடி, சுதேச வைத்தியம் போன்ற கைத்தொழில்களுடன் இணைந்தவாறாகவே அமைந்திருக்க வேண்டும்.

இவை யாவற்றுக்கும் மேலாக அபிவிருத்திச் செயற்பாடுகளை எமக்கேயுரிய சித்தாந்தங்களின் அடிப்படையில், பண்பாட்டு விழுமியங்களை மீறாத வகையில் மேற்கொள்ள வேண்டும். அத்துடன் பிரதேச ரீதியாகக் கிடைக்கின்ற வளங்களை உச்சபட்சமாகப் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டும். இவற்றின் வழியாகவே நிலைபேண் அபிவிருத்தியை (Sustainable Development) உருவாக்கிக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி 91



அனுப்புபவர் பெயர்:...........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..............................................................

கையொப்பம்:...................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. இலங்கை நாட்டில் இது இப்போது இல்லையே. 6 தரைக்கு சமாந்தரமானது/ நிலைக்குத்துக்கு செங்குத்தானது 7. தங்குமிடம் 8. வர்த்தகநிலையம் 9. சகாயம் செய்தல் 11. நாட்டில் ஆட்சியாளர்களுக்கு எதிராக வெடிப்பது 12. சுருங்கக் கூறி நயத்துடன் புரியவைப்பது 14. வனம் 15. அறவிடுதல்/ சேகரித்தல்/ வசூலித்தல் 17. எங்களது 18. வீட்டின் பிரதான வாயில் 20. நடு 21. சேதங்களின் எச்சம்

## மேலிருந்து கீழ்

1. பொறுக்கும் குணம் 2. நீர் பாயும் மதகு/ வாய்க்கால்/ துவாரம் 3. பன்னிரண்டாம் திதி 4. உருவத் தோற்றம் 5. உடுப்பு 8. வித்தை 9. உள்ளாகு. 10. மெல்லிய இரும்பு தகரப்படலம் 13. பாகுநிலை மருந்து 14. அரைவாசியின் அரைவாசி 16. சிரசு 17.கூடாததல்ல 19. மறைவில் தீட்டும் தீய குணம்

**சொற்சிலம்பம் போட்டி 90 க்கான விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. வளையாபதி 5. சதா 7. கடைக்குட்டி 9. வாதம் 11. குட்டை 12. சரை 13. உதடு 15. குடல் 16. மாரி 17. கடல் 19. மடம் 20. நண்பன் 22. தும்பிக்கை 23. தினை

**மேலிருந்து கீழ்**

1.வனவாசம் 2. யாகம் 3. படை 4. திக்குதல் 5. சட்டை 6. தாடி 8. குட்டு 10. தரை 13. உடல் 14. பெரியண்ணை 15. குடம்பி 16. மா 17. கடம் 18. ஆண் 19. மது 20. நகை 21. பதி

**சொற்சிலம்பம் போட்டி இல.91**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**15.07.2022** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 90 இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
**சி.பரிமளகாந்தன்**
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
**ச.நிருபன்,**
பழம் வீதி, கந்தர்மடம்.

**3 ஆம் பரிசு**
**யோ.சிவதரன்**
புத்தூர் மேற்கு,
புத்தூர்.

**4 ஆம் பரிசு**
**ந.பானுமதி**
சோறன்புலம்,
பொலிகண்டி.

**5 ஆம் பரிசு**
**ச.கௌரிமலர்,**
பிரதேச மருத்துவமனை,
கோப்பாய்.

ந.பரமேஸ்வரன்

1505-1948 வரை

# யாழ்ப்பாண வரலாறு



**1905 பெப்ரவரி 05**
அரசாங்க அதிபர் ஐவர்ஸ் (Ivers)காலமானார். 1872 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து கொண்ட இவர் நெடுந்தீவில் குதிரை வளர்ப்பதிலேயே கூடுதலான நேரத்தை செலவிட்டதுடன் நெடுந்தீவிலிருந்த வறிய மக்களின் பசியைப்போக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார்; அத்துடன் வன்னியிலிருந்த குளங்களை புனரமைக்கும் பணிகளையும் மேற்கொண்டார்.

**1905 மார்ச் 11**
மதவாச்சி வரையான புகையிரதப் பாதை பூர்த்தியாக்கப்பட்டது.

**1905 ஏப்ரல் 23**
யாழ்ப்பாணத்துக்கு முதல் தடவையாக கார் கொண்டு வரப்பட்டது. G.Brooks, D.Dyer ஆகியோர் நுவரெலியாவிலிருந்து காரில் யாழ்ப்பாணம் வந்தனர். (யாழ்ப்பாணத்துக்கு முதல் தடவையாக கார் வந்த போது ,அதுவரை காரைக் காணாத மக்கள் பயத்தில் வீதியி லிருந்த பனை மரங்களின் பின்னால் பதுங்கியதாக யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த முன்னோர்கள் கூறியுள்ளனர்)

**1905 மே 20**
அராலிக்கடல் நீர், நவாலி வரை ஒன்றரை மைல் தூரத்துக்கு கிராமங்களுக்குள் புகுந்தது. கிராமங்களுக்குள் புகுந்த நீரின் சுற்றளவு 90 அடியாகவும் நீரின் உயரம் 36 அடியாகவும் காணப்பட்டதாக கச்சேரி அறிக்கைகள் கூறுகின்றன.எனினும் இதன் காரணமாக எதுவித உயிர்சேதங்களும் ஏற்படவில்லை. இதனால் மக்கள் அச்சமடைந்ததாகவும் இது புவியியல் ரீதியாக ஏற்படும் ஒரு நிகழ்வு எனவும் ,அப்போது யாழ்ப்பாண கச்சேரியில் கடேற் அதிகாரியாக இருந்த பிரபல ஆங்கில எழுத்தாளரான Leanord Woolf தனது நாட்குறிப்பில் எழுதி வைத்துள்ளார்.அநேகமாக இது சுனாமியாக இருக்கலாம்.

**1905 ஜூன் 12**
நல்லூர் கைலாசபிள்ளையார் கோயில் கும்பாபிஷேகம். இலங்கைக்கும் இந்தியாவுக்குமான நியம நேரம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பிரகாரம் கிறீன்விச் நேரத்திலிருந்து ஐந்தரை மணித்தியால வித்தியாசத்தில் நேரம் நிர்ணயிக்கப்பட்டது. இலங்கைக்கான நியம நேரமாக சென்னை நேரம் பின்பற்றப்பட்டது.

**1905 ஓகஸ்ட் 01**
யாழ்ப்பாணத்துக்கான புகையிரத சேவை ஆரம்பம். ஓகஸ்ட் முதலாம் திகதி கொழும்பிலிருந்து புறப்பட்ட புகையிரதம் 13 மணித்தியாலம் 20 நிமிடங்களில் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது. யாழ்ப்பாணத்துக்கான புகையிரத சேவையை ஆரம்பிக்கும் பணிகளில் சேர்.பொன்.இராமநாதன்,சட்டத்தரணி நாகலிங்கம், முன்னாள் ஆளுநர் சேர்.வெஸ்ற் றிட்ஜ்வே, ( Sir. West Ridgeway)பேர்கசன் (Ferguson), காப்பர் (Capper) ஆகியோர் கடுமையாக உழைத்திருந்தனர்.

**1905 ஓகஸ்ட் 11**
மருத்துவர்களை பதிவு செய்யும் சட்டம் (Registration of Medical Practitioners) இலங்கையில் அமுலுக்கு வந்தது. வலி காமம் வடக்கு மணியகாரனான விஸ்வலிங்கம் சின்னப்பா காலமானார். இவர் ஆரம்பத்தில் உடையாராகவும் கடமையாற்றியிருந்தார்.

**1905 ஓகஸ்ட் 19**
ஆளுநர் பிளேக் (Blake) பாரியார் சகிதம் புகையிரதத்தில் யாழ்ப்பாணம் வந்தார். மார்ட்டின் வீதியில் அமைக்கப்பட்ட பந்தலில் ஆளுநருக்கும் பாரியாருக்கும் வரவேற்பு அளிக்கப்பட்டது. சேர்.கனகசபை , ஆளுநரையும் பாரியாரையும் வரவேற்றார்.

**1905 ஓகஸ்ட் 24**
ஆளுநர் தம்பதியினர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு விஜயம் செய்தனர். பின்னர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு விஜயம் செய்து அங்கு முன்னாள் ஆளுநர் றிட்ஜ்வே நினைவாக றிட்ஜ்வே நினைவு மண்டபத்தையும் திறந்து வைத்தனர்.

**1905 ஓகஸ்ட்**
வெளிக்கள அரச அதிகாரிகளுக்கு கார்கள் வழங்கப்பட்டன.

**1905 செப்ரெம்பர்**
சட்டநாதர் கோயில் தொடர்பான வழக்கில் சட்டநாதர் கோயில் மருத்துவர் சிவப்பிரகாசம்பிள்ளைக்கே சொந்தம் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

**1905 செப்ரெம்பர்**
கிராமசபைகள் சட்டத்தின் கீழ் நெடுந்தீவு கொண்டு வரப்பட்டது. அதுவரை காலமும் நெடுந்தீவு, நோலன் பிரபு (Captain Nolan) அண்டர்சன் (And erson)போன்ற சுப்பிரிண் டன்களின் கட்டுப்பாட்டின் கீழேயே இருந்தது. இதே மாதம் யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி சபை அமைப்பதற்கும் அரசாங்கம் அங்கீகாரமளித்தது.

**1905 ஒக்ரோபர் 12**
YMCA மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் யாழ்ப்பாண மருத்துவமனையை (ஆபத்துக்குதவும் நண்பர்கள் கழக) அரசாங்கத்திடம் ஒப்படைப்பது பொருத்த மற்றது என சிலர் கருத்து தெரிவித்தனர்.

**1905 நவம்பர்**
லண்டனில் FRCS பட்டம் பெற்று திரும்பிய மருத்துவர் மயில்வாகனத்துக்கு பரியோவான் கல்லூரியில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

**1905 நவம்பர் 10**
யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி சபை உருவாக்குவதற்கான வர்த்தமானி வெளியிடப்பட்டது.

**1905 நவம்பர் 17**
சண்டிலிப்பாயைச் சேர்ந்த மருத்துவர் பரராஜசிங்கம் காலமானார். அனுராதபுரம்,கல்முனை,காங்கேசன்துறை மருத்துவமனைகளில் இவர் சிறந்த சேவையாற்றியுள்ளார். இவரது சேவையைப் பாராட்டி அப்போதைய ஆளுநர் இவருக்கு முதலியார் பட்டம் வழங்கியிருந்தார்.

**1905 டிசம்பர் 05**
தம்பு நீதவானின் மகன் A.C தம்பு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கணித பாடத்தில் சிறப்பு பட்டம் பெற்று திரும்பியமைக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் வரவேற்பு உபசார நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்திய சிவில் சேவை பரீட்சையில் சித்தியடைந்த முதலாவது இலங்கையர் என்ற பெருமையையும் இவர் பெற்றார்.

*(வரலாறு நீளும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ கருணை ரவி

# மானத்தீ

சஞ்சீவி தொடர் கதை

43



வாசலில் நின்ற தம்பு ரீக்குவளையை போட்டுவிட்டு கடைக்குள் ஓடினார். சன்னங்கள் யாழ் கோப்றேசன் கட்டடங்களிலும் பட்டிணி கடையிலும் சங்கரப் பிள்ளை கட்டடங்களிலும் சடசடத்தன. பாக்கியம் வைத்திய சாலை பரியாரியார் நடராசாவுக்கு கடைக்கு முன்னால் இராணுவத்தினர் நிற்பது தெரியாது குனிந்துகொண்டு கதவை இழுத்துச் சாத்தினார். கதவு இழுக்கும் சத்தம் கேட்க கதவுகளில் சன்னங்கள் சடசடத்தன. சன்னங்கள் ஒன்றும் பரியாரியாருக்குப் படவில்லை.

அழுகுரல்கள் தெருவெங்கும் கேட்டன. சிங்களத்தில் ஏதோ அதட்டல்கள் கேட்டன. கொஞ்சநேரம் அமைதியாக இருக்க தம்பு வெளியை எட்டிப்பார்த்தார். இராணுவத்தினர் போய்விட்டனர். தெருவில் அ.க. நின்றான். அவனை அ.க. என்றுதான் எல்லோரும் சொல்வார்கள். ஏன் அ.க. என்று பெயர் வந்ததென்று யாருக்கும் தெரியாது. அ.க.வை பரந்தனில் எல்லோரும் விரும்புவார்கள். அவன் ஒரு நாட்டாமை. இரண்டு மூடைகளை முதுகில் சுமந்துகொண்டு நடப்பான். எல்லாக் கடைகாரரும் அ.க.வைத்தான் வேலைக்குக் கூப்பிடுவார்கள்.

அ.க.வேலையை முடித்து ஆறுமணிக்கு சாராயத்தை குடித்து விட்டு ப.நோ.கூ.சங்க வாசலில் இருந்து பாடுவான். எவருக்கும் தொந்தரவுகள் கொடுக்கமாட்டான். எல்லோரும் அவனின் பாட்டை விரும்புவார்கள். சில பயணிகள் அவனைப் பாடவைத்து காசு கொடுப்பார்கள்.

அ.க.வின் நெஞ்சுச்சேட்டில் இரத்தம் இருந்தது. யூனியன் கிராமிய வங்கிக்குள் லிகிதர் சுந்தரம் செத்துக்கிடந்தான். வங்கிக்குள் எல்லோரும் படுத்திருக்க லிகிதர் சுந்தரம் எழும்பி நிற்கத்தான் குண்டு நெஞ்சில் பட்டதென அ.க. சொன்னான். அ.க.தான் சுந்தரத்தை தூக்கி வங்கிக்கு பின்னால் வளர்த்தி விட்டு வந்தான்.

பஸ் வரும்வரை காத்து நின்ற பயணிகள் அங்குமிங்குமாக இறந்து கிடந்தார்கள். அவர்களிடம் எவரும் போகவில்லை. கடைக்குள் ஒளிந்து நின்றவர்கள் அ.க.வின் குரலைக்கேட்டதும் வெளியில் வந்தார்கள். முரசுமோட்டை போவதற்கு முல்லைத்தீவு பஸ்ஸை பார்த்துக் கொண்டிருந்த பத்மா செத்துக்கிடந்தாள். அவளின் மடியில் நான்கு நாள் பிறந்த குழந்தையும் செத்திருந்தது. அவளின் தாய் "பத்மா... பத்மா..." எனக்கத்திக் கொண்டிருந்தாள்.

பத்மாவுக்கு இரணைப்பிள்ளைகள் பிறந்திருந்தன. கார் பிடித்துப் போகப் பணம் இல்லாததால் பஸ்ஸில் வந்தாள். பஸ்ஸால் இறங்கியதும் பத்மாவை தாய் ஒரு கையால் பிடித்து ஒரு குழந்தையையும் ஒரு கையில் வைத்துக் கொண்டு நடக்க, பத்மாவும் ஒரு குழந்தையுடன் மொதுவாக நடந்து வந்து பட்டிணி கடையில் ரீ குடிக்கும் போது தம்பு அவளுக்குப் பக்கத்தில் இருந்து ரீ குடித்தார். அருகில் இருந்து ரீ குடித்துவிட்டு புண்வயிற்றோடு நடக்கமுடியாது போனதை தம்பு நினைத்துக் கவலைப்பட கிளிநொச்சியில் இருந்து பொலிஸ்காரர்கள் ஜீப்பில் வந்தார்கள்.

பொலிஸ்காரரைக் கண்டதும் சனங்கள் பயந்தார்கள். பயந்தவர்களில் சிலர் ஓடினார்கள். பொலிஸ்காரர் எவருக்கும் ஒன்றும் செய்யவில்லை. எல்லோரையும் கூப்பிட்டு அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்து எல்லோரையும் வீடுகளுக்கு அனுப்பிவைத்தார்கள்.

அவள் பரந்தன் சந்தியில் நின்று பட்டிணி கடையைத் தேடினாள். கடை இருந்த இடத்தில் கிருமி நாசினிக் கடை இருந்தது. பாக்கியம் மருத்துவமனையைத் தேடினாள். அந்தக்கட்டடம் இடிந்திருந்தது. "பாக்கியம் மருத்துவமனை"யை நினைத்ததும் றொலோக்காரர்கள் ஞாபகத்தில் வந்தார்கள். றெலோ தான் பரந்தனில் முன்பு ஆதிக்கம். இந்திராகாந்தி செத்ததுக்கு றெலோக்காரர் 'ஹர்த்தால்' கடைப்பிடித்தார்கள். மருத்துவமனையோடு சேர்ந்தியங்கிய பார்மஸி திறந்திருந்தது. சாரத்தோடு வந்த இரண்டு றெலோக்காரர்கள்

"உங்களுக்கு ஹர்த்தால் எண்டு தெரியாதே?"

ஒருவன் கேட்டான்.

"ஹர்த்தால் எண்டாலும் பார்மஸி திறக்கலாம். சனங்களுக்கு அத்தியாவசியமானவைகளை ஆரும் பூட்டு எண்டு சொல்லேலாது?"

பரியாரியார் வாதிட்டார் "பூட்டெண்டால் பூட்டவேண்டியது தானே?"

பரியாரியாரைப் பார்த்து ஒருவன் சாரத்தை மடித்துக்கட்டினான். பரியாரியார் வேறு எதுவும் கதைக்கவில்லை. கதவைச்சாத்தினார். அவர் கதவுகள் சாத்தும் வரைக்கும் பார்த்துக் கொண்டு நின்ற பொடியள் சைக்கிளை எடுத்துக்கொண்டு பரந்தன் சந்தியால் முல்லைத்தீவுப்பக்கம் திரும்ப, முன் சில்லு சறுக்கி சைக்கிளோடு இருவரும் விழுந்தார்கள். ஒருவனுக்கு முழங்கால் உரஞ்சி இரத்தம் கசிந்தது. உடனே பார்மஸிக்கு வந்தார்கள். மருந்து கட்டும்படி கேட்டார்கள்.

"ஹர்த்தாலுக்கு பூட்டு என்றால் திறக்கக்கூடாது" சொல்லிக்கொண்டு பரியாரியார் போனார். கந்தவிக்கிழவன் றெலோக்காரர் பற்றிச் சொன்ன கதையையும் நினைத்துக்கொண்டு பரந்தனால் திரும்பி முரசுமோட்டைக்குப் போன போது தெரு நிறைந்துவிட்டது. வல்லிபுரக் கோயில் தீர்த்தக் கரை மாதிரி சனங்கள்.

கால்களை எடுத்து முன்னால் வைக்க இட மில்லை. ஒரு சிறுமி அழுதபடிநின்றாள் தாயைக் காணவில்லைஎன்று. தலையில் இருந்த சுமையை கீழே இறக்கி வைக்க இடமில்லாது பூங்கொடி தலைப்பாரத்தால் துவண்டபடி நடந்தாள். பொழுது கருகிவிட்டது.

பத்துமணிக்கு வெளிக்கிட்ட பயணம் இன்னும் முரசுமோட்டையைக் கடக்கவில்லை. கிபிருக்குப்பயந்து வாகனங்களின் லைற்றுகளை நிறுத்திவிட்டார்கள். டோர்ச் லைற்றை ஒளிர விடுபவர்கள்மீது கெட்டவார்த்தைகள் உருண்டோடின. நிருபனுக்கு ரேடியோ ஒரு பாரமாக இருந்தது. சனங்கள் இடிபட றேடியோ முதுகை அண்டிக்கொண்டிருந்தது.

"பூங்கொடியக்கா..."

முன்னால் போகும் உழவு இயந்திரத்தில் இருந்து ஒருவன் குரலை எறிந்தான். நிலவின் பிரகாசத்தில் அவளை அவன் இனங்கண்டிருந்தான். நிருபன் சொன்னான், நக்கீரன் என்று. நக்கீரனுக்குப் பக்கத்தில் கிளினர் தெய்வேந்திரமிருந்து

"அக்கா..." என்றான்.

ஐஸ்பழம் மாதிரி இருந்தது அந்த அக்கா என்ற அந்தச் சொல்.

"தெய்வேந்திரம்...."

பதிலுக்கு அவனின் பெயரை ஐஸ்கட்டியாக எறிந்தாள்.

"மூடையை வாங்கி மேலை ஏத்திவிட்டு அக்காவை ஏத்து" தெய்வேந்திரம் சொன்னான். உழவு இயந்திரம் நின்றது. ஒரு வாகனம் நின்றால் நீளமாய் பின்னுக்கு வரும் வாகனங்களும் நிற்கும்.

"வாகனத்தை எடடா"

"எவனடா வாகனத்தை நிறுத்தினது?"

நக்கீரன் முடிச்சுக்களை அவளிடமிருந்து வாங்கி மேலே வைத்துவிட்டு, அவளையும் நிருபனையும் வாகனத்தில் ஏற்றியதும் வாகனம் ஊர்ந்தது.

"வீட்டுக்காரரை சுண்டிக்குளத்திலை கொண்டுபோய் விட்டிட்டம். இப்ப சாமானுகளை ஏத்திக்கொண்டு வாறம்."

சொல்லிவிட்டு தெய்வேந்திரம் அவளைக் கேட்டான்

"எங்கை போறியள்?"

அவளுக்கு எங்கே போவதென்று தெரியவில்லை. சுண்டிக்குளச் சந்தியில் தங்களை இறக்கிவிடும்படி சொன்னாள். தெய்வேந்திரம் மெதுவாகச் சொன்னான்

"நாங்கள் சுண்டிக்குளத்திலை ஒரு படகைப்பிடிச்சு யாழ்ப்பாணம் போப்போறம். நீயும் வாறியே?"

அவள் மறுத்து விட்டாள். நித்தியின் படம் பேப்பரில் வந்ததாகவும் அவர்களுக்குத் தெரிந்தால் தாங்கள் வாழமுடியாது என்றும் நினைத்தாள். பூநகரியில் இருந்து மரியதாஸ் போய் குடும்பத்தோடு செத்ததையும் நினைத்தாள்.

"ஆமியின்ரை வரத்தைப்பாத்தா எல்லா இடங்களையும் பிடிப்பாங்கள் போலை கிடக்கு. இயக்கம் இன்னும் ஆன சண்டையளொண்டும் பிடிக்கேலை"

என்றான் தெய்வேந்திரம். சுண்டிக்குளச்சந்தி வந்ததும் பூங்கொடியை இறக்கிவிட்டு தெய்வேந்திரம் போனான். அவளுக்கு எங்கே போவதென்று தெரியவில்லை. பாலைமரத்துக்குக் கீழே இருந்தாள். நிருபன் சாமான் பைக்கு மேல் படுத்தான். விடிந்தது. சனங்கள் குறையவில்லை. போய்க்கொண்டே இருந்தார்கள். பள்ளிக்கூடம் இருந்தால் அங்கே போய் தங்கலாம் என்று நினைத்தாள். பக்கத்துக்கடையில் ரீ குடித்துவிட்டு நிருபன் ஒரு குவளையில் ரீ கொண்டுவந்து பூங்கொடிக்குக் கொடுத்தான். அவள் பற்களை துலக்கி காலைச்சூரியனை வணங்காது வாய்க்குள் தண்ணிகூட விடமாட்டாள். சூரியன் தெரியவில்லை. மரங்களும்தெருவில்போகும் வாகனங்களும் சூரியனை மறைத்தன. ஒரு மிடறு ரீயை வாய்க்குள் விட்டு கொப்பளித்ததும் ரீயைக் குடித்துக் கொண்டிருக்க கனகத்தைக் கண்டாள். பத்து வருசமாக அவளைக் காணாதவள் கண்கலங்கினாள்.

"பூங்கொடி..."

கனகம் வந்து அவளை அணைத்தாள். நிருபனின் முகத்தை கிள்ளினாள்.

"சரியா கொப்பன் மாதிரிக்கிடக்கடா..."

நிருபனைக் கொஞ்சினாள். கையில் இருந்த சிறு பையை கீழே வைத்துவிட்டு பூங்கொடிக்குப் பக்கத்தில் இருந்தாள். பூங்கொடியின் தலைமுடி நரைத்ததைப் பார்த்தாள். பூங்கொடியின் கவலைகளை அசைபோட்டவள் கொஞ்சநேரம் அமைதியாக இருந்தாள்.

"எங்கை போறியள்?"

மௌனத்தை பூங்கொடி உடைத்தாள்.

"நக்கீரன் என்னை ஏத்த வருவான். சாமானுகளைக் கொண்டு போய் வைச்சிட்டன். யாழ்ப்பாணம் போப்போறம். வாவன்ரி, இஞ்சை இருந்து அழியப்போறியே?"

கிளினர் தெய்வேந்திரத்துக்குச் சொன்னதை அப்படியே சொல்லிவிட்டு

"இந்திராணி எங்கை"

இந்திராணி என்றதும் கனகத்துக்கு கண் கலங்கியது. பிறங்கையால் உடைக்கும் கண்ணீரைத் துடைத்தவள்

"அவள் இயக்கத்திலை"

"அவளை விட்டிட்டு போப்போறியே?" "அவள்தான் என்னைப் போகச்சொன்னவள். விட்டிட்டுப்போக கவலைதான். இந்திராணிக்கு குடும்பி மயிரும் சட்டையும் கொண்டு போறன். வள்ளத்திலை ஏறேக்கை அவள் ஓம் எண்டா அவளையும் கூட்டிக்கொண்டு போப்போறன்"

சந்தோசமாகவும் பக்கத்தில் இருப்பவர்களுக்கு கேளாமலும் காதுக்குள் சொல்லும்போது நக்கீரன் சைக்கிளில் வந்து நின்றான்.

"போட்டுவாறன்..."

கவலையோடு சொல்லிக்கொண்டு கனகம் அவளின் கன்னங்களை இருகைகளினால் தடவி முத்தங்கொடுப்ப துக்கு ஆயத்தமாக, அவளின் காதில் இருந்த ஒற்றைத்தோடைப் பார்த்தாள். மற்றக்காது வெறுமையாக இருந்தது. கனகம் பையில் இருந்த தோடை எடுத்து அவளிடம் நீட்டினாள்

"இது இந்திராணியின்ரை தோடு. இதைப்போட்டுக்கொண்டு உதைக் கழட்டியெறி." சொல்லிக்கொண்டு தோட்டை பூங்கொடியிடம் நீட்டினாள்.

(வருவாள்)

## மீண்டு(ம்) வரும் மிதி வண்டி!

ஆண்ட குடும்பங்கள்
ஆனவரை சுருட்டியதால்
மூண்ட நெருக்கடியில்
மீண்டது மிதிவண்டி!

பத்தாயிரம் ரூபாவில்
வித்த மிதிவண்டி
நூறாயிரம் தாண்டி
வீறுநடை போடுதிங்கே!

கனகாலமாய் எங்கும்
கறள்பிடித்துக் கிடக்குதென
இலவசமாய் கொடுத்தவரும்
கலங்கியழும் மிதிவண்டி!

காற்றைப் பழுதாக்கும்
கனத்த வாகனங்கள்
போகவழியின்றி நிற்க
வேகம் பெறும் மிதிவண்டி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org